


பார்த்திபன் கனவு
அடுத்த இதழில் ஆரம்பம்
கல்கி
KALKI 1·8·1976
75 காசு


MONSIEUR
RAMSON
DAVARIN
DAVANJOY
ஸ்ரீ தாவணகெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்
தாவணகெரே, கர்நாடகம்.



# கல்கி




நள ௵ ஆடி 17
ஆகஸ்டு 1, 1976

ஒரு மரத்தில் சில கிளிகள் இருந்தன. ஒருவன் அவற்றிடம் சென்று 'நீங்கள் மொத்தம் எத்தனை பேர்' என்று கேட்டான். அதற்கு ஒரு கிளி சொன்னது:

"எங்களைப் போல் ஒரு மடங்கும், எங்களில் பாதியும் பாதியில் பாதியும் என்னையும் சேர்த்தால் மொத்தம் 100 கிளிகள்." அப்படியானால் அந்த மரத்தில் இருந்த கிளிகள் எத்தனை? பு. சுந்தரம்

விடை: 36 கிளிகள்.

## நகர் வலம்:

# சூரத்

“சாப்பிடுவதானால் சூரத்தில் சாப்பிட வேண்டும்; சாவதானால் காசியில் சாக வேண்டும்!'' என்று ஒரு பழமொழி சூரத்தில் வழங்குகிறது.

இதன் பொருள் சூரத்நகர் வாசிகள் அவ்வளவு செல்வச் செழிப்புள்ளவர்கள், விருந்தோம்பல் செய்வதில் அவ்வளவு ஆர்வம் உள்ளவர்கள் என்பது மட்டுமின்றி அத்தனை வகை வகையான இனிப்புப் பண்டங்கள் மிக ருசியாகச் செய்து படைப்பதில் வல்லுனர்கள் என்பதுமாகும். இது முற்றும் உண்மை என்பதனைத் தமிழ் நாட்டின் தென்கோடியில் இருப்பவர்கள்கூட 'சூரத்காரி' என்ற இனிப்புப் பண்டத்தை அறிந்திருப்பதிலிருந்தே ஊகித்துக் கொள்ளலாம்.


''ஹோட்டலில் இன்றைக்கு என்ன ஸ்வீட் ஸ்பெஷல்?'' என்று கேட்டால் ''சூரத்காரி'' என்று பதில் வரும். உடனே ''கொண்டுவா'' என்று சொல்லிவிட்டு சூரத் பெண்ணும் அழகாக இருப்பாள் போலும் என்று கற்பனை வனிதையை வரைந்து பார்த்துக்கொள்வதுண்டு. ஆனால் சூரத் நகர் வலம் செய்த போது இரண்டு விஷயங்கள் புரிந்தன. ஒன்று பண்டத்தின் பெயர் சூரத்காரியல்ல— சூரத்கார். அடுத்தது சூரத்காரி(ப்பெண்)கள் அப்படி யொன்றும் அழகானவர்கள் அல்ல.

தேச சுதந்திர வரலாற்றை அறிந்தவர்களா யிருந்தால் சூரத் என்றதும் அங்கு நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் நிகழ்ந்த கலாட்டா ஞாபகம் வரும். சரித்திர மாணவர்களுக்கு — முதன் முதலில் பிரிட்டிஷ்காரன் அடியெடுத்து வைத்தது சூரத் நகரில் தான்; அதுதான் அவனுக்கு இந்தியாவின் வாசலாக இருந்தது: இந்த வாசல் வழியாகத்தான் முந்நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஆகஸ்ட் மாதத்தில் 24ம் தேதி பிரிட்டிஷ்காரன் இந்தியாவில் நுழைந்தான் என்ற நினைவு வரும்.


அந்தச் சமயத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் வர்த்தகம் செய்யப் பதினைந்து ஆண்டுகளுக்கு அனுமதி பெற்று, 'ஹெக்டர்' என்ற கப்பலை அனுப்பி வைத்தனர். அதன் தலைவன் காப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ் நேரே ஆக்ரா சென்றான். ஜஹாங்கீர் மன்னனின் அரண்மனையில் பாரத நாட்டின் செல்வச் செழிப்பும் விஸ்தாரமும் கண்டவுடன் தனது இங்கிலாந்து ராணி எலிஸபெத் ஒரு குக்கிராமத்துக்கு அரசியாகத் தோன்றினளாம் அவனுக்கு!

அந்த நாளில் பொன்னும் மணியும் ஆடைகளும் வெளிநாட்டு வர்த்தகர்கள் சூரத்துக்கு வந்துதான் வாங்குவார்களாம். அதனாலே சூரத் செல்வச் செழிப்புள்ள நகரமாக விளங்கியது. ஆனால் நாளடைவில் அதன் முக்கியத்துவம் குறைந்து வந்தது.

இதற்கு முக்கிய காரணம் தப்தி நதி. சூரத் தப்தி நதியின் கரையிலிருக்கிறது. தப்தி நதியில் ஆண்டுதோறும் வெள்ளப் பெருக்கின் காரணமாக மண் அடித்து நதியின் ஆழம் குறைந்துவிடும். படகுகள் உள்ளே பிரவேசிக்க முடியாமல் போகும். மேலும் பழைய பாய்மரப் படகுகள் மாறிப் பெரிய நீராவிக் கப்பல்கள் வரத் தொடங்கியவுடன் சூரத் துறைமுகம் சற்றும் வசதியற்றதாகி விட்டது. பம்பாயின் இயற்கைத் துறைமுகம்தான் வசதியாய் இருந்தது. பிரிட்டிஷாரின் ஆளுகை நிலைநின்ற பின் சூரத்தின் கடல் வாணிபம் பம்பாய்க்கு மாறி விட்டது.









அந்த நாட்களில் போர்ச்சுக்கீஸியர், பிரஞ்சுக்காரர்கள், அர்மீனியர், பிரிட்டிஷார்—இப்படிப் பல தேசத்தார் சூரத்தில் வாழ்ந்து கடல் வாணிபம் செய்தனர் என்பதை அவரவர்களுக்கென்று தனித் தனியாக உள்ள சவ அடக்க இடங்கள் இன்றைக்கும் எடுத்துக் காட்டுகின்றன. சூரத்நகர் வீதிகளில் பல நாட்டு மக்கள் தங்கள் தங்கள் நாட்டு ஆடைகளை அணிந்து திரிவது எத்தகைய மனோரம்மியமான காட்சியாக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த நாட்களில் சூரத் எவ்வளவு பெரிதும் முக்கியமானதுமான நகரமாக இருந்தது என்பதை முன்னாள் கல்வி மந்திரி திரு கோவர்த்தன் தாஸ் சோகிவாலா வேறொரு விதமாக விளக்கினார்: ''இன்று அகமதாபாத் மிகப் பெரிய நகரமாகக் கருதப் படுகிறது அல்லவா? அந்த நாட்களில் அதன் கோட்டையின் பரப்பு எவ்வளவு தெரியுமா? 1300 ஏக்கர் தான். ஆனால் சூரத் கோட்டையின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? 2100 ஏக்கர்.''

முன் நாட்களில் நகரம் என்றால் கோட்டை தான். இப்பொழுது அந்தப் பழைய கோட்டையின் இடிந்த மதில் சுவர்கள் மட்டுமே மிஞ்சியுள்ளன.







★ பதினாறாம் நூற்றாண்டு சூரத் கோட்டை.

★ கலைப்படைப்பு : இலை மீட்டுக் கொள்ளும் நங்கை.

★ கூட்டுறவு ஜவுளி மார்க்கெட்.

★ நூறு ஆண்டுகளுக்கு முந்திய சரிகை வேலைப்பாடு.

நகரம் சரித்திரப் பெருமையையும், துறைமுகப் பெருமையையும் இழந்து விட்டாலும் வருவாயில் இன்னும் முன்னணியில்தான் நிற்கிறது.

குஜராத் மாநிலத்தில் அகமதாபாதுக்கு அடுத்தாற்போல் பெரிய நகரம் பரோடா என்பார்கள். அதன் விசாலமான சாலைகளும் அழகிய கட்டடங்களும், பெரிய தொழிற்கூடங்களும், கலகலவென்றிருக்கும் கடைவீதிகளும் யாருக்கும் பிரமிப்பூட்டுவதாகத்தான் இருக்கும். அதைப் பார்த்துவிட்டு சூரத்துக்கு வந்தால் ஒரு பெரிய கிராமத்துக்கு வந்தாற்போலிருக்குமே தவிர நகரம் என்ற உணர்ச்சியே ஏற்படாது. இருப்பினும் நகர மன்றத்து வருவாய் எவ்வளவு என்று பார்த்தால் பரோடாவை விட மிக அதிகம்!

இதற்குக் காரணம் ஏராளமான சிறு தொழில்கள் இந்நகரத்தில் இயங்குவதுதான்.

சூரத் நகரத்தின் சாலைகள் குறுகலாக இருக்கும். வீடுகள் பழைய கால வீடுகளாக இருக்கும். ஆனால் ஒவ்வொரு வீடும் ஒரு சிறு தொழிற்கூடம்.

சூரத், வைரங்களைப் பட்டை தீட்டுவதில் உலகப் புகழ் பெற்றிருக்கிறது. உலகின் பல பாகங்களிலிருந்தும் வைர வியாபாரிகள் வைரங்களைப் பட்டை தீட்டுவதற்குச் சூரத்துக்குத்தான் அனுப்பி வைக்கிறார்கள். இந்தப் பட்டை தீட்டுவதற்கான இயந்திரம் இரண்டாயிரத்தைந்நூறு அல்லது மூவாயிரம் ரூபாயாகும். ஒரு சக்கரம் சுழல்வது போல் சுழன்று கொண்டேயிருக்கிறது. அச்சுழற்சியின் வேகத்தில் வைரம் பட்டை தீட்டப்படுகிறது. ஆனால் பட்டை தீட்டும் திறன் இயந்திரத்தில் இல்லை. வைரக் கல்லைப் பற்றியுள்ள தொழிலாளியின் கையில் இருக்கிறது. ஒரு கடுகைவிடப் பெரிதும், கொத்தமல்லி விதையை விடச் சிறிதுமான ஒரு வைரக் கல்லில் 64 பட்டைகள் கூடத் தீட்டுவோம் என்று தொழிலாளிகள் சொன்னபோது அவர்

எஸ்.வி.எஸ்

களது கைத்திறனை வியக்காமல் இருக்க முடியவில்லை. 'கலைமகள் கரங்களில் வாழ்கிறாள்' என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கூறியது எவ்வளவு உண்மை!

வைரங்களுக்குப் பட்டை தீட்டும் தொழிலாளி ஒருசில ஆண்டுகள் கூலிக்கு வேலை செய்துவிட்டுப் பிறகு தானே சொந்தத்தில் தொழில் ஆரம்பித்து விடுகிறான், நான்கைந்து மிஷின்கள் வாங்கி! இது குஜராத்தியர் ரத்தத்தில் ஊறிப்போன பண்பு!

அதேபோல் வீட்டுக்கு வீடு ஜரிகை நூலிழை தயாரிப்பைக் காணலாம். பாரத தேசம் முழுவதற்கும் ஜரிகை நூல் சூரத் தான் விநியோகம் செய்கிறது எனலாம்.

இந்தச் சரிகைக்கு ஆதாரம் நல்ல பத்தரை மாற்றுத் தங்கம் அல்லது 24 காரட் தங்கம். மொரார்ஜி தேசாய் தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்தபோது ஜரிகை நூலிழைக்கும் தொழிலுக்கே அது பெருத்த அடியாக விழுந்தது. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பிழந்து தவித்தனர். இவ்வளவுக்கும், மொரார்ஜி தேசாய் சூரத் மக்களால் தில்லி மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்!

''மீண்டும் திரு மொரார்ஜி தேசாய் தேர்தலுக்கு நின்றால் வாக்களிப்பீர்களா?'' என்று ஒரு ஜரிகைத் தொழிலாளியைக் கேட்டேன்.

''எங்கள் தொழிலைப் பாதிக்கும் ஒரு செயல் செய்தார் என்பதற்காக அவருக்கு வோட்டுப் போடாமலிருந்து விடுவோமா? அவர் எவ்வளவு பெரிய தலைவர். அந்த மதிப்பு எங்களை விட்டுப் போகாது!'' என்றார். எனக்கு வியப்பாக இருந்தது.

சூரத்தின் மற்றொரு ஏகபோகத் தொழில் ஆர்ட் சில்க் துணிகள் வியாபாரம். சென்னை கிடங்குத் தெருவில் பேல் பேல்களாக வந்திறங்கி வியாபாரமாகும் ஆர்ட் ஸில்க் துணி முழுவதும் சூரத்திலிருந்து வருவதுதான். ஏன், நம் நாட்டின் பல பகுதிகளுக்கும் வெளி நாடுகளுக்கும் கூட சூரத்திலிருந்து போகிறது.

இந்தச் செயற்கைப் பட்டுத் துணி நெய்வதெல்லாம் மின்சார விசைத் தறிகளில்தான். கிட்டத்தட்ட 5000 விசைத் தறித் தொழிற் கூடங்கள் உள்ளன. கிட்டத்தட்ட 50,000 விசைத் தறிகள் இயங்குகின்றன. ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். நகர மன்றத்துக்கு 60 லட்சம் ரூபாய் வரியாக வழங்குகிறார்கள்.

இந்தச் சிறு தொழில் அதிபர்கள் தாங்கள் நெய்த செயற்கைப் பட்டுத் துணியை விற்கக் கூட்டுறவு முறையில் ஒரு டெக்ஸ்டைல் மார்க்கெட் கட்டியிருக்கிறார்கள். இங்கு 1030 கடைகள் உள்ளன. இத்தனை கடைகளும் இரண்டு அடுக்கு மாடிக் கட்டிடத்தில் அடங்கிவிட்டன. தரையில் 334, முதல் மாடியில் 348, இரண்டாவது மாடியில் 348. மாடிக்குப் போக மின்சார லிஃப்ட்கள். எந்தக் கடையிலிருந்தும் இன்னொரு கடைக்குப் போக ஏழு அல்லது எட்டு நிமிஷங்களுக்கு மேலாகாது.

இந்தக் கூட்டுறவு அங்காடிக் கட்டிடத்தில் இந்தியாவில் எங்கும் இல்லாத ஓர் அதிசயம்: 160 அடி உயரத்தில் ஒரு சுழலும் ஹோட்டல். மெள்ள 40 நிமிடங்களில் ஒரு முறை சுற்றும். லிஃப்டில் 160 அடி ஏறி அந்தச் சுழலும் ஹோட்டல் நாற்காலியில் உட்கார்ந்து விட்டால், காப்பியோ, டீயோ, தின்பண்டங்களோ சுவைத்துக் கொண்டே இயற்கை வனப்பையும், சூரத் நகரத்தையும் அனுபவிக்கலாம்.

சூரத்தின் மற்றொரு நவீன அதிசயம் அங்குள்ள ''தர்ப்பண்'' என்ற சினிமாத் தியேட்டர். 'தர்ப்பண்' என்றால் நிலைக்கண்ணாடி. அதில் விழும் பிம்பத்தைப் பிரதிபலிக்கக் கூடிய பளபளப்பான வெள்ளி போன்ற உலோகத்தினால் திரை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த உலோகத் தகட்டினை இத்தாலியிலிருந்து வரவழைக்க வேண்டியிருந்ததாம். இந்தத் தகட்டினால் நிர்மாணிக்கப்படும் திரையே பல லட்சம் ரூபாய் ஆகிறதாம். இந்தத் திரையில் விழும் ஒளிச் சித்திரத்தை இன்னொரு திரையில் அதே அளவில் பிரதிபலிக்கச் செய்யக் கூடுமாதலால் ஒருமுறை புரொஜக்ட் செய்த படத்தை இரண்டு பங்கு மக்கள் பார்க்க வசதி ஏற்படுகிறது. இதற்கேற்பத் தியேட்டர் பெரிதாக மாடிக் கட்டடமாக இருக்க வேண்டும். சூரத் தர்ப்பண் தியேட்டரில் ஒரு காட்சியை ஒரே சமயத்தில் சுமார் மூவாயிரம் பேர் பார்க்க முடிகிறது. கீழ் தியேட்டரில் இரண்டாயிரம் பேர், மாடித் தியேட்டரில் ஆயிரம் பேர். ஆனால் புரொஜக்டர் மட்டும் ஒன்று!

மற்றொரு அதிசயம் கூட்டுறவுத் துறை பால் உற்பத்தி. 350 உறுப்பினர்களைக் கொண்ட பால் பண்ணை வெகு சிறப்பாக நடைபெறுகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகக் கூட்டுறவு முறையில் பால் பண்ணை நடத்தத் தொடங்கியது சூரத்தில்தான் என்று அதன் தலைவர் திரு ஆஷா பாய் பட்டேல் சொல்கிறார். அவரோடு யார் வாதாட முடியும்! இப்பால் பண்ணை வழங்குவதெல்லாம் எருமைப் பால்தான். ஓர் எருமையின் விலை ரூ. 2000 முதல் 3000 வரை. 3000 எருமைகள் ஒரே இடத்தில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. ஒரு நாளைக்கு 60,000 லிட்டர் பால் விநியோகமாகிறது. அதனால் தான் சூரத்தில் பாலில் செய்யப்படும் பேடா, பால் கோவா, சூரத்காரி ஆகியவை தனியான ருசியோடு இருக்கின்றன.

சூரத் நகர மன்றம் ஓர் அருமையான (மியூஸியம்) பொருட்காட்சி நடத்தி வருகிறது. இது சூரத் நகர பழம் பெருமைகளையும், கலைத் திறன்களையும் சிற்ப சித்திர

---



## தலைமுறையின் தலையெழுத்து!

சிறியவர்களாக இருக்கும்போது, 'பெரியவர்களுக்கு மரியாதை கொடு, எதிர்த்துப் பேசாதே' என்கிறார்கள்; பெரியவர்களானபோதோ, 'சிறியவர்களுக்கும் மதிப்பு கொடு; எதிர்த்துப் பேசாதே' என்கிறார்கள். இன்றையத் தலைமுறையின் தலை எழுத்து இது. - மாரிஸ் லீடர் - ஆர். எம்.

வேலைப்பாடுகளையும் மிக நேர்த்தியாக எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது. இங்கு ''பஞ்ச முக மகாதேவர்'' என்ற ஒரு வண்ணப் படம் இருக்கிறது. ஐந்து முகங்கள் கொண்ட ஈசனின் ஓவியம். ஐந்து முகங்கள் என்றால் கண்கள் பத்து இருக்க வேண்டுமல்லவா? ஐந்துதான் இருக்கின்றன. இருந்தாலும் முகத்துக்கு இரண்டு கண்கள் இருப்பதுபோல் ஐந்து முகங்களும் காண்கின்றன. கலைஞனின் இந்தக் கைநேர்த்தியைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை!

இன்னொரு சிற்பம். அதுவும் பிரபலமானது. கண்ணன் குழலூதிக் கொண்டே புன்முறுவல் பூப்பது போன்ற சிற்பம். இச்சிற்பம் மிகவும் பிரசித்தமானது. இதன் போட்டோவை எல்லா இந்திய சிற்ப நூல்களிலும் காணலாம். அந்தப் போட்டோவைக் காண்பவர்கள் 'ஏன் கண்ணன் இப்படி அசடு வழிகிறான்?' என்று நினைப்பார்கள். அசல் சிற்பத்தை அங்கு பார்த்தவுடன் அப்படியே மெய் சிலிர்த்துப் போனேன். 'என்ன அற்புதமான மோகனப் புன்னகை! புகைப்படம் அசலுக்கு எவ்வளவு துரோகம் செய்து விட்டது' என்று எண்ணிக்கொண்டேன்.

''சூரத்தின் எல்லா முக்கிய இடங்களையும் உங்களுக்குக் காண்பித்து விட்டேன்!'' என்றார் உள்ளூர் நண்பர்.

''இல்லை!'' என்றேன். ''சூரத் காங்கிரஸ்—கலாட்டா காங்கிரஸ் நடந்த இடத்தைக் காட்டவில்லையே!''

ஊர் காட்ட வந்த நண்பருக்கு இருபத்தைந்து வயதுதான் இருக்கும். அதனால் ''எனக்கே தெரியவில்லையே!'' என்றார்.

''அப்படியானால் இன்று காலை பார்த்தோமே மாஜி கல்வி மந்திரி, அவரைக் கேட்போம். அவர் எழுபது வயதான காங்கிரஸ்காரர்'' என்றேன்.

அவரை விசாரித்தபோது, ''ஓ அதுவா? இன்று அந்த இடம் ''நேரு பார்க்'' என்ற பெயரில் ஒரு பூங்காவாக விளங்குகிறது'' என்று சொன்னார். அந்த இடத்துக்கு அழைத்துக்கொண்டு போகச் சொன்னேன். அந்தப் புனித பூமியை வணங்கிவிட்டு வந்தேன்.

இந்த சூரத் காங்கிரஸைப் பற்றி எச். டபிள்யூ. நெவின்ஸன் என்பவர் '1907–8-ம் ஆண்டுகளில் 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை நிருபராக இங்கு இருந்தபோது எழுதினார். அதைச் சமீபத்தில் படிக்க நேரிட்டது. அதன் சாராம்சம் இதுதான்:

சூரத் காங்கிரஸ் நடப்பதற்கு முந்திய காங்கிரஸ் கல்கத்தாவில் நடைபெற்றது. அங்கு ஒரு தீர்மானம் நிறைவேறியது.

''வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்கம் நடத்திய 'பகிஷ்கார இயக்கம்' மிகவும் நியாயமானது.''

இதனை சூரத்துக்குக் கொண்டு வரும்போது மிதவாதிகள், ''வங்காளப் பிரிவினையை எதிர்த்து வங்கம் நடத்திய 'அந்நியப் பொருள் பகிஷ்கார இயக்கம்' நியாயமானது என்று இந்தக் காங்கிரஸ் கருதுகிறது!'' என்று திருத்தியிருந்தனர்.

முதலில் குறிப்பிட்ட 'பகிஷ்கார இயக்கம்' என்ற சொற்களுக்குள் அந்நியப் பொருட்கள், அந்நிய நீதி மன்றம், அந்நியர்கள் உத்தியோக நியமனம், அந்நிய ஆட்சி, அந்நிய வரிகள் எல்லாமே அடங்கும். இவ்வளவு விரிந்த பொருள் கொண்ட தீர்மானத்தை 'அந்நியப் பொருட்களுக்கு மட்டும் பகிஷ்காரம்' என்று மிதவாதிகள் குறுகிய அர்த்தம் கற்பித்தவுடன் திலகர், அரவிந்த கோஷ் போன்ற தீவிரவாதிகளால் அதனைப் பொறுக்க முடியவில்லை.

பத்தாயிரம் பேர் குழுமியிருந்த அந்த மகாநாடு ஒருமுகமாக எதிர்ப்புத் தெரிவித்ததாம்!

தேசம் சுதந்திரப் பாதையில் வேகமாக நடை போடத் தொடங்கிவிட்டது என்பதை நாட்டுக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் உணர்த்தியது சூரத் மகாநாடு.

தேசபக்தர்களுக்கு அவ்வகையில் சூரத் ஒரு புனித க்ஷேத்திரம்.





பாடியாலாவில் பத்து வயதுச் சிறுமி ராதிகா நீச்சல் போட்டியில் 31 எண்கள் பெற்றுத் தமிழகத்தின் பெருமையை உயர்த்தினாள். இந்தப் போட்டிகளில் தமிழகத்துக்கு இரண்டாவது ஸ்தானம் கிட்டியது. இரு வெள்ளிப் பதக்கங்களும், மூன்று வெண்கலப் பதக்கங்களும் பெற்ற சிறுமி ராதிகா சென்னை சர்ச் பார்க் கான்வென்ட் மாணவி. தமிழக நீச்சல் பயிற்சியாளர் ராமசாமியிடம் இக்கலையில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்கிறார்.

மாணவன் டி. ஜி. செந்தில் இரு தங்கப் பதக்கங்களும், ஒரு வெண்கலப் பதக்கமும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

குண்டுமணி.

xxxxxxx:xxxxxxxx:xxxxxxxx


41 மிஷனரி கல்லூரிகள்
மாணவனே! என்னை மன்னித்து விடு! ஆண்டவனே! எனக்கு ஏன் அறிவாலயங்களைப் பூட்டும் அவல ஜென்மத்தைக் கொடுத்தாய்?
ஒருவேளை நான் பதவியில் இல்லை என்றால் என்னை விடச் சிறந்த இவர் பதவியில் இருப்பார்!
அர்ஸ்
அர்ஸ்
'நான் சுலபத்தில் பதவியை விட்டு விலகி விட மாட்டேன்!' — கர்நாடக முதல்வர்
ஆறு மனமே ஆறு
இந்த ஆண்டவன் கட்டளை ஆறு!

# இருபதில் ஒன்று!

**கல்கி** மலர் 36 இதழ் 1

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

**அ**ண்ணலின் தலைமையில் காங்கிரஸ் அந்நியத் துணிப் பகிஷ்காரம் நடத்தியது அண்மைக் கால சரித்திரம். அயல் நாட்டுத் துணிகளை வாங்கி அவற்றை விற்கும் கடைக்கெதிரேயே குவித்துக் கொளுத்தியதும், அந்தத் தீ வானை நோக்கி உயர உயர ''வந்தே மாதரம்'' என்ற குரல் விண்ணதிர ஒலித்ததும் சமீபத்திய நிகழ்ச்சி. நாடெங்கும் வேள்வியாக இப்படி நடக்க, அந்த யக்ஞத்தைக் கலைக்கப் போலீஸார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்ய, தியாகிகள் இரத்தம் சிந்தியதையும் சிறையில் வாடியதையும் அதற்குள் மறந்து விட்டோம்!

இன்று திரும்பின பக்க மெல்லாம் அயல்நாட்டு மோகம் தலைவிரித்தாடக் காண்கிறோம். ''புதுக் கடிகாரமா, ஸார்? ஸ்விஸ் மேக்கா? ஸீக்கோவா?''— எத்தனை இடங்களில் இந்தக் கேள்விகளைக் கேட்க நேர்கிறது! ''இது ஃபாரின் நைலக்ஸ். இங்கேயும் கிடைக்கிறது. ஆனால் இந்த 'ஷைனிங்' இருப்பதில்லை.'' — இப்படிப் பெருமையடித்துக் கொள்ளும் எத்தனையோ பெண்மணிகளை நாம் நாள்தோறும் பார்க்கவில்லையா?

ஏன் இப்படி ஆகிவிட்டோம்? நினைத்துப் பார்த்தால் ஒருபுறம் ஆச்சரியமாய் இருக்கிறது; மறுபுறம் வெட்கமாயும் இருக்கிறது.

நமது இந்த அந்நிய மோகத்தின் விளைவு கள்ளக் கடத்தில் வந்திறங்கும் ஏராளமான சரக்குகள். சங்கிலித் தொடர் போன்ற உடன் விளைவுகள்: நமது நாட்டில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது; சுங்க வரி ஏராளமாய் நஷ்டமாகிறது. இவற்றை விடப் பெரிய ஆபத்து, கள்ளக் கடத்தல் சரக்குக்கு நாம் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும் கறுப்புப் பணமாக மாறுவதுதான்! கறுப்புப் பணப் பெருக்கம் நமது தேசத்தின் பொருளாதார அடிப்படையையே அசைக்க வல்லது.

நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகு கள்ளக் கடத்தலை ஒழிப்பதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்னை விட அதிகமான தடவைகளில் கள்ளக் கடத்தல்காரர்களை அதிகாரிகள் பிடித்திருக்கிறார்கள். ஆனால் முன்னை விடக் குறைவான மதிப்புடைய பொருள்களே சிக்கியுள்ளன. உதாரணமாக 1975 பிப்ரவரியில் 4841 தடவைகளில் கள்ளக் கடத்தல் பொருள்களைக் கைப்பற்றினார்கள் அதிகாரிகள். அவற்றின் மதிப்பு ரூ. 536 லட்சம். 1976 பிப்ரவரியிலோ 5483 தடவைகளில் கைப்பற்றிய பொருள்களின் மதிப்பு ரூ. 267 லட்சம்தான். இதிலிருந்து கள்ளக்கடத்தல்காரர்கள் இங்கு கண்காணிப்பு தீவிரமாகியிருப்பதையும் தண்டனை கடுமையாகியுள்ளதையும் உணர்ந்து பதுங்கத் தலைப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

கணிசமான இந்த வெற்றியைப் பெறக் கள்ளக் கடத்தல் தடுப்பு அதிகாரிகள் நடுக் கடலில் நடத்தியுள்ள சாகசப் போர்கள் மெய்சிலிர்க்க வைப்பன. இத்தனைக்கும் இவர்களிடம் துரிதமாகச்செல்லும் விசைப்படகுகள் அதிகம் கிடையாது. வேறு நவீன உபகரணங்களும் மிகக் குறைவு. ஆயினும் என்ன? இவர்கள் கள்ளக் கடத்தல்காரர்களை வெற்றி கொண்டு, அவர்களது விசைப் படகுகளைக் கைப்பற்றி, அவற்றையே தமதாக்கிக் கொண்டு, புது வேட்டை தொடங்கினார்கள்! இந்த விதமாக நாற்பத்தொரு விசைப் படகுகள் இன்று அதிகாரிகளிடம் கைமாறியுள்ளன!

அதிகாரிகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதில் தற்போது அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. நார்வே நாட்டிலிருந்து இருபது அதிவேகப் படகுகள் தருவிக்கப்பட்டுள்ளன. மேற்குக் கடற்கரை முழுமையாகவும் தமிழ் நாடு கடற்கரையோரமாகவும் அதிகாரிகள் ரேடியோத் தொடர்பு கொள்ள ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

''கள்ளக் கடத்தல்காரர்களின் சொத்தைப் பறிமுதல் செய்ய விசேஷச் சட்டம்'' என்பது இருபது அம்சத் திட்டத்தில் ஒன்றாக இடம் பெற்றதாலேயே இத்தனை முன்னேற்றம் காண முடிந்தது.

கள்ளக் கடத்தலை ஒழிப்பதில் மனிதாபிமானப் பணியும் உண்டு. கள்ளக்

கடத்தல் மன்னர்கள் வேறு; அவர்களிடம் வயிற்றுப்பாட்டுக்காகச் சொற்ப ஊதியத்துக்குச் சேர்ந்து, பேராபத்துக்களைச் சந்திக்கும் பாமரர் வேறு. இருவரையும் சம நோக்கில் பார்ப்பதற்கில்லை. பின்னவர் பிடிபட்டதும் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தும் கடமை அரசைச் சார்கிறது. கோவாவிலும் குஜராத்திலும் மாநில அரசுகள் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருந்த ''சில்லறை''ப் பேர்வழிகளுக்கென்று சிறு தொழில்களைத் தொடங்கத் திட்டமிட்டிருக்கின்றன. வயிற்றுப் பிரச்னை தீர்ந்தால் பிறகு அவர்கள் ஏன் கடத்தல் மன்னர்களிடம் கைகட்டி நிற்கப் போகிறார்கள்?

இவையெல்லாம் மகிழ்ச்சியளிப்பன என்றாலும் கடத்தல் மன்னர்கள் இருக்கும்வரை கள்ளக் கடத்தலும் நடக்கும். ''காட்டிக் கொடுப்பவர்களுக்கு நாலு லட்சம் வெகுமதி'' என்ற ''பெருமை''யைச் சுமந்து கொண்டு இவர்கள் — 105 பேர் — தலைமறைவாக வாழ்கிறார்கள்; அல்லது ஹாங்காங்கிலும் லண்டனிலும் பாகிஸ்தானிலும் பாங்காக்கிலும் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். இருக்கிற இடத்தில் இருந்தபடியே இவர்கள் கள்ளக் கடத்தல் வியாபாரத்தைத் தொடரக் கூடியவர்கள். இவர்கள் கொட்டம் அடியோடு அடங்க வேண்டுமானால் ஒரே வழிதான் உண்டு. அது நம்முடைய அந்நியப் பொருள் மோகம் குழி தோண்டிப் புதைக்கப்படுவதுதான்.

அதைச் செய்வோம். நமது தேசத்திலேயே புதுமைப் பொருள்களின் உற்பத்தியும் தரமும் அயல்நாட்டுச் சரக்குடன் போட்டியிடுவது போல் சீக்கிரமே உயரும். அந்தக் காலம் வரும்வரை உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவோம்.

# நன்றி கொல்வது நன்றன்று!

**ப**சு வதைத் தடுப்பு பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளைச் சமர்ப்பிக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. முதலில் ஜஸ்டிஸ் ஏ. கே. சர்க்காரும் தற்போது ஜஸ்டிஸ் ஜி. கே. மிட்டரும் அதன் தலைவர்கள். பசு வதைத் தடுப்பு மட்டுமின்றி, விவசாய நோக்கில் கால்நடை அபிவிருத்தி, வயதான பசுக்களையும் காளைகளையும் பாதுகாப்பது ஆகியவை பற்றியும் ஆராயப் பணித்தது அரசு.

ஒன்பதாண்டுகளாகியும் இந்தக் கமிட்டி இதுவரையில் தனது சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கவில்லை! ஓர் இடைக்கால அறிக்கையையாவது கொடுங்கள். அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறோம் என்று மத்திய அரசு தற்போது கேட்டிருக்கிறது.

நமது தேசத்தில் பசுக்களும் காளைகளும் தொன்று தொட்டுத் தெய்வங்களாகப் பூஜிக்கப்பட்டு வந்துள்ளன. காமதேனுவைத் தொழாத சுரமா? நந்திகேசுவரரை வணங்காமல் லிங்கக் கருவறையை நெருங்க முடியுமா?

எத்தனையோ மன்னர்கள் கால்நடைகளின் பாதுகாப்புக்காக எவ்வளவோ செய்திருக்கிறார்கள். அவர்களில் ரஜபுதன மன்னர் கும்பராணாவின் மனநிலையைப் பின்வருமாறு வர்ணிக்கிறார் திரு ரா. கணபதி தமது ''காற்றினிலே வரும் கீதம்'' என்ற நூலில்:

''மக்கள் உண்பதற்காக வயலில் உழுபவை மாடுகள். மக்கள் உண்டது போக எஞ்சிய வைக்கோலைத் தின்னும் தியாகிகள். அந்த வைக்கோலையும் அமுதப் பாலாக்கித் தன் கன்றுகளுக்கு மட்டுமின்றி உலகுக்கும் பொழியும் உத்தம ஜீவன்கள் அல்லவோ பசுக்கள்? அவற்றைவிடப் பூஜைக்குரியன எவை உண்டு? 'ஆகா! ஆயிரமாயிரம் பசுக்களில் ஒவ்வொன்றையும் தனித் தனியே அர்ச்சிக்க இயலவில்லையே' என்று ஆதங்கமடைந்தது ராணாவின் இதயம்.

''அவ்வளவு பசுக்களையும் சித்தத்தால் ஒன்றாக்கி மனக் கோயிலில் வைத்துப் பூஜித்தான். நன்றியும் அன்பும் நிறைந்த அவனது உள்ள அரங்கில் எல்லாப் பசுக்களுக்கும் ஆன்மாவாகிய காமதேனுவே கம்பீரமாகக் காட்சி தந்தான்!''

ராஜாஜி சிந்தனை

## அறிவு வழியும் அன்புப் பாதையும்

நான் உங்களிடம் செய்துகொள்ளும் வேண்டுகோள்: எந்தச் சேவை செய்தாலும் அன்பு நெறியிலிருந்து அணுவளவும் பிறழாதீர்கள். சண்டை சச்சரவு வழியைப் பின்பற்றாதீர்கள். எது சரி எது தவறு என்று ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். எத்துணை நல்ல சீர்திருத்தமானாலும் அதைச் செய்து முடிக்கப் பலாத்காரத்தைப் பயன்படுத்தாதீர்கள். அறிவு புகட்டும் வழியையே பின்பற்றுங்கள். பலாத்காரம் மூலம்தான் மாறுதல் செய்ய முடியும் என்று எண்ணுவதற்குக் காரணம் மனிதப் பண்பில் நம்பிக்கை இல்லாததே ஆகும். நாம் பலவீனமாக இருக்கும்போதுதான் பலாத்காரத்தைப் பற்றிச் சிந்திக்கிறோம். நீங்கள் தவறான காரியம் செய்தால் கூட நான் உங்களிடம் அறிவு புகட்டும் முறையையே கையாண்டு வந்திருப்பதை அறிவீர்கள். உதாரணமாக யாரேனும் புகை குடித்தால், அது தீயது என்று அறிவு புகட்டவே முயன்று வந்திருக்கிறேன். இதேபோல்தான் சமூகப் பழக்க வழக்கங்கள் விஷயத்திலும் நடந்து கொள்ள வேண்டும். குழந்தைகள் பாடம் படிக்காவிட்டால் பலாத்காரம் உபயோகிப்பதால் யாதொரு பயனும் ஏற்படாது. அன்பினால்தான் அவர்களைத் திருத்த வேண்டும்.

—''ஜாதிகள்'' என்ற கட்டுரையில்



# ஜீவகாருண்யம் 14

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

தேவர்கள், அசுரர்கள், மநுஷ்யர்கள் எல்லாருமே பிரம்மாவுக்கு ஒரே மாதிரி குழந்தைகள்தாம். பரமாத்மாவுக்குப் பலவிதமான லீலை வேண்டியிருக்கிறது; நல்லது, கெட்டதுகளை மோதவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்காக அவர் பிரம்மாவைக் கொண்டு தேவ ஜாதி, அசுர ஜாதி, மநுஷ்ய ஜாதி முதலானவைகளை சிருஷ்டிக்கச் செய்கிறார்; இந்த மூன்று ஜாதிக்கும் நல்லதைச் சொல்ல பிரம்மா கடமைப் பட்டிருக்கிறார்.

ஒரு சமயம் தேவர்கள் எல்லோரும் பிரம்மாவிடம் போய், ''எங்களுக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் பண்ணுங்கள்'' என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

பிரம்மா, ''த'' என்ற ஒரே அக்ஷரத்தை மட்டும் சொல்லி விட்டு, ''இதுதான் உபதேசம். இதற்கு அர்த்தம் புரிந்துகொண்டீர்களா?'' என்றார்.

நம்மிடத்திலே இருக்கிற தப்பு நமக்கே நன்றாகத் தெரியும். ஆனதால் யாராவது ரொம்ப சூக்ஷ்மமாக, சூசனையாக, எடுத்துக் காட்டினால் கூட உடனே நாம் புரிந்துகொண்டு விடுவோம்.

இந்த ரீதியில் தேவர்களுக்கு, பிரம்மா ''த'' என்று சொன்னவுடனேயே அதற்கு இன்னதுதான் அர்த்தமாக இருக்கும் என்று புரிந்து விட்டது. தேவர்களிடம் இருக்கிற பெரிய கோளாறு இந்திரிய நிக்ரஹம் (புலனடக்கம்) இல்லாததுதான். தேவலோகம் ஆனந்த லோகமல்லவா? அங்கே ஸுகவாஸிகளாக மனம் போனபடி இருப்பது தேவர்களின் வழக்கம். ஆனபடியால், ''இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றுதான் பிரம்மா குறிப்பால் உணர்த்துகிறார், hint பண்ணுகிறார் என்று புரிந்து கொண்டார்கள்.

''புரிந்து விட்டது. 'தாம்யத' என்று தாங்கள் உபதேசித்து விட்டீர்கள்'' என்று பிரம்மாவிடம் சொன்னார்கள்.

தமம், சமம் என்று இரண்டு உண்டு. தமம் என்பது புலனடக்கம். அதற்கும் மேற்பட்டது சமம். சமம் என்பது மனோ நிக்ரஹம் — மனஸையே அடக்கி விடுவது. சமம் தமம் முதலான ஆறு குணங்களை ''சமாதி ஷட்கஸம்பத்'' என்று பெயரிட்டு, ஸாதகர்களுக்கெல்லாம் நம் பகவத்பாதாள் விதித்திருக்கிறார். சமத்தோடு கூட, அதாவது மனம் அடங்கி இருக்கிற நிலைதான் சாந்தி. மனம் அடங்காவிட்டாலும் கூட இந்திரியங்களையாவது 'தமம்' என்று கட்டுப்படுத்துவது தாந்தி.

''தாம்யத'' என்றால் ''தமத்தைச் செய்யுங்கள்; அதாவது இந்திரியங்களைக் கட்டுப்பாடு (control) பண்ணிக் கொள்ளுங்கள்'' என்று அர்த்தம்.

பிரம்மா 'த' என்று சொன்னது 'தாம்யத' வுக்குச் சுருக்கம் (abbreviation) என்று தேவர்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

ஒரு முழு வார்த்தையைச் சொல்வதை விட அதில் முதல் எழுத்தை மட்டும் சொன்னால் அதற்கு ஜாஸ்தி சக்தி இருக்கிறது. சர்ச்சில் கூட ''வி ஃபார் விக்டரி'' என்று சொல்லி, எங்கே பார்த்தாலும் இந்த ''வி''யை மந்திரம் மாதிரி பரப்பினார்.

''நீங்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டது சரிதான்'' என்று சொல்லி பிரம்மா தேவர்களை அனுப்பினார்.

மநுஷ்யர்களுக்கும் இதேமாதிரி உபதேசம் வாங்கிக் கொள்கிற ஆசை வந்தது.

அவர்களும் பூர்வ காலத்தில் பிரம்மாவை நெருங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அதனால் அவரிடம் போய், ''உபதேசம் பண்ணுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

மறுபடியும் பிரம்மா ''த'' என்ற ஒரு சப்தத்தை மட்டும் சொன்னார்.

மநுஷ்யர்களுக்கும் தங்கள் குற்றம் உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருந்ததால், தங்களுக்கு அத்யாவசியமான உபதேசம் இன்னது என்று பளிச்சென்று புரிந்து கொண்டார்கள்.

''அர்த்தம் தெரிந்ததா?'' என்று பிரம்மா கேட்டவுடன்,





---

"தெரிந்து கொண்டோம் — 'தத்த' என்று உபதேசம் பண்ணியிருக்கிறீர்கள்" என்றனர்.

"தத்த" என்றால் "கொடு", "தானம் பண்ணு" என்று அர்த்தம். 'தத்தம் பண்ணுவது', 'தத்து கொடுப்பது' முதலான வார்த்தைகள் வழக்கத்தில் கூட இருக்கின்றனவே?

"ஆமாம், நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்" என்று பிரும்மா மநுஷ்ய ஜாதியிடம் சொல்லி அனுப்பி வைத்தார்.

தேவர்களும், மனிதர்களும் உபதேசம் வாங்கிக் கொண்டால் அசுரர்கள் மட்டும் சும்மாயிருப்பார்களா? அவர்களும் பிரம்மாவிடம் வந்து உபதேசம் கேட்டார்கள். அவரும் பழையபடி அந்த 'க்ரிப்டிக்' (சுருக்கமான) "த" உபதேசத்தையே பண்ணினார். "புரிந்ததா?" என்று கேட்டார்.

அசுரர்கள் உடனே, "புரிந்து விட்டது — 'தயத்வம்' என்று உபதேசம் பண்ணி விட்டீர்கள்" என்றனர்.

பிரம்மாவும் ஆமாம் என்றார்.

'தயத்வம்' என்றால் 'தயையோடு இருங்கள்' என்று அர்த்தம்.

இரக்கமில்லாதவர்களைத்தானே அரக்கர் என்று சொல்லியிருக்கிறது? கொஞ்சம் கூட தயா தாக்ஷிண்யம் இல்லாத க்ரூர ஸ்வபாவம் தான் அசுரர்களின் இயற்கை. அதனால் "த"வுக்கு இப்படி அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

இடி இடிக்கிற போது "த த த" என்கிற மாதிரி சப்தம் கேட்கும். "தாம்யத — தத்த — தயத்வம்" என்பதுதான் அந்த மூன்று "த".

இது பிருஹதாரண்ய உபநிஷத்தில் வருகிற கதை.

நம் சங்கர பகவத் பாதாள் இதற்கு பாஷ்யம் எழுதுகிற போது, "இங்கே தேவர், அசுரர் என்று சொன்னதெல்லாரும் மநுஷ்யர்களுக்கு வேறல்லர். மனிதர்களிலேயே எல்லா நல்ல குணமும் இருந்தும் புலனடக்கம் இல்லாதவர்கள் தேவர்கள்; கொடுக்கிற சுபாவமேயில்லாமல் லோப குணத்தோடு இருப்பவர்கள் அசல் மநுஷ்யர்கள்; ஹிம்சை பண்ணிக் கொண்டு க்ரூரமாக இருக்கிற மனிதர்களே அசுரர்கள். ஆனதால் மூன்று உபதேசங்களும் நமக்கே ஏற்பட்டவை என்றுதான் நாம் அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

வாஸ்தவந்தான். ஆனாலும் இங்கே சொல்லியிருப்பதிலிருந்து மனித வர்க்கத்துக்கு என்று இருக்கிற பெரிய குறைபாடு லோபித்தனம் தான் என்று தெரிகிறது. இந்திரிய நிக்ரஹம் பண்ணினவர்களாகவும், க்ரூர ஸ்வபாவம் துளிக்கூட இல்லாமலும் கூட மனிதர்கள் தங்களை உயர்த்திக் கொண்டு விடலாம். ஆனால் இப்படிப்பட்டவர்கள் கூடப் பொருளை எடுத்துக் கொடுப்பது, தானம் செய்வது என்றால் கொஞ்சம் பின்னேதான் நிற்கிறார்கள். பொருளில் பற்றை விடுவது தான் மநுஷ்யனுக்கு மகா கஷ்டமாக இருக்கிறது. இதனால்தான் மனிதனுக்கு முக்கியமாக "தத்த — தானம் பண்ணு" என்று வேதத்தின் முடிவில் இருக்கப்பட்ட உபநிஷத்தே உபதேசம்பண்ணுகிறது. (தொடரும்)

---

**[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]**

# பாலமுரளியும் பெரியமுரளியும்

பாலசுப்பிரமணிய சங்கீத சபா ஒரு பாலமுரளியையும் ஒரு பெரிய முரளியையும் அண்மையில் பாராட்டியது !

திரு பாலமுரளி அனைவருக்கும் தெரிந்தவர்தாம். அவர் சங்கீத நாடக அகாடமியின் கௌரவ உறுப்பினராக ஏற்கப்பட்டதற்கு வாழ்த்துத் தெரிவித்தது மேற்படி சபா. அன்று பாலமுரளியின் பிறந்த நாள்கூட ! அவர் வயது என்ன என்பதைத் தெரிவிக்கவில்லையே என்று ஏங்கின சில ஏடுகள். அவர் வயதும் சங்கீத ஞானமும் அதிகரிக்க அதிகரிக்க, பாலகனைப் போன்ற தோற்றமும் குரலினிமையும் மாறாமல் இருக்கின்றனவே அதுவல்லவா முக்கியம் !

பெரிய முரளி என்று குறிப்பிட்டது திரு ஹரிபிரசாத் சௌராஸியாவை. அவரது புல்லாங்குழல் ரொம்பப் பெரிது. ஒரு வாக்கிங் ஸ்டிக் அளவில் கொஞ்சம்தான் கம்மி ! அவருடன் அன்று இணைசேர்ந்து வாசித்தார் ரமணி. "ஜுகல் பந்தி". போதாக்குறைக்கு இவர்களைக் கனகச்சிதமாக அறிமுகப்படுத்தி வைத்த திரு ஒய். ஜி. துரைசாமி மைக்கை அலாக்காகத் தூக்கிக் கொண்டு புல்லாங்குழல் வாசிப்பது போலவே நின்றார் !

ஒரு கச்சேரி ஆரம்பத்திலேயே களை கட்டிவிட்டது. எடுத்த எடுப்பிலேயே அபாரமாய் அமைந்துவிட்டது என்று கூற வேணுமானால் ஜூலை 18ந் தேதி நிகழ்ந்த இந்தக் கச்சேரியைத் தாராளமாகச் சொல்லலாம்.

சொக்க வைத்துவிட்டார் சௌராஸியா. அதற்கு முன்பாக அவரே ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் கம்பீர எழிலில் சொக்கிவிடுகிறார். இரண்டறக் கலந்த வாசிப்பு கிளுகிளுக்க வைத்துவிட்டது. வெறும் ஹிந்துஸ்தானி சங்கீதமாக மட்டும் இருந்திருந்தால் அவ்வளவு ஈடுபாடு ரசிகர்களுக்கு ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகம்தான். ஹம்சத்வனி, ஹிந்தோளம், மோகனம் என்று ரமணி கர்நாடக சுத்தமாக வாசிக்க அவற்றுக்கு இணையான இந்துஸ்தானி ராகங்களை சௌராஸியா வாசிக்க ஒப்புநோக்கி மகிழ்ந்த ரசிகர்களுக்கு ஒரே பிரமிப்பும் ஜிலு ஜிலுப்புமாக இருந்தது.

மோகனத்தை மையமாகக் கொண்டு நிகழ்ந்த ராகமாலிகை ஸ்வரப் பிரஸ்தாரத்தில் பல்வேறு அழகிய கர்நாடக, இந்துஸ்தானி ராகங்களை ஜீவ களையுடன் சித்திரித்துக் காட்ட இருவருக்கும் வாய்ப்பிருந்தது. ஒவ்வொரு முறை மோகனத்தில் திரும்பி வந்து நின்ற போதும் மெய் சிலிர்த்து அடங்கியது. ரமணியின் ஆனந்த பைரவி அளித்த ஆனந்தம் அளவிடற்கரியது.. போல்ரே பபீ ஹரா என்ற பாடல் மூலம் இங்கே மிகப் பிரபலமடைந்துவிட்ட மியான் மல்ஹார் ராகம் சௌராஸியாவின் ஆற்றலுடன் இணைந்து ரசிகர்களை மயக்கியது.

சௌராஸியா இவ்வளவு தூரம் ரசிகர்களைக் கவர்ந்ததில் வியப்பொன்றும் இல்லை என்பது புரியும், அவர் குரு ஸ்ரீமதி அன்னபூர்ணா தேவி என்பதை அறிந்தால். இவர் மாமேதை அலாவுதீன்கான் அவர்களின் புதல்வி. ரமணி மட்டுமென்ன, மேதை மாலியின் சிஷ்யர்தாமே ! அவர் அன்று சற்று அடக்கமாக வாசிக்கவே பார்த்தார். ஆனால் சௌராஸியா விடுவதாக இல்லை. "வாசிம்மா கண்ணு !" என்பது போல் முகவாயைப் பிடித்துக் கெஞ்சவே ஆரம்பித்துவிட்டார். அவ்வளவு உயரிய பண்பு, இசையில் தம்மை மறக்கும் தன்மை. எனவேதான் இடையிடையே அவர் குழல் ஊதுவதைச் சில விநாடிகள் நிறுத்திவிட்டுக் காசிநாத் மிச்ராவின் தபேலா வாசிப்பை ரசித்துத் தலை அசைத்துக் கொண்டிருந்தார்.

அதற்கேற்ப மிச்ராவின் வாசிப்பும் அப்படியே அள்ளிக் கொண்டு போவதாகத்தான் அமைந்திருந்தது. அடேயப்பா! என்ன பேசப் பேசுகின்றன விரல்கள்! எத்தனைவிதமான நாத ஜாலங்களை எழுப்புகின்றன ! மழைத் துளிகள் விழும் ஓசை, ஏரிச் சிற்றலைகள் கரையோரம் ததும்பி விழும் சத்தம், தொலைவில் பாய்ந்தோடும் குதிரைகளின் குளம்பொலி என்று ஏதேதோ பிரமைகள் உண்டாகின்றன. தஞ்சாவூர் உபேந்திரனும் அன்று ஜமாய்த்துத் தள்ளிவிட்டார். தனி ஆவர்த்தனத்தின்போது இரு லய வித்வான்களும் ரசிகர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்டு போனவர்கள்தாம். இன்னும் அவை நம்மிடம் திரும்பி வந்தபாடில்லை !

ஒட்டுமொத்தமான இந்த இன்ப வேதனைகளைத் தாங்க முடியாமல் அன்று ரசிகர்களில்

திரு பாலமுரளிக்கு வாழ்த்துக்களுடன் வெள்ளி விளக்கு வழங்குபவர் திரு ஒய். ஜி. துரைசாமி. பக்கத்தில் சபா காரியதரிசி திரு நாராயணன்.





# வட்ட மேஜை

## ஒரு பாட்டுக்கு இத்தனை பாடா?

பாட்டு பிறந்தது கட்டுரை படித்தேன். இசையோடு கூடிய இனிய ஒரு பாடல் உருவாக இவ்வளவு சிக்கலா? எம். ஆர். கோவிந்தசாமி, தாமோதர ராவ், கிட்டப்பா போன்ற பழம் பெரும் நாடக நடிகர்கள் கடல் மடை திறந்த வெள்ளம் போல் கருத்துள்ள பாடல்களை சூழ்நிலைக்கேற்ப 'ஆசு கவிகளாய்' இசையோடு பாடி மக்களைக் கவர்ந்தார்களே! அவர்களின் திறமை எவ்வளவு பாராட்டுதற்குரியது!

கீழநீலிதநல்லூர்
16-7-76 வெ. கோவிந்தசாமி

'கலைமகளின் கண்ணீர்' என்ற தலையங்கத்தில் நூலக இயக்கம் புதுவேகம் பெற வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் இதற்கான முயற்சிகள் ஒருதலைப்பட்சமாக அமைந்து விடக்கூடாது. அரசு அதிகாரிகளின் முயற்சி மட்டும் பயன் அளிக்காது.

புத்தகங்களைத் திருடுவதும், பத்திரிகைகளிலிருந்து பக்கங்களைக் கிழிப்பதும் நிற்க வேண்டும். பல நூலகங்களில் பிரபல எழுத்தாளர்களின் நூல்கள் காணப்படுவதில்லை.

நூலகங்களின் பயன் அதிகரிக்க வேண்டுமானால் வாசகர்கள் மனச்சாட்சியுடன் நடந்து கொள்வதும் அவசியமாகும்.

ராசிபுரம்
11-7-76 ராஜா

இங்கிலாந்துக்கும் வெஸ்ட் இண்டீஸுக்கும் சமீபத்தில் நடந்து முடிந்த மூன்றாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்தின் இன்னிங்ஸைத் தொடங்கி வைக்கும் கிரிக்கெட்காரராகக் குளோஸ் (Close) தெரிவு செய்யப்பட்டிருந்த விஷயத்தை இந்தியன் எக்ஸ்பிரஸ் *Close to open England Innings* என்ற சுவையான தலைப்பின் கீழ் வெளியிட்டிருந்தது. ஆனால் குளோஸ் ஆரம்பித்து வைத்த இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் எழுபத்தி ஒரே ரன்களுக்கு குளோஸ் ஆகிவிட்டது. 425 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற வெஸ்ட் இண்டீஸிடம் இதுவரை ஆடிய டெஸ்டுகளில் ஆகக் குறைந்த ரன்களை எடுத்திருக்கும் ரிக்கார்டும் இங்கிலாந்தைத் தழுவியிருக்கிறது.

மேலூர்
14-7-76 எஸ். வைத்தியநாதன்

டென்மார்க்கில் நடைபெறும் தலைகீழ் ஏலம் பற்றிய துணுக்கைப் படித்தேன். கடலூர் மாசி மகத்திலும் வடலூர் தைப்பூசத்தன்றும், சிதம்பரம் தேர் தரிசனத்தன்றும் நிறைய வாழைப்பழ வண்டிகள் வரும். வாழைப் பழச் சீப்புகளை அதிக விலை கூறிக் குறைத்துக் கொண்டே வருவார்கள். தங்களுக்கு விருப்பமான விலை வரும்போது வாங்குபவர்கள் வாங்கிக்கொள்வார்கள். அதிலும் முந்திக்கொள்ள வேண்டும்.

கடலூர்,
16-7-76 தங்க குஞ்சிதபாதம்

காதைக் குடையாதே என்ற கட்டுரையில் தரப்பட்ட யோசனை உபயோகமானது. தலைக்கு ஜலம் விடும்போது காதில் வெறும் பஞ்சை வைத்துக் கொள்வதற்குப் பதில் அதை சிறிது நல்லெண்ணெய், அல்லது தேங்காய் எண்ணெயில் தோய்த்துக் கொண்டால் இன்னும் நல்லது. இந்த யோசனையையும் ஒரு டாக்டர்தான் குறிப்பிட்டார்.

தாம்பரம்
20-7-76 ஜெயா பாலசுப்ரமணியன்

'அநாகரிக அரசியல்' என்ற தலைப்பைப் பார்த்தவுடன் திடுக்கிட்டோம். முன்பு சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் செருப்புகள் பறந்து, அடி, உதை, குத்தெல்லாம் நடக்கவில்லையா? பலத்த போலீஸ் காவலோடு தலைவர்கள் வெளியேறவில்லையா? அப்போது 'அநாகரிக அரசியல்' என்று எழுதாதவர் இப்போது எழுதுகிறீர்களே!

17-7-76
திருச்சி-8 எஸ். டி. பார்த்தன்

---

ஒருவர் யாரும் அழைக்காமலேயே பேச ஆரம்பித்துவிட்டார். நல்ல வேளை சுருக்கமாகவே முடித்துக் கொண்டார். "எனக்கு எழுபத்திரண்டு வயதாகிறது. இந்தக் கச்சேரியைக் கேட்ட பிறகு பத்து வயது குறைந்துவிட்டது போலிருக்கிறது" என்றார். அடக்கமாட்டாத அளவில் மகிழ்ச்சி பொங்கி அவரைப் பேச வைத்தது என்றால் அது கச்சேரியின் மகத்தான வெற்றிக்கு ஒரு சான்றுஅல்லவா?

சௌராஷ்டியாவின் வாசிப்பிலே மலைகளின் கம்பீரத்தையும், சூரியோதய அழகையும், பட்சிகளின் எழுச்சி கானங்களையும், பனி படிந்த மர இலைகளின் சிலிர்ப்பையும் பார்ப்பது போன்ற அபூர்வ அனுபவங்களைப் பெற்றோம். கச்சேரி முழுவதும் மேடையிலும் சரி, சபையிலும் சரி உற்சாகம் அலை மோதிக் கொண்டிருந்தது. சிந்து பைரவி கச்சேரியின் இறுதிக் கட்டத்தில் மகுடாபிஷேக வைபவமாகவே ஆகிவிட்டது. மங்களத்தைக்கூட விட்டு வைக்கவில்லை சௌராஷ்டியா.

காரியதரிசி நாராயணன் தேசிய ஒருமைப் பாட்டுக்கு இதைவிடச் சிறந்த ஒரு நற்பணியை ஆற்றியிருக்க முடியாது.

—குட்டிகிருஷ்ணன்

# இந்தியாவின் தரமான லீக்ப்ரூ:ப் பேட்டரியை மிகவும் குறைவான விலையில்* எவரெடி உங்களுக்கு தருகிறது

# புதிய ! ஸில்வர் எவரெடி




உச்ச விலை:
ரூ. 1.60 வரிகள் தனி

இதன் லீக் ப்ரூ:ப் அமைப்பு
பிற்கு முன்பிருந்ததை விட அதிக பாதுகாப்பு அளிப்பதற்காகவே பாலியெதிலினாலான நான்கு மேலுறைகளும் சீக்கிரம் அரிக்கப்பட்டு கெட்டு விடாமல் இருக்க பாலியெஸ்டர் உறையும் அமைந்துள்ளது.

**ஸில்வர் எவரெடி டபிள் ஆக்ஷன் பேட்டரி உங்கள் டிரான்ஸிஸ்டர்களுக்கும் டார்ச்சுகளுக்கும் உகந்தது. இதைவிட மேலான பேட்டரி வாங்குவது அரிது !**

* மற்ற பேட்டரி தயாரிப்பாளர்களின் விலையோடு ஒப்பிடுகையில்

**EVEREADY** இதை விட வேறு எந்த வித உத்தரவாதமும் உங்களுக்குத் தேவையில்லை

UC 8766A]

# புது உலகம் கண்டேன்!

## 4. இசை, நடனம், நாடகங்கள்



ஐரோப்பா முழுமையும் இசை, நடனம், நாடகங்களை இரசிப்பதிலும், நடத்துவதிலும் சில பொது ஒற்றுமைகள் இருந்தாலும், சோவியத் யூனியன் அதில்கூட சில தனித் தன்மைகளைக் கொண்டிருக்கிறது. நான் இங்கிலாந்தில் தங்கியிருந்த ஒரு மாத காலத்தில் நடந்த மிக முக்கிய நிகழ்ச்சிகளில் ஐரோப்பா முழுவதும் கலந்துகொண்ட 'ஈரோவிஷன்' (Eurovision) பாப் மியூஸிக் போட்டியும் ஒன்று. ஹெரால்ட் வில்ஸனின் பதவித் துறவு, பிரின்ஸஸ் மார்க்கரெட்டின் டைவோர்ஸ், புதிய பிரிட்டிஷ் பிரதமர் ஜிம் கலகனின் பதவி ஏற்பு ஆகியவற்றிடையே 'ஈரோவிஷன்' நிகழ்ச்சிகளும் பி.பி.ஸி. டெலிவிஷனில் பரபரப்பாக இடம் பெற்றது. ஒவ்வோராண்டும் இது ஒவ்வோர் ஐரோப்பியத் தலைநகரில் நடைபெறும். இந்த ஆண்டு இது ஹாலந்தின் முக்கிய நகராகிய 'தி ஹேக்' (The Hague) இல் நடைபெற்றது. 'எனக்காக உன் முத்தங்களையெல்லாம் சேமித்து வை' (Save all your Kisses for me) என்ற பிரிட்டனின் பாட்டே போட்டியில் முதற் பரிசு பெற்றது. பிரான்ஸின் பாட்டு இரண்டாவதாக வந்தது. மறுநாள் காலை பி. பி. ஸி. தமிழ் ஒலிபரப்பில் ''பாப் மியூஸிக் இந்தியாவில் தமிழகத்தில் பரவ முடியுமா?'' என்று பேட்டியில் ஒரு கேள்வி என்னைக் கேட்டார்கள். ஈரோவிஷன் போட்டி பற்றியும் கேட்டார்கள். வெற்றி பெற்ற ஆங்கிலப் பாடலையும் நடுவே இணைத்து ஒலிபரப்பினார்கள்.





✕ ருஷ்ய இசை:- பியானோ வகுப்பில் இரு மாணவிகள்.

✕ ருஷ்ய நாடகம்: உஸ்பெக் நாடகக் குழு நடத்தும் ''மீர்ஸா உலுக்பெக்'' இல் ஒரு காட்சி.

✕ ருஷ்ய நடனம்:— ஓம்ஸ்க் பகுதி நாடோடி நடனம்.

சோவியத் யூனியனிலும் பாப் – மியூஸிக் பிரபலமாக இருக்கிறது. கம்பீரமான ஆறரை அடி உயர மனிதர் ஸீன் முகம்மத் டெலிவிஷனில் 'பாப் மியூஸிக்' குழுவுடன் தோன்றும்போது பார்த்துக் கொண்டிருப்பவர்களின் கரகோஷம் அடங்கவே சில நிமிஷங்கள் பிடிக்கின்றன. மேற்கு ஐரோப்பாவுக்கும் சோவியத் யூனியன் முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் 'பாப் மியூஸிக்' பாடல்களில் சில வேறுபாடுகள் உண்டு.

சோவியத் யூனியனில் பாப் மியூஸிக் பாடல்கூட அர்த்த நிறைவுடன் நாடு, மொழி, முக்கியப் பிரச்னைகள் பற்றி இருக்கும். அசர்பைஜானில் ஒரு பெரிய ஹோட்டலின் உணவுக் கூடத்தில் பாடகி ஒருவர் நின்று பாடிய பாட்டு நம் பாரதியார் பாடிய 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்பது போல் அந்த ஊரைப் பற்றிப் பாடப்பட்ட இனிய தேசியப் பாடலாக இருந்தது. விமான நிலைய லவுஞ்ச், ஹோட்டல் வரவேற்பறை ஆகிய பொது இடங்களில் உள்ள டெலிவிஷன் பெட்டிகளில் சோவியத் பாப் மியூஸிக் பாடகர் ஸீன் முகம்மதின் உருவத்தைக் காணும் போது ரசிகர்கள் செய்யும் மகிழ்ச்சி ஆரவாரம் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. ஷோப்பின், பீதோவன், மூஸார்த் ஆகிய மேற்கத்திய இசை வல்லுநர்களின் இசைத் தட்டுக்கள் பிரபலமாக இருக்கின்றன. சோவியத் யூனியனின் பதினைந்து குடியரசுகளிலும் அந்தந்த மாநிலங்களின் கலாசாரப் பின்னணியோடு கூடிய இசை பாதுகாக்கப்படுகிறது, மதிக்கப்படுகிறது. இசையிலோ, நாடகத்திலோ, நடனங்களிலோ பெயரைக் கெடுக்கும் தரக் குறைவான அம்சங்கள் அநுமதிக்கப்படுவதே யில்லை. இதில் அவர்கள் கண்டிப்புப் பாராட்டத் தக்கது. மாறாக, மேற்கு ஐரோப்பாவில் 'பெர்மிஸிவ்னெஸ்' (Permisiveness) என்ற பெயரில் இந்த மூன்று துறைகளிலும் பல தாராளக் காரியங்கள் நடக்கின்றன. 'ஓ கேல் கூத்வா' (இதற்கும் கல்கத்தாவுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. இதை 'ஓ கல்கத்தா' என உச்சரிப்பதும் தவறு. ஒரு பிரெஞ்சுத் தொடராகிய இதற்கு ' உனது பின்புறங்கள் எவ்வளவு நேர்த்தியா யிருக்கின்றன' என்று பொருள்.) என்ற ஆபாச நாடகமும், 'பஜாமா டாப்ஸ்' என்ற ஆபாச நாடகமும் 'கம் இன்டு மை பெட்' என்ற ஆபாச நாடகமும் லண்டனில் பல வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பாரிஸிலும் டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனிலும் 'ஃப்லோர் ஷோ' என்ற பெயரில் நடக்கின்ற விஷயங்கள் ஓர் இந்தியன் அதிர்ச்சியடையக் கூடியவை. பொறுத்துக் கொள்ள முடியாதவை. ஒழுக்கக் குறைவைப் பொறுக்காத இந்தக் கலாசார ஒழுக்கம் சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் பொது. இரவு விடுதிகள், ஃப்லோர் ஷோ, கேளிக்கைகள், ஃபோர்னோகிராபி இவையெல்லாம் சோவியத் யூனியனில் இல்லாதவை. மக்களைத் தறுதலைகளாகவோ, விட்டேற்றிகளாகவோ ஹிப்பிகளாகவோ அலைய விடாமல் அவர்களைக் கட்டுப்பாட்டோடு வாழச் செய்ய முடிவதற்கு இதுவும் ஒரு காரணம். ஃபோர்னோகிராபியைச் சித்திரிக்க முயலும் எந்த எழுத்தும் படமும் சோவியத் யூனியனிலும் வேறு சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நுழையக் கூட முடியாது. கடுந் தண்டனைக்கு உரிய

## நா. பார்த்தசாரதி



கொடிய தவறுகளாக அவை கருதப்படும். அளவு கடந்த 'பெர்மிஸிவ்னெஸ்' மேற்கத்திய சமூகத்தைச் சீரழிக்கும் அதே சமயத்தில் சோவியத் சமூகம் கட்டுப்பாடாக இருப்பதற்குக் காரணம் போதையூட்டும் இசை, போதையூட்டும் மருந்துகள், போதையூட்டும் எழுத்து, போதையூட்டும் நாடகம், போதையூட்டும் நடனம் என்று எதுவும் அங்கே கிடையாது. இசை, நாடகம், நடனம் யாவும் பெருமைப்படத் தக்க கலாசாரத் தரத்துக்குக் கட்டிக் காக்கப்படுகின்றன. ராயல் ஷேக்ஸ்பியர் சொஸைட்டியின் மிகத் தரமான உயர்ந்த நாடகங்களையும், 'ஓ கேல் கூத்வா' போன்ற ஆபாச நாடகங்களையும் அருகருகே இங்கிலாந்திலும் ஃபிரான்ஸிலும் பார்க்க முடிவது போல் சோவியத் யூனியனில் இரு தரங்களைப் பார்க்க முடியாது. அங்கு இந்த இசை, நடன, நாடக விஷயங்களில் முதல் தரம் மட்டுமே உண்டு. இரண்டாம் தரமான, மூன்றாந் தரமான விஷயங்களைப் பொழுதுபோக்குக்காகக் கூட அனுமதிப்பதில்லை. சோதனைக்காகவும் விஷப் பரீட்சை செய்வதில்லை. சில மத்தியக் கிழக்கு நாடுகளிலும் இந்தக் கட்டுப்பாடு கடுமையாக உண்டு.

கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம், நாகஸ்வரம், ஷெனாய், புல்லாங்குழல் ஆகியவற்றுக்கு நம் நாட்டில் மரியாதை இருப்பது போல் சோவியத் யூனியனிலும் கலாசாரத்தோடு இணைந்து பெருமை அளிக்கிற அந்நாட்டு இசைக்கு மரியாதை இருக்கிறது. மாஸ்கோ, லெனின்கிராட் போன்ற பெரிய நகரங்களிலும், மற்றைய குடியரசுகளின் தலைநகரங்களிலும் இசை, நடன, நாடக அரங்குகள் பெரிய அளவில் இருக்கின்றன. அவற்றின் அமைப்பு முறைகளும், ஏற்பாடுகளும் நாடு முழுவதும் ஒரே தரத்தில் — ஓர் ஒழுங்கில் இருப்பவை. இலக்கிய முக்கியத்துவமுள்ள விஷயங்களே நாடகம், இசை நாடகம் நடனங்களில் இடம் பெறும்.

மாஸ்கோவில் உள்ள போல்ஷாய் தியேட்டர் மிகவும் பெரியது. ரஷ்ய மொழியில் 'போல்ஷாய்' என்றாலே 'பெரியது' என்றுதான் அர்த்தம். 'பாலே', ஆபரா, நாடகம், மூன்றும் பிரபலமாயிருக்கின்றன. மூன்றிலும் ஒவ்வொன்றை ஒவ்வோர் இடத்தில் பார்க்க முடிந்தது.

சோவியத் நாடக மேடையும், நடிகர்களும் நன்கு பக்குவப்பட்ட நிலைக்கு வந்திருக்கின்றனர். நாடக நடிகர்கள் அதிக நடிப்பு (over action) குன்றிய நடிப்பு (under action) என்ற இருவகைக் குறைகளிலிருந்தும் விடுபட்டுப் பக்குவமான சமநிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள். நாடகங்களில் ஆரம்ப காலக் கூப்பாடும், வளர்ச்சிக்கால அதிகப்பிரசங்கித்தனமும் இல்லாத ஓர் அடங்கிய பரிபக்குவம் வந்திருக்கிறது. அறிவு பூர்வமான இரசிகன் திருப்தியோடு காண முடிந்த கலைகள் சோவியத் நாடகங்களில் இருக்கின்றன. மாஸ்கோவில் போல்ஷாய் தியேட்டர் தவிரவும் நிறைய அரங்குகள் உள்ளன. அப்படி ஓர் அரங்கில் பிரபல ருஷ்ய இலக்கிய ஆசிரியரான ஆண்டன் செக்காவின் 'செர்ரித் தோட்டம்' (cherry orchard) என்ற நாடகம் பார்த்தேன். மேடையில் ஒரு மண் மேடு. அதில் பெரிய செர்ரி மரம் ஒன்று. பக்கத்தில் ஒரு பெஞ்சு, நாற்காலி, சில தலையணைகள். அந்த மரத்தடியிலிருந்தே நுழைவிடம்போல் ஒரு வீட்டு முற்றம் - இவைதாம் இருந்தன. கதாபாத்திரங்கள் வந்தார்கள், பேசினார்கள், போனார்கள். அந்த ஒரே காட்சிதான். செயற்கையான மாறுதல்கள் இல்லை. 'செர்ரித் தோட்டம்' கதை அது எழுதப்பட்ட சூழலில் அப்படியே மேடையில் தத்ரூபமாக நடந்து கொண்டிருப்பது போல் பிரமை தட்டியது. அவ்வளவு இயல்பாக நடித்தார்கள்.

ஒவ்வொரு காட்சி முடிந்ததும் கரகோஷம். நிகழ்ச்சியின் நடுவே விசில், கரகோஷம், சபாஷ் போடுவதை ஐரோப்பா முழுவதும் பார்க்க முடியாது. இரசிகத் தன்மையில் ஐரோப்பா முழுவதும் சில ஒற்றுமைகள் இருப்பதாகக் குறிப்பிட்டேனே அது இதுதான். பார்க்க வருபவர்கள் பண்பட்ட இரசிகர்கள் என்பதை ரஷ்யாவோ, இங்கிலாந்தோ பிரான்ஸோ எங்கும் காணலாம். 'ஓ கேல் கூத்வா'* மாதிரி நாடகத்தில் நம்மூர் ரசிகர்களை உட்கார்த்தினால் விசிலடித்து ஹாய் ஹாய் என்று கூப்பாடு போட்டுக் கத்திவிடக் கூடும். ராயல் ஷேக்ஸ்பியர் சொஸைட்டியின் உயர்தர நாடகம் ஒன்றில் நம்மூர் ரசிகர்களை உட்கார்த்தினால் 'போர்' 'போர்' என்று அலுத்துக் கொள்ளக் கூடும். ஆனால் ஐரோப்பாவில் எங்கும் எந்த மக்கள் கூட்டமும் அப்படிக் கூப்பாடு போடாது. ஆபாசத்தையும் — சத்தம் போடாமல் மற்றவர்களுக்கு இடையூறு செய்யாமல் அக்கம் பக்கத்தில் அமர்ந்திருக்கும் பெண்களை வெறித்துப் பார்க்காமல் இரசிக்க அவர்களால் முடியும். காட்சி முடியும் முன் கை தட்டவே மாட்டார்கள். காட்சி முடிவில் கைதட்டினால் மேடையில் நடித்தவர்கள் திரையை விலக்கிக் கொண்டு வந்து அவையினரை வணங்கி அதை ஏற்பார்கள். 'ஜனங்கள் வேலையின்றிக் கை தட்டிக் கொண்டிருக்கட்டும். நாம்பாட்டுக்கு அடுத்த காட்சிக்கான 'மேக்-அப்'புக்குப் போகலாமே' — என அலட்சியமாக எந்தக் கலைஞனும் போய் விட முடியாது. கைதட்டல் ஓய்கிறவரை உடன் நடித்த சகாக்களுடன்

## கூட்டுறவுத்துறை வல்லுநர்கள் பயணம்



சிந்தாமணி கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டைத் தோற்றுவித்துப் பிரபலமாக்கித் திறம்பட நடத்திவருபவர் திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு. கூட்டுறவுத் துறையில் ரஷ்யா அடைந்துள்ள முன்னேற்றங்களை நேரில் கண்டறிய திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு தலைமையில் நால்வர் குழு செல்கிறது. சோவியத் யூனியனைச் சேர்ந்த "சென்ட்ரோஸோயஸ் போர்டு" இந்த இந்திய கூட்டுறவுத் துறை வல்லுனர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

# பாரத் ஓவர்ஸீஸ் பாங்கில் உங்கள் டிபாசிட்டுகளுக்கு அதிகப்படி வட்டி கிடைக்கிறது

**¼%**

சதவிகிதம் கூடுதலான வட்டி
5 வருடங்கள் வரையிலுள்ள
டெர்ம் டிபாஸிட்டுகளுக்கு

**½%**

சதவிகிதம் கூடுதலான வட்டி
சேமிப்பு கணக்குகளுக்கு

கீழ்கண்ட அட்டவணையை கவனமாகப் படியுங்கள்:

| | | | |
|---|---|---|---|
| சேமிப்புக் கணக்குகள் | 5½% | 6 மாதங்கள் மற்றும் அதற்கு மேல், ஆனால் 9 மாதங்களுக்குக் குறைவான டிபாஸிட்டுகளுக்கு | 6¼% |
| **டெர்ம் டிபாஸிட்டுகள்** | | 9 மாதங்கள் மற்றும் அதற்கு மேல், ஆனால் 1 வருடத்துக்கு குறைவான டிபாஸிட்டுகளுக்கு | 7¼% |
| 14 நாட்கள் வரை | வட்டி இல்லை | 1 வருடம், மற்றும் அதற்கு மேல் ஆனால் 3 வருடத்துக்குக் குறைவான டிபாஸிட்டுகளுக்கு | 8¼% |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரையான டிபாஸிட்டுகளுக்கு | 3¼% | 3 வருடம் மற்றும் அதற்கு மேல் ஆனால் 5 வருடம் (உட்பட) வரையான காலத்துக்குரிய டிபாஸிட்டுகளுக்கு | 9¼% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரையான டிபாஸிட்டுகளுக்கு | 3¾% | 5 வருடங்களுக்கு மேற்பட்ட டிபாஸிட்டுகளுக்கு | 10% |
| 91 நாட்கள் மற்றும் அதற்கு மேல், ஆனால் 6 மாதங்களுக்குக் குறைவான டிபாஸிட்டுகளுக்கு | 5¼% | | |

ரெகெரிங் டிபாசிட்டுகளுக்கும் தக்கபடி அதிக வட்டி அளிக்கின்றன.

எங்கள் பாங்குக்கு விஜயம் செய்யுங்கள் —
எங்களது அன்பார்ந்த சேவை உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

## பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: "ஆக்ஸ்ஃபோர்ட் ஹவுஸ்", மவுண்ட் ரோடு, சென்னை-600006

கிளைகள்:
சென்னை (4), பம்பாய் (2), புது டெல்லி (2), கல்கத்தா (2), பெங்களூர், ஹைதராபாத், அஹமதாபாத், ஜலந்தர், விசாகப்பட்டிணம், எர்ணுகுளம், மற்றும் பாங்காக் (தாய்லாந்து)

மேடையில் தோன்றிக் கைதட்டித் தங்களைப் பாராட்டுகிற இரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பாவனையில் நின்று வணங்கியே ஆகவேண்டும். முதல் தரமோ, இரண்டாந் தரமோ, மூன்றாந் தரமோ, இரசிகத் தன்மையில் ஐரோப்பா முழுவதும் இப்படிப் பொதுவான சில நாகரிகங்கள் உண்டு.

சோவியத் யூனியனின் இரசிகர்கள் இதில் முதல் மார்க் வாங்கக் கூடியவர்கள்.

நம்மூர் வள்ளி திருமணத்தில் 'காயாத கானகம்' பாடுவது போல் உரத்த குரலில் நீட்டி முழக்கி ஆலாபனை செய்த ஓர் இசை நாடகத்தை ரஷ்யாவின் ஆசியக் குடியரசுகளில் ஒன்றாகிய அசர்பைஜானில் பார்த்தேன். அசர்பைஜானிய மொழியில்தான் கதாநாயகன் சங்கதிகள் போட்டு ராக சஞ்சாரம் பண்ணிப் பிரமாதமாகப் பாடிக் கரகோஷம் பெற்றான். காதலியை அடையத் தவிக்கும் ராஜகுமாரன் கதைதான். ஆனால் மேடை அமைப்பு, காட்சிகள், நடிப்பு எல்லாம் இசை நாடகத்துக்கு இசைவாக இருந்தன. அதன் கதாநாயகன் இனிய குரலில் பாடினான். கிட்டப்பா 'காயாத கானகம்' பாட்டுப் பாடுவது எனக்கு நினைவு வந்தது. பாலே நடனக் கலையில் சோவியத் யூனியன் புகழ் பெற்றிருக்கிறது. 'அன்னக் குளம்' ஸ்வான்லேக் (Swan Lake) என்ற பாலே உலகளாவிய பிரசித்தி பெற்றது. ராமாயணம், பாரதம், சாகுந்தலம் போன்ற இந்தியக் காவியங்களை நடிப்பதிலும் சோவியத் கலைஞர்கள் ஆர்வம் காட்டிவருகிறார்கள். பஞ்ச தந்திரம், பகவத்கீதை — பிறந்த சூழ்நிலை ஆகியவற்றை நடிக்கவும் சிலர் ஆர்வம் காட்டுகிறார்கள்.

லெனின்கிராடில் புஷ்கின் கவிதை ஒன்றைத் தழுவி நடன நாடகமாக நடிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நான் பார்த்தேன். கதையில் நேவா நதியில் வெள்ளம் வருவது போல் ஒரு காட்சி. மிக நுணுக்கமாக அதை மேடையில் காட்டி வெள்ளத்தையே வரவழைத்தார்கள். விளக்கொளி — நீல நிறமான — தண்ணீர் போலத் தோன்றும் படுதா — மின் விசிறிகளால் அந்தப் படுதா எழுவதும் தணிவதுமாக அசைவது ஆகிய ஏற்பாடுகளைச் செய்து மேடையிலிருந்து அவையை நோக்கி வெள்ளம் பொங்குவது போலக் காட்டிவிட்டார்கள். மழை பெய்யும் காட்சியும் இப்படியே நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட்டது. எனக்கு ஒரே வியப்பாயிருந்தது. மேடை நுணுக்கங்களில், நாடக உத்திகளில் அவர்கள் இணையற்று விளங்குகிறார்கள். இரசிகத் தன்மை உயர்ந்திருப்பதால் கலைத் தரமும் உயர்ந்துள்ளது.

சோவியத் சினிமாக்களில் வக்கிரம், வன்முறை, சண்டை, செக்ஸ் இவை திணிக்கப் படுவதில்லை. சினிமா ஒரு நல்ல சாதனமாக மட்டும் பயன்படுகிறது. வெறும் மட்டமான பொழுதுபோக்கு அம்சங்களை அவர்கள் படமாக்குவதே இல்லை.

இசை, நடனம், நாடகம், சினிமா, எதுவானாலும் அது ஒரு சமூக நோக்கத்தோடு நடக்க வேண்டும் என்பதில் சோவியத் யூனியன் கவனமாக இருக்கிறது. (தொடரும்)




படம் முழுவதும் ஆதிமனிதர்களே வருவதால் மொழிப் பிரச்னையே இல்லை.

ஆதிமனிதன் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ளத் தன்னிச்சையில் முயன்றது; இயற்கையின் தூண்டுதலால் உடற்பசியைப் போக்கிக் கொண்டது; பற்று, பாசம், பகைமை, குரோதம் முதலிய குண வேறுபாடுகளை வளர்த்துக் கொண்டது — ஆகியவற்றையெல்லாம், இயல்பான கதையோட்டத்தில் காண்கிறோம்.

வசனம் இல்லை; பாடல்கள் இல்லை; (அப்பாடி! கேட்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது!) ஆனால் கதை இருக்கிறது, காதல் இருக்கிறது, மோதல் இருக்கிறது, சாதல் இருக்கிறது. நட்சத்திர நடிக, நடிகையர்கள் இல்லாததால் எதுவும் குடிமூழ்கிப் போய் விடவில்லை. இந்த 'ஈஸ்ட்மென் கலர்'ப் படத்தை ஜி. கே. மூர்த்தி நன்கு டைரக்ட் செய்திருக்கிறார்.

"ஆதி மனிதன்" படத்துடன் காட்டப்படும் டாக்குமெண்டரி படமான *Cave man of Kerala* மிக அற்புதமாய்த் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் அருமையான, தெளிவான விளக்கம் தருகிறார், டைரக்டர் என். சங்கரன். மஞ்சேரி வனப் பிரதேச குகைவாசிகள்தான் இப்படத்தில் வரும் பாத்திரங்கள். கேரள மாநிலத்துக்கே உரிய நீர் வளமும், மலை வளமும் சிறப்பான முறையில் படமாக்கப் பட்டிருக்கின்றன. இதில் காமிராவை இயக்கியிருக்கும் முறை திகைக்க வைக்கிறது. இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கும் இந்த இரண்டு படங்களும் வழக்கமான ஃபார்முலாப் படங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதே மனசுக்குத் திருப்தி யளிக்கிறது.

—சாந்தன்

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

ஜாலிம்
லோஷன்
படர்தாமரை சொறி
அரிப்புக்கும் மருந்து
ORIENTAL CHEMICAL WORKS PVT. LTD. (INDORE)

# 35 வயதிலே ஓகாஸா: மூச்சுத் திணறுத தென்புக்கு




35 வயதிலே மூச்சு திணருவானேன்?
வயது ஏற ஏற மூலாதாரமான சத்துக்
கள் உடம்பில் பற்றுது போய்விடலாம்.
அந்தக் குறையை ஈடு செய்கிறது
ஓகாஸா டானிக் மாத்திரை.
துள்ளிவரும் தென்பு. வலு.
ஆரோக்கியம்.

## ஓகாஸா
டானிக் மாத்திரைகள்
உடல்நலத்திற்கு மறுமலர்ச்சி

OKASA CO. PVT. LTD., 12K, Gunbow Street,
P. B. No. 396, Bombay 400 001.

# ஆபத்து அற்ற ஆஸ்துமா

இருபது வயதுப் பெண்ணை அழைத்து வந்த தாயார் கூறினள்: ''இரவெல்லாம் இவள் மூச்சு விட முடியாமல் கஷ்டப்பட்டாள். நெஞ்சில் சளி கட்டி யிருக்கிறது. மூச்சு விடும்போது 'கர் மூர்' என்று ஒருவித சப்தம் வருகிறது. வாய் ஓயாமல் இருமிக் கொண்டே இருந்ததால் இவளுக்கும் தூக்கமில்லை; எனக்கும் தூக்கமில்லாமல் போயிற்று, டாக்டர்!''

''இதற்கு முன்பு இப்படி வந்திருக்கிறதா?''

''பல தடவைகள் இப்படி சிரமப்பட்டிருக்கிறள். நாலைந்து ஆண்டுகளாகவே பனிக் காலத்திலும் மழைக் காலத்திலும் இவள் படும் துன்பம் கொஞ்ச நஞ்சமன்று. இப்படியே நீடித்துக் கொண்டு போனல் எப்படி இவளுக்குக் கல்யாணம் செய்வது என்பது எங்களுக்குப் பெரும் கவலையாக இருக்கிறது டாக்டர்!''

''கவலைப்படாதீர்கள்! ஆஸ்துமா அறவே குணப்படுத்திவிட முடியாத நோய்தான். எனினும் எளிதில் உயிருக்கு ஆபத்து விளைவிக்கிற பயங்கரமான நோயன்று. கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருந்தால் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து நீண்ட காலம் உயிர் வாழ முடியும்'' என்று அன்னைக்கும் மகளுக்கும் ஆறுதல் சொன்னேன். நோயாளியைப் பரிசோதனை செய்து மருந்து எழுதிக் கொடுத்து, சில தேகப்பயிற்சிகளைத் தவறாமல் செய்து வரும்படி கூறி அவற்றைச் செய்யும் முறையையும் விளக்கினேன்.


**''ஆஸ்துமா வருவதற்கான காரணங்கள் யாவை ?''**

''சிலருக்கு இயல்பாக ஒத்துக்கொள்ளாத வீட்டுப் புழுதி (*House dust*), சாம்பிராணி புகை, வாசனைப் பொருட்கள் போன்றவை இதற்குத் தூண்டுகோலாக அமைகின்றன. ஜலதோஷம், சைனஸ், காதில் சீழ் வடிதல் இவை குழந்தைகளைப் பாதிக்கும்போது சரிவரக் கவனிக்கப்படாததும் ஆஸ்துமாவுக்கு வழிகோலும். சிலருக்குப் பிறக்கும்போதே (*Genetic Factors*) இந்நோய்க்கான சூழ்நிலை தோன்றிவிடுகிறது. கருவுற்ற நிலையில் தாயின் உடல்நிலையில் ஏற்படும் சில பாதிப்புக்களின் விளைவாகக் குழந்தைகளுக்கு ஆஸ்துமா வரலாம். உடல்நிலை பாதிக்கப் பெறுவதால் ஆஸ்துமா தோன்றுகிற மாதிரி, மனநிலை பாதிக்கப்பெற்றாலும் சிலருக்கு ஆஸ்துமா வரலாம். சான்றாக ஒரு வீட்டில் பெற்றோர் இருவரும் குழந்தையின் எதிரில் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தால் அதன் விளைவாகக் குழந்தையின் மனநிலையில் ஏற்படும் பாதிப்பு ஆஸ்துமாவைத் தோற்றுவிக்கலாம். ஆஸ்பிரின், பெனிசிலின் போன்ற சில மருந்துகளும் காரணமாக அமையக் கூடும். பருவ நிலையும் இதற்குக் காரணமாகலாம். சில வகை உணவுப் பொருட்கள் காய்கறிகள் காரணமாகத் தோன்றுவதும் உண்டு. கரப்பான் பூச்சிகள் வீட்டில் மிகுதியாக இருக்குமானல், அவற்றின் கழிவுப் பொருள் காய்ந்து உலர்ந்து காற்றிலே கலந்தால் அக்காற்றினைச் சுவாசிப்பதாலும் சிலருக்கு ஆஸ்துமா தாக்குதல் நிகழக் கூடும்.''

**''ஒரு முறை ஆஸ்துமாவுக்கு இலக்கானவர்கள் அதிலிருந்து விடுபடவே வழியில்லையா? வாழ்நாள் முழுவதும் ஆஸ்துமாவுடன் போராடிக் கொண்டுதான் வாழ வேண்டுமா?''**

''உடலில் உள்ள ஹார்மோன்கள் காரணமாக ஆஸ்துமாவுக்கு இலக்கான சிலர், சில

## குட்மார்னிங் டாக்டர்!



கட்டங்களில் அதனின்று நிரந்தரமாக விடுபடுவதும் உண்டு. உதாரணமாகச் சில பெண்களுக்குச் சிறு பிராயத்திலேயே ஆஸ்துமா வந்து, அவர்கள் பருவம் எய்தியதும் அந்நோய் மறைந்து விடுவது உண்டு. சில பெண்களுக்குக் கருத் தரிக்கும் வரையில் ஆஸ்துமா இருக்கும்; முதன் முறையாகக் கருத் தரித்த பின் ஆஸ்துமா இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இது இயற்கை தோற்றுவிக்கும் அற்புதம்.''

**''உணவு காரணமாக ஆஸ்துமா தாக்குதல் நிகழ்வதை நோயாளி எவ்விதம் கண்டுணர்ந்து தவிர்க்க முடியும்?''**

''குறிப்பிட்ட உணவு ஒத்துக் கொள்ளவில்லை என்பதை நோயாளியே உறுதி செய்து கொள்ள முடியும். அந்த உணவை உட்கொண்டு, ஆஸ்துமா வருகிறதா என்று பார்த்த பின், சிறிது காலம் அதனைத் தவிர்த்து, மீண்டும் உட்கொண்டு சாதக—பாதகமான நிலையை உணரலாம். இந்தப் பரீட்சார்த்த உணவு முறையைக் கையாண்டு ஒத்துக் கொள்ளாத உணவுப் பண்டத்தை ஒதுக்கி விடலாம். சென்னையில், ஸ்டான்லி மருத்துவ மனையில் இதற்கென ஓர் ஆய்வுப் பிரிவு உள்ளது. ஒத்துக் கொள்ளாத ஓர் உணவை உடலுக்குள் செலுத்தி அதன் விளைவாக மேல் தோலில் மாறுதல் அல்லது

வீக்கம் ஏற்படுவதைக் கவனித்து அதனின்றும் 'ஸீரம்' தயாரித்து அந்த நோயாளிக்கு 'இஞ்செக்ஷன்' செய்துவிடுவார்கள். பின்னர் அந்த உணவு வகையினால் அந்நோயாளி துன்புறுவதில்லை.''

**''எந்த மருத்துவ முறையினாலுமே ஆஸ்துமாவை முற்றும் குணப்படுத்த முடியாதா?''**

''முடியாது. எந்த மருத்துவ முறையினாலும் இதனை அறவே ஒழிக்க இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆடா தோடை (அல்லது ஆடு தொடா) இலை, கண்டங்கத்திரி ஆகிய நமது நாட்டு இலைகள் நெஞ்சில் உள்ள கபத்தைக் கரைக்கப் பெரிதும் உதவுகின்றன. 'கார்ட்டிஸோன்' கலந்த மருந்துகள் உடனடியாக நிவாரணம் அளிக்கும்; ஆனால் இவை இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உகந்ததன்று. இவற்றின் பின் விளைவுகள் விரும்பத் தகாதவையாதலால் மருத்துவரின் ஒப்புதலின்றி இவற்றை நோயாளிகள் சாப்பிடக் கூடாது. புதிதாகச் சில தீமை விளைவிக்காத மருந்துகள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. மந்திர, தந்திர மாயா ஜாலங்களால் இந்நோயைக் குணப்படுத்த முடியாது. இவைகளுக்கு மயங்கி நோயாளிகள் உடலைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.''

**''இந்நோய்க்கான சிகிச்சையில் யோகாசனங்கள் எந்த அளவுக்குப் பயன் அளிக்கும்?''**

''நுரையீரலின் இயக்கத்தை யோகாசனங்களின் மூலம் சீராக்க முடியும். பொதுவாக ஆஸ்துமா நோயாளிகள் மூச்சை வெளியே விடும்போதுதான் அதிகம் சிரமப்படுவார்கள். பிராணாயாமம் தினமும் செய்வதன் மூலம் கணிசமான அளவு நிவாரணம் பெறலாம். மருத்துவரின் யோசனைக்கிணங்க உரிய ஆசனங்களைச் செய்து நல்ல பலன் அடையலாம்.''

**''பனிக் காலத்தில் ஜன்னல் கதவுகளை மூடி வைப்பது ஆஸ்துமா நோயாளிக்கு நல்லதா? நோயின் கடுமையைக் குறைக்க வேறு யோசனைகள் ஏதாவதும் உண்டா?''**

''திறந்து வைப்பதே நல்லது. நல்ல காற்று நிரம்ப உள்ளே வந்தால் போதிய பிராண வாயுவைச் சுவாசிக்கலாம். ஆனால் காற்றின் மூலம் வெளியிலுள்ள புழுதி உள்ளே வரக் கூடுமானால் கதவுகளை மூடியே வைக்கலாம். வியர்த்துக் கொட்டும் அளவுக்குக் கனமான கம்பளி, போர்வைகளை உபயோகிப்பது நல்லதல்ல. வியர்வை உடலிலிருந்து மிகுதியாக வெளிப்பட்டால், சளி கெட்டியாகி இறுகிவிடும். ஈரம் இருந்தால் எளிதில் வெளிப்பட்டுவிடும். ஆஸ்துமா நோயாளிகள் கவனிக்க வேண்டியவை: சிகரெட் புகைப்பதையும், புகைப்போரின் அருகில் இருப்பதும் கூடத் தீங்கு விளைவிக்கும். படுக்கும் அறையில் தட்டு முட்டுச் சாமான்கள் ஏதும் இருக்கக் கூடாது. நோயாளி வீட்டில் இருக்கையில் அறைகளைத் துடைப்பத்தால் பெருக்கக் கூடாது. ஈரத் துணியால் தரையைத் துடைப்பதே சிறந்த முறை.''

**டாக்டர் ஏ. எம். செல்வராஜ் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.**

**அரசாங்கம் பெண் தபால்காரர்களை நியமித்ததன் விளைவாகப் பிறந்த ஜோக்குகள்:**

- பாபு: தபால் மூலம் பாடம் படித்தாலே பலன் உண்டா?
  ரமேஷ்: கைகண்ட பலன் உண்டு. தபால் கொண்டு வந்த தபால்காரி உஷாவைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டேன்.

- தபால்காரி: உங்களுக்குத் தினம் கடிதம் வருகிறதே!
  வாலிபர்: உன் முகத்தைத் தினம் பார்க்கா விட்டால் முடியாது. எனவே எனக்கு நானே தினம் கடிதம் போட்டுக் கொள்கிறேன்!

- தபால்காரி (கணவரிடம்): எட்டாம் நம்பர் வீட்டு லட்சுமி, ஐந்தாம் நம்பர் வீட்டு காஞ்சனா, மூன்றாம் நம்பர் வீட்டு கலா கட்டிக்கிட்டிருக்கிற புடவையும் ஒன்றாம் நம்பர் வீட்டு விஜி போட்டிருக்கிற வைர நெக்லஸ்-ம் நன்றாயிருக்கு. எனக்கும் வாங்கிக் கொடுங்க.

- தபால்காரி (கணவனிடம்): இந்தாங்க மணியார்டர் பாரம். கையெழுத்துப் போடுங்க. உங்களுக்கு வந்த இருநூறு ரூபாய்க்குப் புடவை வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்.

— லலிதா செல்லப்பா





அமரர் கல்கி

## அத்தியாயம் 31

# மனையாள் ஆட்சி

ஹோம்ரூல் கோபாலகிருஷ்ண முதலியார் தம் அறையில் உட்கார்ந்து ஹைகோர்ட் வழக்குகள் அடங்கிய தடிமனான புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் சன்னக் குரலில் பலமாகத் தலையாட்டியபடி ஆபோகி ராகத்தை ஆலாபனை செய்து கொண்டும் இருந்தார்.

எதிரே ஒரு பட்டிக்காட்டான் பெஞ்சில் கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். சற்று நேரம் இப்படியும் அப்படியுமாகப் புத்தகத்தைப் புரட்டிவிட்டு 'டப்'பென்று அதை மூடியதும் தூசி எழும்பி அவரைத் தும்ம வைத்தது. கைக்குட்டையைத் தேடி அது அகப்படாமல் மேல் துண்டில் மூக்கைச் சிந்தித் துடைத்துக் கொண்டார். நடு விரலால் சரிந்திருந்த மூக்குக் கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு எதிரேயிருந்த பட்டிக்காட்டானை நிமிர்ந்து பார்த்தார்.

'' என்னங்க, சொல்லுது, புத்தகம்? நம்ம வழக்குக்குச் சாதகமாகத்தானே பேசுது ?'' என்று கேட்டான் அவன்.

''உம்... ஒண்ணு ரெண்டு பாயிண்ட் பாதகமாக இருக்கு. மற்றப்படி பரவாயில்லே. எல்லாம் வாதாடற விதத்திலேதான் சமாளிக்கணும்.''

'' ஐயாவுக்குத் தெரியாதுங்களா ?''

'' அது சரி, நீ இந்நேரம் சொன்னதெல்லாம் சத்தியம்தானே ?''

''ஆமாங்க, மாரியாத்தா மேலே ஆணையா சொல்றேன்.''

''பின்னே, கேஸ் தானே ஜெயிச்சுடறது. ஏன் கவலைப்படறே ?''

உள்ளே பாத்திரங்கள் 'தடார் புடார்' என்று உருளும் சத்தம் கேட்டது. ஹோம்ரூல் கோபாலகிருஷ்ணன் கண்களை மூடி ஆள் காட்டி விரலையும் கட்டை விரலையும் நெற்றியில் வைத்துச் சதையைக் கிள்ளிப் பிடித்துக் கொண்டு பெருமூச்சுடன் கோபத்தையும் வெளியேற்றினார்.

பட்டிக்காட்டான் பேசினான் : '' கேஸ் தானே ஜெயிச்சுடும்னா ஐயாகிட்டே ஏனுங்க நான் வரேன் ? சத்தியத்துக்கு அவ்வளவு மதிப்பு இருந்ததுன்னா கோர்ட்டு, ஜட்ஜு, வக்கீல் எல்லாரும் எதுக்குங்க? பேசப் போறயோ சாகப் போறயோ என்று சொன்னாப்பலே, வாயடி அடிக்கிறவனுக்குத்தான் இது காலமா இருக்குங்க.''

''என்னப்பா, நீ அநாகரிகமாப் பேசறே! என்னுடைய பேச்சாற்றலால் வாதத் திறனால் தான் கேஸ் ஜெயிக்கணும்னு கொஞ்சம் கௌரவமா சொல்லேன். கேட்க நல்லா இருக்கும்.''

''ஆமாங்க, அதுதானுங்க; நீங்க நல்லா ஓங்கி அடிச்சுப் பேசணும்.''

'' அடிச்சும் பேசறேன், மேஜையிலே ஓங்கிக் குத்தியும் பேசறேன்.''

'' அந்த அம்மா பொம்பிளை வக்கீல் வாயைத் திறக்க முடியாதபடி அடிச்சுடணுங்க.''

'' என்ன ? அட்வொகேட் பவானி வாதிக் கட்சியிலே பேசப் போகிறாளா?''

''ஆமாங்க.''

'' அப்படியானால் ஃபீஸ் நூறு ரூபாய் சேர்த்துத் தரணும், அப்பா ! அந்த அம்மாவோடு 'ஆர்க்யூ' பண்ணினால் தொண்டைத் தண்ணி வத்திப் போயிடும். பத்துக் கேஸிலே பேசற பேச்சை ஒரு கேஸிலேயே பேசும்படியாகிவிடும்.''

'' அதுக்கென்ன நூறு ரூபாய் அதிகம் வாங்கிக்குங்க. கேஸ் மட்டும் ஜயிச்சால்...''

''கேஸ் ஜயிச்சால் எனக்குக் கனகாபிஷேகம் பண்ணிவிடுவாயாக்கும்? திரும்பிக் கூடப் பார்க்கமாட்டாய்...''

உள்ளே பாத்திரங்கள் உருளும் ஓசை அதிகரித்தது.

'' சரி சரி, நீ போய் வா, எல்லாவற்றையும் நான் பார்த்துக்கறேன். நேரமாகிறது'' என்றார் கோபாலகிருஷ்ணன். '' இப்போ

இங்கே மெய்யூர் ஜமீந்தார், பொய்யூர் மிட்டாதார், காட்டூர் பண்ணையார் எல்லாரும் வரப் போறாங்க, முக்கியமான கேஸ் விஷயமா, நீ போகலாம்.''

குடியானவன் எழுந்து, ''நம்ம கேஸூம் முக்கியம்தாங்க. அலட்சியமா இருந்துடாதீங்க '' என்றான்.

''அலட்சியமா இருப்பதா ? சேச்சே ! உன் கேஸிலே கோர்ட்டே கிடுகிடுத்துப் போகிற மாதிரி பேசப் போகிறேன்.''

''எல்லாம் இங்கிலீஷிலேயே பேசுங்க.... தமிழிலே கிமிழிலே பேசிடாதீங்க....''

''ஆகட்டும், போ !''

குடியானவன் சுவரில் கோட் ஸ்டாண்டில் இரண்டு தலைப் பாகைகள் மாட்டியிருப்பதைப் பார்த்தான். ஒன்று சாதாரணத் தலைப் பாகை; ஒன்று சரிகைத் தலைப்பாகை.

'' ஏனுங்க, நம்ம கேஸூக்கு இந்த இரண்டு தலைப்பாகைகளிலே எதை வைச்சுக்கிட்டு வருவீங்க ?''

''சாதா தலைப்பாகையைத்தான் வைக்கப்பேன். ரொம்ப ஸ்பெஷல் கேஸூக்குத்தான் சரிகைத் தலைப்பாகை. அதை வைச்சுண்டு வந்து பேசணும்னா பீஸ் இன்னும் ஐம்பது ரூபாய் அதிகமாகும் !''

'' என்னங்க, இப்படி ஒரே போடாகப் போடறீங்க ? இருபத்தைஞ்சுகூடத் தரேன், வைச்சுக்குங்க !''

உள்ளே பாத்திரங்களின் சத்தம் இன்னும் அதிகமாகியது.

கலவரம் அடைந்த கோபாலகிருஷ்ணன், ''சரி, சரி ; உனக்காக ஃபீஸ் அதிகம் வாங்காமலே சரிகைத் தலைப்பாய் வைச்சுண்டு வரேன். நீ கிளம்பு, சீக்கிரம்'' என்றார்.

'' சரிங்க. போய் வரேன். ஆனால் மறந்து போய்த் தலைப்பாகையை மாத்திடாதீங்க !''

குடியானவன் போனதும் ஹோராம் ரூல்கோபாலகிருஷ்ணன் கல்யாணி ராகத்தைச் சித்திரவதை செய்து கொண்டே ஒரு கேஸ்கட்டை எடுத்து முடிச்சை அவிழ்க்க ஆரம்பித்தார்.

செல்லம்மாள் கரண்டிக் கரத்துடன் உள்ளே நுழைந்தவள் சற்று நேரம் அசையாமல் நின்றாள். கோபாலகிருஷ்ணன் தலையை நிமிர்த்தவில்லை.

''நான் என்ன மரமா? தூணா? மனுஷியாத் தென்படலையா?'' என்றாள் செல்லம். ''உங்க பேரில் தப்பில்லே. உங்களைத் தேடி வந்து எங்கப்பா என்னைக் கொடுத்தாரே அவரைச் சொல்லணும் !''



''ஓ! நீங்களா. வாங்கோ அம்மா, வாங்கோ. உட்காருங்கோ. என்ன வழக்கு, என்ன நடந்ததுன்னு விவரமா சொன்னால் சட்டப் பாயிண்ட் சாதகமா பாதகமான்னு யோசிக்கலாம்.''

'' எனக்கு எப்பவும் எதுவும் பாதகம் தான். இந்த வீட்டுக் குடித்தனத்தைச் சமாளிக்க இனிமேல் என்னால் முடியாது. ஐந்து குடும்பங்களும் சேர்ந்து படுத்தற பாட்டைத் தாங்காமல் தவிசுப் பிள்ளை ஓடிப் போயிட்டான். மூன்று நாளைக்கு ஒரு புது வேலைக்காரி தேட வேண்டியிருக்கு.''

''அதனாலே ஓடிப் போக முடியாத வேலைக்காரியா ஒருத்தியைத் தேடறே. மகனுக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆகணுங்கறே!''

'' வருகிறவள் என்னை ஓட ஓட விரட்டாமல் இருந்தால் போதாதாக்கும். நீங்களும் உங்க பிள்ளையும்தான் அந்த ராங்கிக்காரியை எப்படியாவது இந்த வீட்டோடு தருவிச்சுக்கிறதுன்னு திட்டம் போட்டிருக்கேளே!''


'' நான் ஒரு திட்டமும் வகுக்கலே செல்லம். கல்யாணம் ஆசைப்படறான்னு தெரியறது. மறுத்துச் சொல்ல எனக்கு மனமில்லே. உன் சம்மதமில்லாமல் நடந்துடுமா என்ன?''

இந்தச் சமயம் பார்த்துக் கல்யாணம் உள்ளே நுழைந்தான்.

''வாடாப்பா, நூறு ஆயுசு'' என்றார் கோபால கிருஷ்ணன்.

''தந்தையே! அன்னையே! இந்த அறியாச் சிறுவனைப் பற்றித் தாங்கள் யாது இயம்பிக் கொண்டிருந்தீர்கள்? யான் அறிந்து கொள்ளலாமா?''

''இது என்னடா, நாடக டயலாக்கா?''



''ஆம், எந்தையே, அடியேனுக்குத் தாங்கள் இடும் கட்டளை யாது? பகருங்கள்!''

''ஒன்னும் பெரிய விஷயமில்லே! உன் அம்மாவைத் திருப்திப்படுத்த நீ ஒரே ஒரு கல்யாணம் பண்ணிக்கணும், அவ்வளவுதான்.''

''நாடகம் முடியட்டும், அப்புறம் தான் திருமணம் பற்றிய சிந்தனை!'' என்றான் கல்யாணம்.

''ஏண்டா, இன்றைக்குக் கோர்ட்டுக்காவது வருவாயா?''

'' எல்லாம் நாடகம் முடிந்த பிற்பாடுதான்.''

''ஏண்டா, நீ சொல்றது எப்படி இருக்கு தெரியுமா?''

''கதையா? சொல்லுங்கோ. வேறு வழியில்லே. கேட்டுக்கறேன்.''

''நம்ம பக்கம் பட்டிக்காட்டான் ஒருவன் ஹைகோர்ட்டிலே அப்பீல் போட்டுவிட்டு அதற்காக ரயிலேறினானாம். ரயிலில் நிறைய இடம் இருந்ததாம்....''

''போய்! போய்! ரயிலிலாவது இடம் இருக்கவாவது?''

'' இருந்தது என்று வைத்துக் கொள்ளேன். பட்டிக்காட்டான் நின்று கொண்டே இருப்பதைப் பார்த்துவிட்டு ஒரு பயணி, 'ஏம்பா, நிற்கிறாய்? இடம் இருக்கே, உட்காருவது தானே' என்றான். அதற்கு அந்தப் பட்டிக்காட்டான், 'நாளைக்குப் பட்டணத்திலே கேஸு. அது முடியும் வரை உட்கார மாட்டேன்' என்றானாம்!''

''அவன் வைராக்கியத்துக்குத் திருடப் போகணும். நீங்களாயிருந்தால் இடம்தான் இருக்கேன்னு சப்ளிக்க உட்கார்ந்துடுவேள்'' என்றாள் செல்லம்.

பிறகு கல்யாணத்தைப் பார்த்து, ''நாடகம் என்னிக்கிடா? எங்களை அழைச்சுண்டு போவியோ இல்லியோ?'' என்றாள்.

'' அழைத்துப் போவதா? சரிதான்! உங்களுக்கு வர வழி தெரியாதா? ஐந்து, பத்து ரூபாய் டிக்கெட்டெல்லாம் விற்றுப் போச்சு. பதினைந்தோ இருபத்தைந்தோ கொடுத்து நாடகம் பாருங்கள். இது ஒரு



சென்னை ரேடியோ நிலைய இயக்குனர் திரு எம். எஸ். கோபால் அவர்கள் அயல்நாடுகளுக்கு விஜயம் செய்து முன்னேற்றமடைந்துள்ள அந்நாடுகளின் ஒலிபரப்புத்துறையின் நுணுக்கங்களை அறிந்து திரும்பினார். அவரைப் பாராட்டும் வகையில் சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு தேநீர் விருந்து நடந்தது. திரு கருப்பையா மூப்பனார் தலைமை தாங்கினார். பாராட்டுரை வழங்கியவர்களில் திரு கண்ணதாசனும் நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசனும் முக்கியமானவர்கள்.

நல்ல காரியத்துக்கு நிதி திரட்ட நடக்கும் நாடகம்; தெரியும் இல்லையா?''

'' ஏங்க, போவோமா ? ஐம்பது ரூபாய் செலவாகுமேன்னு யோசிக்காதீங்க. கல்யாணம் நடிப்பதைப் பார்க்க வேணுமா ?''

''பேஷாய்ப் போய்ப் பார், உன் பிள்ளை நடிப்பதை. நான் வரவில்லை.''

'' ஏன்? ஏன்?'' என்று தாய், மகள் இருவரும் ஏககாலத்தில் கேட்டனர்.

''பின்னே என்ன? எனக்கும் ஒரு வேஷம் கொடுடான்னு ஆன மட்டும் கேட்டுப் பார்த்தேன். மாட்டேன்னுட்டான். எனக்கு நடிப்பு வராதாம் ! நேற்றுப் பிறந்த இந்தப் பசங்களுக்குத்தான் வருமாம் !''

'' அந்த வரைக்கும் கல்யாணம் புத்திசாலிதான்'' என்று கூறிச் செல்...ம் மகனுக்குத் திருஷ்டிகழித்தாள்.

'' நீதான் மெச்சிக்கணும் ! பிள்ளையாம் பிள்ளை, அணிப்பிள்ளை ! தென்னம்பிள்ளை ! எனக்கு நடிக்கத் தெரியாதாம் ! இவன் கண்டான் ! நான் மட்டும் மேடையேறி மனோஹரனை நடிக்க ஆரம்பித்தால்....''

''கொட்டகையே காலியாயிருக்கும் '' என்று முடித்தான் கல்யாணம்.

கோபாலகிருஷ்ணன் சளைக்கவில்லை. மனோஹரன் டயலாக் பேச ஆரம்பித்தார்.

'' உங்க பேரிலே யாரும் கொலைக்குற்றம் சுமத்தி கேஸ் கொண்டு வரமாட்டேங்கறாளே, அதுதான் அதிசயம் ! காலையில் கர்நாடக சங்கீதக் கொலை, மத்தியானம் மனோகரா வசனக் கொலை'' என்று கூறியபடியே காதைப் பொத்திக் கொண்டு உள்ளே சென்றாள் செல்லம்.

## அத்தியாயம் 32

# கமலாவின் கடிதம்

''மகாஸ்ரீஸ்ரீ கல்யாணம் அவர்களுக்கு, அடியாள் கமலா எழுதிக் கொண்டது...''

''திருவாளர் கல்யாணம் அவர்களுக்கு அபாக்கியவதி கமலா அநேக கோடி நமஸ்காரங்கள்....''

''வணக்கம்... இந்தக் கடிதம் தங்களுக்கு வியப்பளிக்கலாம்...''

இப்படிப் பலவிதமாகக் கடிதம் எழுத ஆரம்பித்துக் கிழித்துப் போட்டுக் கொண்டே இருந்தாள் கமலா. நாற்பது பக்க நோட்டுப் புத்தகத்தில் பாதித் தாள்களுக்கு மேல் அடுப்பெரிக்கக் குவிந்துவிட்டன. பாக்கிப் பத்துத் தாள்களைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, 'இதுதான் கடைசி முயற்சி' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு எழுத ஆரம்பித்தாள்:

''என் இன்னுயிர்க் காதலர் கல்யாணம் அவர்களுக்கு,

ஆம், இந்தக் கடிதத்திலாவது ஒரே ஒரு முறை இப்படித் தங்களை அழைக்க அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன். தயவு செய்து இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் உடனடியாகக் கிழித்துப் போட்டுவிடுவதுடன் என்னைப் பற்றிய நினைவுகள் தப்பித் தவறித் தங்கள் மனத்தில் ஏதும் இருந்தால் அவற்றையும் அழித்துவிடுமாறுகோருகிறேன்.

இக்கடிதம் தபால் மூலம் தங்களுக்கு வந்து சேரும்போது நான் இந்த ஊரைவிட்டோ அல்லது உலகை விட்டோ (எது என்று இன்னும் முடிவு செய்யவில்லை) கிளம்பிப் போய் நீண்ட நேரமாகி விட்டிருக்கும்.

சிறு வயதிலிருந்தே பெரிய படிப்பெல்லாம் படித்து உலகம் வியக்க விளங்கப் போவதாகக் கனவு கண்டவள் நான். கடைசியில் அடுப்பு ஊதுவது தவிர வேறு எதற்கும் லாயக்கற்றவள் என்பதாக என் தாய் தகப்பனார் தீர்மானித்துவிட்டனர். தங்களை முதன் முதலாகப் பார்த்த கணத்திலிருந்து பட்டம் பதவியெல்லாம் ஒரு மண்ணும் வேண்டாம் தங்கள் மனைவி என்ற பட்டமும் தங்கள் இதய சிம்மாசனப் பதவியும் கிடைத்தாலே நான் பெரிய பாக்கியசாலி என்று கருதினேன். அதற்கும் நான் கொடுத்து வைக்கவில்லை.



## ஜ்வாலா

தமிழ் மொழியில் மாறுபட்ட வித்தியாசமான படங்கள் வரக்கூடாதா என்ற ஏக்கம் இப்போது சில இளைஞர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அந்த ஏக்கம் கொடுத்த உரு ஜ்வாலா. திரைப் படக் கல்லூரியில் சினிமாவைப் பற்றி முறையாகப் படித்தவர்கள் சிலர் வேறு பலருடன் இணைந்து உருவாக்கியிருக்கும் அமைப்புத்தான்: ஜ்வாலா.

தாகம், திக்கற்ற பார்வதி போன்று மிகக் குறைந்த செலவில் முற்றிலும் வெளிப்புறங்களிலேயே படம் எடுக்க இந்த அமைப்பு தீர்மானித்திருக்கிறது. சரி, பணம்? இந்தியா முழுவதிலும் உள்ள திரைப் படக் கலைஞர்களின் ஆக்க பூர்வமான கட்டுரை களைத் தாங்கிய ஒரு சினிமா மலர் வெளியிட்டு அதன் மூலம் வரும் பணத்தைத் தங்கள் படத் தயாரிப்புக்கு மூலதனமாக வைத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

கமலஹாஸன், இவர்களுடைய படத்தில் நடிக்க முழு மனத்துடனும், உற்சாகத்துடனும் சம்மதித்திருக்கிறார்.

'இரண்டு பேர் வானத்தைப் பார்க்கிறார்கள்' என்ற தலைப்பில் ஜெயபாரதி எழுதிய கதைதான் ஜ்வாலாவின் புதுமையான முதல் திரைப் படத்தின் மூலக் கதை.

-ரா. முத்துசாமி

இரண்டு ஆசைகளுமே நிறைவேறாவிட்டாலும் பாதகமில்லை. ஏதோ வீட்டோடு இருந்து பெற்றோருக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தாலே, எனக்குப் போதும். ஆனால் அதுவும் முடியாது போலிருக்கிறது. அப்பாவும் அம்மாவும் என் பெற்றோர்களே இல்லை என்பதும் நான் வளர்ப்பு மகள்தான் என்பதும் சமீபத்தில் எனக்குத் தெரியவந்தது. அத்துடன் இவர்கள் சுயநலம் கருதி என்னைப் பெரும் பணக்காரரான ஒரு கிழக் கோட்டானுக்கு விற்றுவிடத் தீர்மானித்துவிட்டார்கள். குதிரை கீழே தள்ளியதுடன் அல்லாமல் குழியும் பறித்ததாம் என்ற கதையாகிவிட்டது என் வாழ்க்கை.

இந்த அநீதிகளை எதிர்த்துப் போராடும் ஆற்றல் எனக்கு இல்லை. பவானி அக்காவாக இருந்தால் பணிந்து கொடுக்கவே மாட்டாள். ஆனால் நான் பவானி இல்லையே? இந்தத் துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் சக்தியும் எனக்கு இல்லை. எனவே நான் யாருமறியாமல் ஓடிவிடப் போகிறேன். தற்கொலை செய்து கொண்டு சாவேனோ, பிச்சை எடுத்துப் பிழைப்பேனோ அல்லது எங்கோ கண் காணாத ஊரில் யார் வீட்டிலாவது பத்துப் பாத்திரம் தேய்த்துப் போட்டு வயிறு வளர்ப்பேனோ தெரியாது. இறைவன் விட்ட வழி.

உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் கிளம்ப மனம் இடம் தரவில்லை. அதனால் தான் எழுதினேன். தவறானால் மன்னித்து விடுங்கள். என் நினைவால் தாங்கள் அல்லல் பட வேண்டாம். இந்தக் கடிதம் கிழிந்து குப்பைத் தொட்டிக்குப் போகும்போது என் நினைவையும் அதிலேயே போட்டு விடுங்கள்.

பவானி அக்காவுக்கும் தங்களுக்கும் திருமணம் நடந்தேறியதாக என்றேனும் ஒரு நாள் கேள்விப்பட நேர்ந்தால் மகிழ்வேன்.

இப்படிக்கு
என்றும் தங்களை மறக்க முடியாத
. . . . . . . . . . . . . .

கமலா கையெழுத்துப் போடப் போன சமயம் வாசலில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. பரபரப்புடன் எழுந்து சென்று ஜன்னல் வழியே பார்த்தாள். ''யார் அது?''

''நான்தான் ரங்கநாதன்'' என்று பதில் கிடைத்தது.

''அப்பா—அம்மா இல்லையே?''

''பரவாயில்லை. நான் உன்னைப் பார்க்கத் தான் வந்தேன்.''

கமலாவுக்குக் 'குப்'பென்று வியர்த்துவிட்டது. 'இப்போது என்ன செய்வது? கதவைத் திறப்பதா கூடாதா?'

இரண்டொரு கணங்களே யோசித்த கமலா மனத்தைத் தேற்றிக் கொண்டாள். 'இந்தப் பட்டப் பகலில் என்னை என்ன செய்து விடும் அந்தக் கிழம்?' என்று தனக்குத்தானே தைரியம் சொல்லிக் கொண்டு வாசல் கதவைத் திறந்தாள். 'ஏண்டி மாப்பிள்ளையை வாசலில் நிற்க வைச்சே பேசி அனுப்பிவிட்டாயா? அவர் தன்னை அவமதித்து விட்டதா எண்ணிக் கொண்டிருந்தால் என்ன பண்றுவது?' என்று அம்மா கேட்டுத் தன்னைக் கோபித்துக் கொள்வாளே என்ற பயமும் கமலாவை இயக்கியது.

கதவைத் திறந்ததுமே சில்லென்ற வாடைக் காற்று ரங்கநாதனுக்கும் முன்பாக வீட்டினுள் நுழைந்தது. மேஜை மேலிருந்து காகிதங்கள் பறந்தன. ''அடடா! ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தாய் போலிருக்கிறது. எல்லாம் பறந்து விட்டதே'' என்ற ரங்கநாதன், ஒரு மூலையில் போய் விழுந்த, எழுதிய தாளைப் பொறுக்கி எடுக்க நடந்தார்.

''பாதகமில்லை, இருக்கட்டும். நான் எடுத்துக்கொள்கிறேன்'' என்று பதறினள் கமலா. வாய் குளறிப் பேசியதே தவிர உடல் செயலற்றுப் போயிற்று. ரங்கநாதன் செல்கிற அறையின் அதே மூலைக்கு அவசரமாகத் தானும் விரைந்து அவர் மீது பட்டும் படாதது மாக நெருங்கி நின்று தாளைப் பொறுக்க அவனுக்குக் கூச்சமாகவும் பயமாகவும் இருந்தது. தான் அந்தக் கடிதத்தில் எழுதியுள்ள ஏதோ ஒன்றை அவரிடமிருந்து மறைக்க முயல்வதாக அவர் கருதிவிடக் கூடாதே என்ற கவலை வேறு.

அவள் நின்ற இடத்தை விட்டு நகராமலே பதறிக் கொண்டிருக்க அவர் போய் அந்தத் தாளைக் குனிந்து எடுத்து விட்டார்.

கமலாவுக்கு உள்ளமெல்லாம் வெல வெலத்துப்போக உடலும் நடுங்க ஆரம்பித்தது.

''யாருக்குக் கடிதம்?'' என்று கேட்டபடியே நிமிர்ந்து அவளைப் பார்த்தார் ரங்கநாதன்.

(தொடரும்)




# ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்




உலகு காணும் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது. இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை; பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது. நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்க ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

## சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி—ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.


இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-FALOV-6-140 TM [R

பல்கலைக் கழகத்தின் பல கட்டடங்களில் ஒரு கட்டடத்தின் பல அறைகளில், ஓர் அறையின் ஒரு பாதியில் இருந்தது என் வகுப்பு. சிறிய அறைதான். மாணவர்களே இல்லாத வகுப்பறைக்கு இது போதும் என்று செயற்குழு தீர்மானித்துவிட்டது. நான் ஒரு தமிழாசிரியன். எனக்கு இப்போது முதற் தேவை மாணவர்கள். இந்த ஆண்டும் என் வகுப்பில் மாணவர்கள் சேரவில்லை என்றால் என் வேலை போய்விடும். மூன்று ஆண்டுகள் உபயோகம் இல்லை என்றால் எதையும் நிரா கரித்துவிடும் இந்தச் சமுதாயத்தில் நான் தமிழ் சொல்லிக் கொடுக்க விழைந்து சிறுமைப்படுவது என் கருமம்தான்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்' என்பது தமிழ் மறை.

இந்த நாட்களில் பிழைக்க பல வழிகள் இருக்கையில்... ஏவுகணைகளும் நுண் மின் சார இயலும் பயில எத்தனையோ சந்தர்ப் பங்கள் இருக்கும் போது நான் ஏன் பழந் தமிழ் பயின்றேன்? என் ஆசிரியர்தான் கார ணம். அவரை நான் சில நேரங்களில் எரிச்ச லுடன், பல நேரங்களில் பக்தியுடன் நினைவு கூர்கிறேன். என் ஆசான் (வித்துவான் நல்லந்துவனார்) பரம்பரை பரம்பரை யாகத் தமிழ் பயின்று வந்த குடும் பத்தில் வந்தவர். நூற்றாண்டுகளின் முன்னேற்றத்தில் அது கடினமாகிக் கொண்டே வந்தாலும் பிடிவாத மாகத் தமிழ்ப் பாடத்தை விடாது வந்த குடும்பம் அது. கடைசியில் என் ஆசிரியர்தான் தம் வித்தையைப் பிற ருக்குக் கற்பிக்க முடியாமல் தவித் தார். அவருக்கு வாரிசு இல்லை. மற்றவர் கவலைப் படவில்லை.




தம்முடன் அந்தக் கலை அழிந்துவிடுமே என மிக வருந்தினர். ஊழ்வினையால்தான் நாங்கள் இருவரும் சந்தித்தோம். எனக்குத் தமிழ் என்றால் என்னவென்றே தெரியாது. அவர் தமிழ்க் கடல். நாங்கள் இருவரும் ஒரு வழிச் செலவில் சந்தித்ததைச் சரித்திரம் பேச வேண்டும். விளைவு அவர் தமிழும் தமிழ்ப் பரப்பும் கவலைகளும் எனக்கு...

'என்றுமுள தென் தமிழ் இயம்பி இசை கொண்டவர்'களின் வரிசை குறுகிக் குறுகி என்னுடன் நின்றுவிடப் போகிறது. எனக்கு அச்சமாக இருக்கிறது. இந்த நூற்றாண்டில் இப்போது பேசப்படுவதும் தமிழ்தான்!

தமிழா அது... பழந் தமிழிலிருந்து இந்த நவீன விபரீதம் எவ்வளவு மாறிவிட்டது! உருத் தெரியாமல் இவர்கள் விஞ்ஞான வேட்கைக்கும் அவசரத்துக்கும் வளைந்து கொடுத்து... இன்றைக்கு உள்ள பல்லாயிரக் கணக்கான 'தமிழர்'களில் ஒருவருக்கேனும் பழந் தமிழ் தெரியாது. பழந் தமிழ் தெரிந்த ஒரே ஒருவன்.... இதோ நான்தான்.... இன் றைய தமிழை நான் வெறுக்கிறேன். சொற்க ளெல்லாம் ஓரசை ஈரசைச் சீர்களில் அடங்கி எத்தனையோ மொழிகளின் பாதிப்பை ஏற்றுக் கொண்டு இலக்கணம் மாறி, விகுதிகள் தேய்ந்து... ஏதோ ஒரு சுருக்கெழுத்துப் போல் ஆகிவிட்டது...

தமிழா இது!

'உனக்குப் புரிகிறதா?' என்பதற்கு 'புரி?' அவ்வளவுதான்! புரியவில்லை என்பதற்கு, ''அபுரி!'' முகரம் எப்பொழுதோ கரைந்து விட்டது... பழந் தமிழுக்கு 'அளதபின்!' என்னவொரு சிதைவு!

இந்தப் பிரம்மாண்டமான அழுக்கான புதிய அலைகளில் நான் ஒருவன் பழந்தமிழ் என்னும் வலிவற்ற தோணியில் தன்னந் தனியாக என்ன செய்ய முடியும்.... பழந் தமிழ்ப் பிரிவைப் பல்கலைக் கழகத்தில் மூடிவிடப் போகிறார்கள்.... யாராவது மாண வர்கள் வரமாட் டார்களா?

இந்த எண்ணங் களுடன் நான் சிந்தனையில் இருந்த போது என் அறைக்குள் இருவர் நுழைந்தனர். ஓர் இளம் பெண்ணும் ஆணும். வழி கேட்க வந்த வர்களோ என வியந்து, ''என்வேண்?'' என்றேன்.

''அள தபிள் நிவேத்யா?'' என்று கேட் டான் அவன்.

''ஆ!'' என்றேன்.

''தோன் அருள தபிள் புரிவைத்யா?''

''தோன்?'' என்றேன் ஆச்சரியத்துடன். அந்தப் பெண்ணும் தலை அசைத்தாள்.

எனக்கு உற்சாகம் பிறிட்டது. இரண்டு பேரும் பழைய தமிழ் கற்றுக் கொள்ள வந்திருக்கிறார்கள். இரண்டு மாணவர்கள் ! தமிழே, நீ பிழைக்கப் போகிறாய் !

''கார் பப்லு'', ''கார் பப்பி'' என்று அவர்கள் இருவரையும் உட்கார வைத்தேன். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்; உட்கார்ந்தார்கள்.

அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கும். அவனுக்கும் அதே வயதிருக்கும். அவள் நீண்ட புருவங்களின் கீழ் நடனமாடிய கரிய கண்களில் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தைக் கண்டேன். அவளை அருகே அழைத்து ஆசி கூறி அணைத்துக் கொண்டேன். அவனையும் அணைத்துக் கொண்டேன். அவன் கண்களில் கொஞ்சம் குறும்பு தெரிந்தது. சரிப்படுத்தி விடலாம்....

''யாக் தபின் ஸீக் வந்தா'' என்று கேட்டேன்.

''சும்'' என்றான் அவன்.

எனக்கு இந்தப் பதில் பிடிக்கவில்லை. சும்மா தமிழ் கற்றுக் கொள்ள வந்தார்களாம் ! நடுவிலே விட்டுவிடுவார்கள் !

''நடு அனிக் நாகோவா!'' என்றேன்.

அந்தப் பெண் தலை ஆட்டி, ''இல்த்யா ! தோன் சர்ச் விக் புலவரே ஸீக் த்யா ?''

'' அன தபின் சர்ச் ?''

''ஆ!''

எனக்குத் தெளிவு வந்தது. இருவரும் பழைய தமிழில் எழுதிப் பேசும் வரைக்கும் கற்றுக் கொள்ள விரும்புகிறார்களாம் ! அதற்குள் அவர்களை இலக்கியத்தில் ஈடுபடுத்தி விடலாம்....

இருவரும் இந்தக் காலத்து இளைய சமுதாயத்தினர். வேறு எவ்வளவோ வியப்புக்கள் இந்த விஞ்ஞான யுகத்தில் அவர்களுக்கு இருந்தும் அவர்கள் ஆர்வமாகவே பயின்றார்கள். தினம் தவறாமல் வகுப்புக்கு வந்தார்கள். சற்று வேகமாகவே கற்றுக் கொள்ளும் ஆசை இருந்தது அவர்களுக்கு. வகுப்பு நடந்த ஒரு மணி நேரம் முழுவதும் பழந்தமிழில்தான் பேச வேண்டும் என்று கட்டாயப்படுத்தினேன். விநோதமான விளைவுகள்...

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

'' நித்யா!''

'' உன் பெயர் சொல்லக் கூடாது நித்யா. உன் பெயர் என்ன என்ற வாக்கியத்தைச் சொல்லு !''

''அபுரி!''

'' 'அபுரி' என்று சொல்லக் கூடாது. எனக்குப் புரியவில்லை என்று சொல்ல வேண்டும் !''

''அபுரி!''

நான் தலையில் அடித்துக் கொண்டு, ''ஆத்மா, நீ இங்கு வா. நீ நித்யாவைக் கேள். 'உன் பெயர் என்ன?' என்று.''


''ஆத்மா !''


''அப்படி இல்லை. 'பெண்ணே, உன் பெயர் என்ன? சொல், பார்க்கலாம் ?''

''பெண்ணே ஆத்மா!''

''இன்றைக்குப் பாடம் போதும் !''

இருந்தும் அவர்களிடம் கற்றுக் கொள்ளும் விருப்பம் இருந்ததால், ஆவல் இருந்ததால் அவர்கள் படிப் படியாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.... பல்கலைக் கழக முதல்வரிடம் நான் பெருமையுடன் இரண்டு மாணவர்கள் சேர்ந்ததைச் சொல்லிக் கொண்டேன். அவர் இந்த ஆண்டு நான் தப்பித்ததைச் சொன்





''மூணு வருஷமா நானும் ஜோக்கு சொல்றேன். நீங்க சிரிக்காம இருந்ததே இல்லே. இன்னிக்குத் திடீரென சிரிக்காம இருக்கீங்களே, என்ன ஆச்சு உங்களுக்கு?''

''மூணு வருஷமாக ஒரே ஜோக்கை அடிச்சிட்டுத் திடீரென இன்னிக்கு மாத்தினா எப்படி? எனக்கு ஒண்ணுமே புரியலே.'' —நிர்மல்

---

னார். ''சமயம் இருந்தால் ஒரு முறை வகுப்புக்கு வந்து பார்க்கிறேன்'' என்றார். முதல்வரின் நீண்ட நாள் ஆசைகளில் ஒன்று பழந்தமிழ் கற்றுக் கொள்வது. சமயமில்லை....

உலக ஒற்றுமை விழாவில் எல்லாரும் கோலாகலங்களில் ஆழ்ந்து சோமம் பருகி முட்டாள்த்தனமான 'ஸ்டீரியோவிஷன்' என்று சொல்லப்பட்ட கேளிக்கைகளில் ஆழ்ந்த தினத்திலும் அவ்விருவரும் தமிழ்ப் பாடம் கற்றுக் கொள்ள வந்தது எனக்கு வியப்பும் ஆனந்தமும் கண்ணீரும் தந்தது. ''என் செல்வங்களா! உங்கள் மூலம் கன்னித் தமிழ் மறுபடியும் உயிர் பெறுகிறாள். நீங்கள் என்னிடம் பயின்று சென்று இன்னும் இன்னும் தமிழ் பரப்புங்கள். என் காலத்துக்குப்பின் இந்த வெட்டப்பட்ட மரம் மறுபடியும் துளிர்த்து இலைவிட்டுப் பூத்துக் காய்த்துக் கனிந்து மறுபடியும் விதைகள் பரப்பிச் செழித்துக் கொழிக்க வழி அமையுங்கள்'' என்றேன்.

''அபுரி'' என்றார்கள்.

இருந்தும் அவர்கள் 'அபுரி'க்கள் குறைந்து கொண்டே வந்தன. இருவரும் சாதாரணமான தினசரி உரையாடல்களைத் தமிழில் நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். உச்சரிப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்தி வந்தது.

''நித்யா, நீ இன்று நலமா?''

''நலம் ஆத்மா.... நம் ஆசிரியர் நலமா எனக் கேட்கலாமா?''

இருவரும்: ''ஆசிரியரே, நலமா?''

''நலம். என் தமிழ்ச் செல்வங்களே, நலம்!''

''இன்றைய பாடம் என்ன?''

''வியங்கோள் வினை முற்று...

'' இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்...''

''இரந்தும் என்றால் என்ன ஆசிரியரே!''

''பிச்சை எடுத்தல். இருபதாம் நூற்றாண்டு வரை மக்களில் பலர் பிச்சை எடுத்து வாழ வேண்டியிருந்தது. அந்தச் சமுதாயத்தை அமைத்த இறைவன் நாசமாகிவிடட்டும் என்று கூறுகிறார் வள்ளுவர்.''

''இறைவன் என்றால் யார்?''

''உலகைப் படைத்தவன்!''

''உலகை ஒருவன் படைத்தானா?''

'' அப்படித்தான் நாம் இன்றும் நம்ப வேண்டும்!''

''உலகியற்றியான் என்று ஏன் சொல்ல வேண்டும்? உலகியற்றியாள் என்று ஏன் சொல்லவில்லை?'' என்றாள் நித்யா.

'' அந்தக் காலத்தில் பெண்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக நம்பினார்கள்...''

'' என் மோச, என் ஹை மோச!''

'' நித்யா! புதுத் தமிழில் பேசக் கூடாது என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன்.''

''மன்னிக்க வேண்டும், ஆசிரியரே!''

பல்கலைக் கழக முதல்வர் எங்கள் வகுப்புக்கு வருவதாக இருந்த அன்றிலிருந்து அந்த விபரீதம் தொடங்கியது.

முதல்வர் வரப் போகிறார் என்று அவர்களை அரை மணி முன்னதாகவே வகுப்புக்கு வரச் சொல்லியிருந்தேன். அவர்கள் வரவில்லை. எனக்குச் சற்று வேதனையாக இருந்தது. முதல்வர் வந்தபோது மாணவர்கள் வரவில்லை என்றால் என்ன நினைப்பார்? அவர்களைத் தொலைப்படச் சாதனம் மூலம் தொடர்பு கொள்ள நினைந்து முதல் தடவையாக அவர்கள் கொடுத்திருந்த எண்களைத் தொட்டேன். அப்படிப் பெயர் கொண்ட எவரும் அந்த விடுதியில் இல்லையாம்! எனக்கு வியப்பாக இருந்தது. எதற்காக என்னிடம் பொய் எண்களைக் கொடுத்திருக்கிறார்கள்! நடுவில் ஏதாவது அவசர வேலை இருந்திருக்கலாம். வந்து விடுவார்கள், முதல்வர் வருவதற்குள் வந்து சேர்ந்துவிடுவார்கள்.... என்று எண்ணிக் கொண்டிருந்த போது வகுப்பறையின் கதவு திறந்து பல்கலைக் கழக முதல்வர் நுழைந்தார். காலியான அறையைப் பார்த்தார். புன்னகையுடன், ''மாணவர்கள் எங்கே?'' என்றார்.

''இதோ, வந்து விடுவார்கள். வருகிற சமயம்தான்'' என்றேன். அவர் பொறுமையுடன் ''வந்த உடன் எனக்குத் தகவல் தெரிவிப்பாய்'' என்று சொல்லிச் சென்றார்.

நான் காத்திருந்தேன்.

அன்று அவர்கள் வரவில்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள் என எனக்குத் தெரியாது... எப்படி அவர்களுடன் தொடர்பு கொள்வது? அவர்கள் மேல் எனக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. நாளை வரட்டும்!

மறு தினம் வந்தது. அவர்கள் வரவில்லை...

மறுதினம் மறுதினம் மறுதினம். ஒரு வாரம். ஒரு திங்கள்! அரை ஆண்டு!

அவர்கள் வரவேயில்லை. முதல்வர் மூன்று நான்கு தடவை விசாரித்தார். அதன்பின் ஒரு தினம் தன் அறைக்கு வருமாறு என்னை அழைத்தார்.

பயந்து கொண்டே சென்றேன். என் மாணவர்கள் எங்கே என்றார். நான் அவர்கள் வகுப்புக்கு வருவதை நிறுத்தி விட்டதைச் சொன்னேன். அவர்கள் காட்டிய ஆரம்ப ஆர்வத்தையும் சடுதியில் அவர்கள் அடைந்த முன்னேற்றத்தையும் சொன்னேன். அவர் கண்களில் நம்பிக்கை இல்லை. ஏன் அவர்கள் வரவில்லை என அவர்களுடன் தொடர்பு கொண்டு கண்டு பிடிக்கச் சொன்னார். அம்முயற்சிகளைப் பற்றியும் அவர்கள் தந்த பொய் அடையாள எண்ணையும் சொன்னேன். அப்போது அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

' நான் ஆதியிலிருந்தே பொய் சொல்லியிருக்கிறேன். தமிழ் வகுப்பை இந்த ஆண்டு




ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் புதல்வியும் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் சகோதரியுமான திருமதி **லக்ஷ்மி ஆச்சியின்** கணவரும் பிரபல பாங்கரும், மில்கள் அதிபருமான **திரு L. CT. L. பழனியப்ப செட்டியார் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா** *30-6-76* அன்று சென்னை, ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. இந்த வைபவத்துக்கு நகரத்தார் சமூகமும் சென்னை நகரப் பிரமுகர்களும் நண்பர்களும், தமிழ்நாடு மாநில ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்களும், பிரதம நீதிபதியும் இதர நீதிபதிகளும், அரசாங்க உயர் அதிகாரிகளும் திரளாக வந்திருந்து தம்பதிகளை வாழ்த்திச் சிறப்பித்தனர். திருமதி லட்சுமி ஆச்சி – திரு *L. CT. L.* பழனியப்ப செட்டியார் தம்பதிகள் நீடூழி வாழ இறைவன் அருள் புரிவாளாக !

**கீதாவுக்குத்**
**தேவை பொங்கி வரும் நுரை**



**தீபாவுக்குத்**
**தேவை பொலிவு தரும் சலவை**






# ரம்யா
## இவர்கள் இருவரையுமே திருப்தி செய்கிறது

பொங்கி வரும் நுரை–
பொலிவு தரும் சலவை




விலைப்பட்டியல்:
700 கிராம் ரூ. 8.23
500 கிராம் ரூ. 6.14
300 கிராம் ரூ. 4.01
50 கிராம் (பாக்கெட்) ரூ. 0.71
சலவைக் கட்டி (135 கிராம்) ரூ. 1.28
வரிகள் தனி

இத்தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
விற்பனையாளர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்

SAA UP/2120

மூடி விடாமல் இருப்பதற்காகச் சாகசம் செய்கிறேன்.' — இப்படித்தான் அவர் கருதி யிருப்பார். ''இன்னும் ஏழு தினங்களுக்குள் அவர்களை என் முன் கொண்டு வந்து நிறுத்தாவிட்டால் வகுப்பு மூடப்படும்...'' என்றார். எனக்கு என்ன கவலை? வகுப்பு மூடிவிட்டாலும் அரசாங்கம் என் பிழைப்பை எப்படியும் கவனித்துக் கொள்ளும். வேறு வேலை தரும்... ''பழைய தமிழ்ப் பாடல்களை எதிர்காலத்துக்காக நாடாவில் பதித்துக் கம்ப்யூட்டர் மொழியில் சுருக்கி அதை ஒரு சதுர மில்லி மீட்டர் காந்தக் கொப்புளத்தில் அடக்கிவிடலாம் என்று எத்தனை முறை நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேன். உன் வித்தை செத்துவிடும் என்று ஏன் பயப்படுகிறாய்? ஏன் பொய் சொல்கிறாய்?'' என்றார்.

ஒரு வாரத்தில் அவர்களை அவர் முன் கொணர்ந்து நிறுத்துவதாக வாக்களித்தேன்.

**நா**ன் இந்த மகத்தான நகரில்... இந்த விஞ்ஞான சொர்க்கத்தில் என் இரண்டு மாணவர்களைத் தேடப் போந்தேன். பெயர் ஆத்மா, நித்யா! அதுவும் உண்மைப் பெயரோ என்னவோ ! ஏன் என்னிடம் பொய் சொல்லியிருக்கிறார்கள்..... ஏன் வந்த தடத்தை அழித்திருக்கிறார்கள்.

இளைஞர்கள் கூடும் இடமெல்லாம் தேடினேன். விண்வெளிப் பயண அலுவலகங்களில், கம்ப்யூட்டர் விளையாட்டு அரங்கங்களில், வெள்ளிக்கிழமை கூடும் இளைஞர் சந்தைகளில்... இராக்கெட் பயண நிலையங்களில், இரவின் வெளிச்ச வீதிகளில்.... மைதானங்களில்... மத்திய நூல் நிலையங்களில்... தேடித் தேடிக் களைத்தேன்.

ஒரு தினம் பிற்பகல் சோமம் கலக்காத பானம் பருகத் தாக நிலையத்தில் உட்கார்ந்திருந்தேன். உள்ளே நட்சத்திர கானங்கள் மெலிதாகக் கேட்க முட்டாள் இயந்திரங்கள் இறைமையாகக் கேட்ட பொருள் கொடுக்க மெதுவாக அந்த இனிய பானத்தைப் பருகிக் கொண்டிருந்த போது எனக்கு அருகில் அமர்ந்திருந்தவர்கள் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

'' என்றைக்கு அவர்கள் வருகிறார்கள் ?''

''இன்னும் இரண்டே தினங்களில் !''

'' செய்தி அனுப்பிவிட்டாயா ?''

''ஆம்! நல்ல கற்புள்ள தமிழில்!''

ஆம்! அவர்கள் இருவரும் கற்புள்ள தமிழில்தான் உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால்.....அவர்கள் ஆத்மாவும் நித்யாவும் இல்லை. வேறு எவரோ!

அது எப்படி சாத்தியம்? என்னைத் தவிர மற்றொரு தமிழாசிரியன் இருக்கிறானா? என் மனத்தில் உற்சாகம் துள்ளியது.

அவர்கள் அருகில் சென்றேன். இளைஞர்கள்தாம். இருவரும் ஆண்கள். ''குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்'' என்றேன்.

திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

''யார் நீர்?'' என்றார்கள்.

''நீங்கள் பேசும் தமிழைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். உங்களுக்கு யார் கற்றுத் தந்தார்கள்?''

''உமக்கு இந்தத் தமிழ் புரியுமா?''



## ஒரு குத்தின் மதிப்பு!

**சமீபத்தில் கேலிக் கூத்தாக முடிந்த முகம்மது அலி இனோகி குத்துச் சண்டை போட்டியில் முகம்மது அலி ஆறு குத்துகள்தான் விட்டார். அவருக்குக் கிடைத்த மொத்தப் பணத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு குத்தின் மதிப்பு 10 லட்சம் டாலர் (சுமார் 70 லட்சம் ரூபாய்.)**

— நியூஸ்வீக் — பாபு

''நான்தான் இந்த உலகத்தின் இந்தத் தமிழின் ஒரே ஆசிரியன். அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உங்களைப்பார்க்கும் வரை...என் இனிய நண்பர்களே யாரிடம் நீங்கள் பாடம் கற்றீர்கள்? யார் சொல்லுங்கள்!'' அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். மூத்தவன் பேசினான்.

''நீர்தானா அது?''

''எது?''

''ஆத்மாவுக்கும் நித்யாவுக்கும் பாடம் சொல்லித் தந்தது?''

''ஆம், ஆம். எங்கே அவர்கள்?''

''அவர்கள் இங்கே இல்லை. ஊருக்குப் போய்விட்டார்கள்.''

''எந்த ஊருக்கு?''

அவர்கள் அதற்குப் பதில் சொல்லாமல் ''ஆசிரியரே, வணக்கம்! நாங்கள் ஆத்மா நித்யாவிடம்தான் பாடம் பயின்றோம். உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம். எங்கள் இருக்கைக்கு நீங்கள் வருகை தர வேண்டும். ஆத்மாவும் நித்யாவும் திடீர் என உங்களிடம் சொல்லிக் கொள்ள நேரமில்லாமல் புறப்பட வேண்டியிருந்தது. அவர்களுக்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். அவர்கள் நீங்கள் கற்றுக் கொடுத்தபடி தமிழ் பரப்புகிறார்கள் என்பதற்கு நாங்கள் உதாரணம். என் பெயர் பாரி இவன் பெயர் ஓரி!''

''அடடா! என்ன அழகான பெயர்கள்!''

''ஆசிரியரே! நாளை நீர் எம்முடைய வீடுக்கு வர வேண்டும். முகவரி கொடுக்கிறோம்!''

எங்களைச் சுற்றி யிருந்தவர்கள் விநோதமான புரியாத உரையாடலை வியந்து பார்த்திருக்க அவர்கள் தம் முகவரியைக் கொடுத்துவிட்டுப் பிரியா விடைபெற்றுச் சென்றார்கள்.

நான் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தேன் என்ருல் அது மிகையாகாது. உடனே முதல்வரிடம் சென்று இந்த இனிய செய்தியைச் சொன்னேன். அவர் முகத்தில் என்னளவும் நம்பிக்கை இல்லை. மறுபடி தமிழ் வகுப்பைத் தொடங்க என் சாகசம் அது என்ருர். நான் கோபத்தை அடக்கிக் கொண்டு மறுதினமே அந்த இருவரையும் அவர் முன் நிறுத்துகிறேன் என்று சவால்... மன்னிக்கவும் கூறுரைத்துவிட்டு வெளிப்பட்டேன்.

மறுதினம் சரியான கால அளவில் சரியான உடை அணிந்து கொண்டு கன்னித் தமிழ் பரப்பும் என் புதிய மாணவர்களைத் தேடி அந்த முகவரிக்குச் சென்றேன்.

பாரி! ஓரி! என்ன பெயர் அது! அப்படி ஒருவரும் அந்த முகவரியில் இல்லையாம். அரசாங்கக் கட்டிடக் கலை நிபுணர் ஜான்சன் என்பவரின் வீடாம் அது. நான் தவருன முகவரிக்கு வந்திருக்க வேண்டும்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. முதல்வரின் முகத்தில் நான் எப்படி விழிக்கப் போகிறேன்... அவரைப் பார்க்காமலேயே இருந்து விடலாம்! இருந்தும் என் மனத்தின் அடித்தளத்தில் இந்தச் சம்பவங்களில் ஏதோ வித்தியாசமான ஓர் இரகசியம் பொதிந்திருப்பதாகத் தோன்றியது. அவர்கள் பேசிக் கொண்ட வார்த்தைகள் நினைவு வந்தது.

''செய்தி அனுப்பி விட்டாயா?''

''ஆம். கற்புள்ள தமிழில்!''

என்ன செய்தி... எதற்காக இருவர் திடீரெனத் தோன்றித் தமிழ் பயின்று திடீரென மறைந்து அந்தத் தமிழை மற்ற இருவருக்குக் கற்பித்து... எல்லோரும் தம் அடையாளங்களை மறைத்து... ஏதோ ஒரு சூது இருக்கிறது இதில்.

முதல்வரைச் சந்தித்தேன். ''எங்கே உன் மாணவர்கள்?'' நான் முதலிலிருந்து கடைசி வரை விவரித்தேன். அவர்கள் பேசிக்கொண்டதையும் சொன்னேன். அவர் புன்னகை மறைந்தது. இதை அமைதி இலாகாவுக்கு உடனே சொல்ல வேண்டும் என்ருர். தலைகால் புரியவில்லை என்ருர்.

என் இருப்பிடத்துக்குச் சென்று சற்று நேரம் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் படித்தேன். மனம் அதில் படியவில்லை.

இருவர் வந்தார்; தமிழைக் கற்ருர்.

இருவர் சென்ருர்; இருவர் வந்தார். மற்று — ஆசிரியத் தளை தட்டியது. என் அறையில் இருந்த ஒலிப்படம் கூப்பிட்டது.

உடனே நான் மத்திய அமைதி இலாக்காவுக்கு வரவேண்டுமாம். மிக அவசரமாம்!

மத்திய அமைதி இலாக்காவின் இயந்திரக் காட்டின் மத்தியில் அந்த மூன்று இளைஞர்களும் பல்கலைக் கழக முதல்வரும் காத்திருந்தார்கள்.

என் தமிழ்ப் பாட விவகாரம் மிகவும் தீவிரமாகி விட்டதா? ''இது என்ன என்று உன்னுல் அடையாளம் கண்டுபிடிக்க முடியுமா?'' என்று காட்டினர்.

''மின் காகிதம்'' என்றேன்.

''காகிதத்தில் என்ன எழுதி யிருக்கிறது?'' எனக் கேட்டார்கள். அவர்கள் கண்களில் ஆர்வம் கொப்பளித்தது.

நான் காகிதத்தைப் பார்த்தேன். உலகப் பொது எழுத்துக்கள்தாம். அவற்றைப் பயன்படுத்திப் பழந் தமிழை எழுதியிருந்தது.

''அள தமிள்!'' என்றேன்.

''என் விக்! புரிவை புரிவை!'' என்ருர்கள் அவசரத்துடன்.

அந்தக் காகிதத்தில் இவ்வாறு எழுதி இருந்தது:

யாவையும் நலம். நேரம் சரியானதே. படையெடுப்பு நேரம் பூமி நேரத்தின்படி இருபத்து மூன்று ஐம்பது. முதற் தாக்குதல் கருங்கடலின் நடுவே உலக தலைமைச் செயலகத்தில்.... இயக்கம் வாழ்க!

இரண்டு நாட்களுக்கு முன் இந்தச் செய்தி மெர்க்குரி கிரகத்துக்கு அனுப்பப்பட்டதாம். அத்தனை சாகசங்களையும் அத்தனை கம்ப்யூட்டர்களையும் வைத்துக் கொண்டு அதன் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தார்களாம்; முடியவில்லையாம்.

என்னைக் கேட்டிருக்கலாம். ஆனுல் பழந் தமிழ் அது என்பது அவர்களுக்குத் தெரிந்தால்தானே என்னைக் கேட்டிருப்பார்கள்? என்ன சொல்கிறது என்று அறியப் பரபரத்தார்கள். அதைப் புதுத் தமிழில் விளக்கினேன். அவர்கள் ஒரு கணம் சிலை போல் நின்று விட்டார்கள்.

படையெடுப்பு! மெர்க்குரி கிரகக் கொள்ளைக்காரர்களிடமிருந்து... உடனே அவர்களில் ஒருவன் எதிரே இருந்த இயந்திரத்தின் மீது பாய்ந்து சிவப்புப் பொத்தான் ஒன்றை அழுத்தி 'அலர்ட்! அலர்ட் படையெடுப்பு எல்லா விண்வெளி நிலையங்களும் கவனிக்க...' என்று சங்கேத பாஷையில் அதி வேகத்தில் சொற்பொழிய ஆரம்பித்தான்.

மற்ருெரு கிரகத்தின் ஒற்றர்களுக்குத் தமிழ்ப் பாடம் கற்றுக் கொடுத்து, அவர்கள் இந்த வழக்கொழிந்த மொழியில் செய்தி அனுப்பிக் கொண்டு... அதைக் கடைசி நேரத்தில் தற்செயலாகக் கண்டுபிடித்து, அந்தத் தாக்குதல் தவிர்க்கப்பட்டு, நம் உலகம் பிழைத்த செய்தி யெல்லாம் இனி பழைய செய்தி.

என் தமிழ் ஆசிரிய வேலை போய்விட்டது. அதற்குப் பதில் அமைதித் துறையில் அசதிப் பிரிவில் பணி கொடுத்திருக்கிருர்கள். (சதி — அசதி)

நான் இன்னும்

''இருவர் வந்தார் தமிழைக் கற்ருர்'' என்கிற ஆசிரியப்பாவை முடிக்கவில்லை.

---




''ஏண்டா ஷோலே 70 எம். எம். படம் பார்த்துட்டியா?''

''பார்த்த மாதிரிதான்.''

''அப்படின்னு?''

''ஷோலேயை 35 எம். எம்மில் இரண்டு தடவை பார்த்தேன். அப்ப ஷோலே 70 எம். எம். நான் பார்த்ததாக ஆகலையா?''

— நிர்மல்



மணக்கால் ஸ்ரீ எம். எஸ். பிரணதார்த்திஹர அய்யர் பௌத்திரியும், கல்வி நிறுவனத்தில் டைரக்டராகப் பணிபுரிந்த ஸ்ரீ எம். பி. கல்யாணசுந்தரத்தின் குமாரத்தியுமான சௌ. ராதாவுக்கும், சென்னை சென்ட்ரல் பாங்க் பிராஞ்சு மானேஜர் ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ணன் அவர்களது குமாரன் சிரஞ்சீவி சூர்ய நாராயணனுக்கும், சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்

# T. NAGAR ARTS ACADEMY (REGD.)

15, RAGHAVIAH ROAD, MADRAS - 17. Phone: 445131

## 20th Anniversary Performances

---

8-8-76 at 9 A.M.

Inauguration of the Anniversary programmes

at 9-45 A.M.

A Novel programme
**"EAST MEETS WEST"**
(Folk Songs, Karagam etc. by Nattupura Arunkalai Manram and Western Classical & Light Music by Mascots)

at 6-30 P.M.

**"KRISHNAYA THUBYAM NAMAHA"**
(A dance solo recital with Lord Krishna as the theme)
by Kumari **PADMA SUBRAMANYAM**

9-8-76 at 6-30 P.M.

Grand Classical Music Consert by **JE SU DAS** with Chandrasekar—T. V. Gopalakrishnan & T. V. Vasan

10-8-76 at 6-30 P.M.

Grand Veena Concert by **CHITTIBABU** with Guruvayur Dorai and Palghat Sundaram

11-8-76 at 6-45 P.M.

Vani Kala Mandir presents
**"THANI AVARTHANAM"**

12-8-76 at 6-45 P.M.

Sri Lakshmi Theatres present
**"KALIYUGAM PIRANTHATHU"**

13-8-76 at 6-45 P.M.

Cho's **"WHY NOT"**

14-8-76 at 6-45 P.M.

Stage Friends present
**"ANJU PULI ORU PENN"**

15-8-76 at 6-00 P.M.

Grand Hindustani Classical Music by Padmasree **PARWEEN SULTANA**

---

**All the performances at**
**RAMRAU KALAMANTAPA**
**40, Habibullah Road, T. Nagar**

**Advance Booking from today—Contact at the academy office.**

# சேரமான் காதலி

கண்ணதாசன்

## அத்தியாயம் 19

## சரித்திரம் துவங்குகிறது

பகை நடுங்கும் புலிக் கண்கள் போல் அவள் கண்கள் சிவந்தன.

மெல்லிளங் கோதை நின்றாள்; அதிர்ச்சியுற்றிருந்த அவளுக்குக் கல்யாணியின் இத்தகைய ஆவேசம் பழக்கமானதே.

கள்ளியங்காட்டுக் கிருஷ்ணன் கோயிலில் அவள் கல்யாணியையா பார்த்தாள்; கண்ணகியை அல்லவா பார்த்திருந்தாள்!

தாவளி சகோதரிகளுக்கும், பத்மாவதிக்கும் இது இரண்டாவது காட்சி!

'ஏதோ அதிசயம் நடக்கப் போகிறது' என்று மெல்லிளங்கோதை கருதியது போலவே, அவர்களும் கருதினார்கள்.

ஆனால் சோழ மாதேவிக்கு இது முதல் காட்சி; அவள் மெய் சிலிர்த்தது.

''நாயகன் ஆணையை மீறக் கூடாது. உண்மை. ஆனால் நாயகனுக்கும் மந்திரியாவது பெண்மை. காரியம் பெரிதா, உங்கள் வீரியம் பெரிதா என்று உன் கணவனைக் கேட்காமல் அழைக்கிறான் என்று காதினில் கேட்டதும், காலடி தானாகவே நடை போடுகிறதே, ஏன்? கோதை! கோதையர் நாடு ஒரு கோதையால் வாழ்ந்ததென்று வரலாறு கூற வேண்டும். வா, என் பின்னால்'' என்று கூறியபடியே முன்னால் நடந்தாள் கல்யாணி.

முன்பு வஞ்சியில் கண்ட அதே நிகழ்ச்சி. எல்லோரும் பின்னால் சென்றார்கள். இதில் ஒரு புதிய அம்சம் சோழ மாதேவியும் பின்னால் சென்றது.

மந்திராலோசனை மண்டபத்தின் வெளிப்புறத்தில் குதிரைகள் தயாராக நின்றன. அவற்றின் அருகே மார்த்தாண்டவர்மனும், நாராயண நம்பூதிரியும், ஸ்ரீவல்லபரும் நின்றார்கள்.

மண்டபத்தின் வெளிமுகப்பிலுள்ள தூணில் சாய்ந்தபடி மிகவும் அமைதியாக ரவிவர்மன் நின்றான்.

ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தவரும் அங்கேயே வாயடைத்துப் போய் நின்றார்கள்.

காரியம் தன் கையைவிட்டுப் போய் விட்டது என்ற நினைப்பில் கைகளைக் கட்டியபடி நின்று கொண்டிருந்தான் விக்கிரம சோழன்.

மெல்லிளங் கோதைதான் வருவாள் என்று எண்ணிய மார்த்தாண்டவர்மனுக்குப் பெண்கள் படையெடுத்து வருவதும், முன்னால் ஒரு பெண் தலைமை தாங்கி வருவதும் தெரிந்தது. அவள் கையிலே ஒரு தீவட்டி இருந்தது.

அவர்கள் அருகில் வர வர ஏதோ ஓர் உணர்ச்சியால் தாக்கப்பட்டவர்கள்



போல நம்பூதிரியும், மார்த்தாண்ட வர்மனும் நின்றார்கள்.

நேரே நாராயண நம்பூதிரியிடம் வந்த கல்யாணி, தீவட்டியைத் தன் முகத்துக்கும், அவர் முகத்துக்கும் நடுவில் காட்டியபடி, '' நம்பூதிரி, பரசுராமன் மீது ஆணை. மண்டபத்துக் குள்ளே வா !'' என்றாள்.

முன்பு வஞ்சியில் இருந்ததுபோல் பிரக்ஞையற்ற நிலை இல்லை என்றாலும் அவள் சொல்லுக்குக் கட்டுப்பட வேண் டும் போல் நாராயண நம்பூதிரிக்குத் தோன்றிற்று.

அவர், அவள் கூடவே நடந்தார்.

குதிரை நடந்தால் வாலும் நடக் குமே, மார்த்தாண்டவர்மனும் நடந் தான்.

மந்திராலோசனை மண்டபத்துக்குள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள்.

பளபளக்கும் விதானமும், தூண் களும் கொண்ட அந்த மண்டபம் இப் போது முன்பு இருந்ததைவிடப் பிரகாச மாக இருந்தது.

இப்போது மற்றொரு நீதிமன்றம் ஆரம்பமாயிற்று.


வானவெளியில் ஒரு தேவதை தோன்றி உபதேசம் செய்வது போல் கல்யாணி பேச ஆரம்பித்தாள்.

'' சேர நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்க வேண்டிய பரிதாபத்துக் குரியவர்களே ! மானம் காக்க உயிர் விட்ட சேரமான் கணைக்கால் இரும் பொறையும், ஆட்சிச் சிறப்புக்குப் பேர்பெற்ற செல்வக் கடுங்கோ வாழியாதனும், பாரதப் போரில் சோறளித்த பெருஞ்சோற்று உதியனும் அலங்கரித்த ஆசனம் உங்களுக்குக் கிடைத்திருப்பதே ஐயன் கண்ணனின் கருணையால்தான். புலி இருந்த குகை யில் நாம் இருக்கிறோம் என்று நினைத் துப் பூரிக்க வேண்டாமா, நீங்கள்?

''ஆடும் ஆடும் மோதி னால், நரி ரத்தம் குடிக் கும். யானையும் யானையும் மோதினால் தந்தம் எடுக்க ஊர் கூடும்.

'' அன்பே நிலையாய், அறமே தலை யாய்க் கொண்ட குலசேகர ஆழ்வார் என்பு, சதை, குருதி, ஆவி அனைத்தை யும் தேசத்துக்கும், தெய்வத்துக்கும் அர்ப்பணித்தவர்.

''அவர் ஊட்டி வளர்த்தது மார்த் தாண்டவர்மனை; தூக்கி வளர்த்தது ரவி வர்மனை; அணைத்து வளர்த்தது நாரா யண நம்பூதிரியை; தழுவி வளர்த்தது தாய்நாட்டை.



''அவர் காத்த மண்ணிலே தங்களுக்குள் உறவு காண முடியாத பேதைகளா, நீங்கள் ?

'' வீச வேண்டிய நேரத்தில் வாளை வீச வேண்டும் ; பேச வேண்டிய நேரத்தில் உட்கார்ந்து பேச வேண்டும்.

''ரத்தபந்தமில்லாத சோழ குலத் தோன்றலுக்கு, சேர நாட்டின் மீது இருக்கும் அன்புகூட உங்களுக்கு இல்லை.

'' நீங்கள் விற்கொடியை முறித்துப் போடப் போகிறீர்களா ? வேறு கொடிக்கு இடமளிக்கப் போகிறீர்களா?


'' சொல்லுங்கள்; சொல்லுங்கள்.''

கல்யாணியின் உபதேசம் எல்லோருக்கும் தெளிவாகவே கேட்டது. முன்புபோல் கட்டுண்ட நிலையில் யாரும் இல்லை ; அதுதான் அதிசயம்.

ஆனால் நாராயண நம்பூதிரிக்குக் கோபமே வந்துவிட்டது.

''தாயே, நாங்கள் சரணாகதி அடைவதற்கா நீ ஆவேசம் கொண்டிருக்கிறாய்? வஞ்சியின் மகுடம் மார்த்தாண்ட வர்மனுக்குத்தான் என்பதிலே சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது? உட்கார்ந்து விவாதிக்கவும், ஒன்பது பேர் யோசனை கூறவும் அவ்வளவு சிக்கலான விஷயமா, வஞ்சியின் வாரிசு பற்றிய விஷயம் ? சோழ மன்னர் அழைத்தார் என்றுதான் இங்கே வந்தோமே தவிர, சொத்துரிமையை இழப்பதாகச் சத்தியம் செய்து கொடுக்க அல்ல. ஆண்டால் மார்த்தாண்டவர்மன் ஆளுவான்; மாண்டால் நாங்கள் இருவரும்





சேர்ந்து மாளுவோம்'' என்றார் நாரா யண நம்பூதிரி.

'' எரியும் நெருப்பில் தண்ணீரை ஊற்ற வேண்டியவளு, எண்ணெயை ஊற்றுகிறாய் ? சாத்திரம் கற்ற நம் பூதிரியை ஆத்திரம் அடக்கி ஆளு கிறதா ? தீந்திறன் கொண்ட நான், சினமின்றிப் பேசுகிறேன். உன் நாத் திறத்தை என்னிடமே காட்டுகிறாய். வாரிசில்லாமல் கிடக்கிறது சொந்த வீடு. அதற்கு ஒரு வழி காண அழைத் திருக்கிறது சோழ நாடு'' என்று மேலும் பேசப் போன கல்யாணியை இடைமறித்தார் நாராயண நம்பூதிரி.

'' வாரிசு இல்லையா ? வஞ்சிக்கு வாரிசு இல்லையா ? கண்ணபுரத்துக் காகுத்தனும், தசரத குமாரன் ராமச் சந்திர மூர்த்தியாய்க் காட்சி அளிக்கும் மார்த்தாண்டவர்மனைப் பார் தாயே, பார்'' என்றார் நம்பூதிரி.

'' என் கண்கள் குருடாகவில்லை. மார்த்தாண்டவர்மனின் வாரிசு பாத் தியதையை நான் மறுத்தேனு?'' என்று கேட்டாள் கல்யாணி.

'' அதை நீ மறுக்கவில்லை என்றால் பேச வேண்டியது என்னேடல்ல !'' என்றார் நாராயண நம்பூதிரி.

'' ரவிவர்மனேடுதான் ; நன்ருகப் புரிகிறது. ஆனல் இருவரது எதிர்கால மும் என் கண்ணுக்குத் தெரிகிறது. இங்கே நீங்கள் ஒரு முடிவுக்கு வர முடியாமற் போனுலும் அதுதான் நடக்கப் போகிறது. என்ன நடக்கப் போகிறது என்பதை நான் சொல்லவா? சொல்லவா ?'' என்று கத்தினுள் கல் யாணி.

'' சொல் தாயே, சொல் '' என்று கத்தினர் நாராயண நம்பூதிரி.

'' ரவிவர்மன், ரவிவர்மன்.... '' என்று இழுத்தாள் கல்யாணி.

அவள் வாயில் நுரை தள்ளியது.

'' மார்த்தாண்டவர்மன், மார்த் தாண்டவர்மன்.....'' என்று மேலும் அலறினுள் கல்யாணி.

அவள் வாயிலிருந்து ரத்தம் வெளி வந்தது.

'' வஞ்சி, வஞ்சி....'' என்று அலறி னுள் கல்யாணி.

அவள் கண்கள் மிரண்டன.

'' வேணுடு, வேணுடு....'' என்ருள் கல்யாணி.

அவள் குரல் இறங்கிற்று.

''தாயே!'' என்று ஓடிப் போய்த் தாங்கிக் கொண்டார்கள் பத்மாவதி யும், மெல்லிளங்கோதையும்.

விக்கிரமசோழன் பரபரப்படைந்து அரண்மனை மருத்துவருக்கு ஆள் அனுப்பினுன்.

ரவிவர்மன் சிலையாக நின்று கொண் டிருந்தான்.

பெண்கள் அனைவரும் கல்யாணி யைப் பள்ளி கொள்ள வைத்தார்கள்.

அரண்மனை மருத்துவர் கொஞ்சம் காலம் தாழ்ந்துவிட்டார் ; காலதேவன் அவரை முந்திக் கொண்டுவிட்டான் !

''தாயே...'' என்ற பெண்களின் குர லுக்கு நடுவே, ஆடவர்கள் கண்ணீ ரோடு நின்றிருந்தனர்.

சேர நாட்டின் எதிர்காலத்தைக் கணித்துக் கூற வந்த கல்யாணியை அவள் மீது ஆவேசம் கொண்டிருந்த சக்தி பேச விடாமல் கழுத்தை நெரித்து விட்டதா ? ஆம்; அப்படித் தான் தோன்றிற்று.

கல்யாணியின் மரணத்தில் கருத்து வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒன்று கூடி நின்ருர்கள்.

அரண்மனைக் காவலர்களும், மற்ற வர்களும் சொல்லக் கேட்டு, வாய் மொழியாகவே காட்டுத் தீ போல் பரவிய செய்தி, அரண்மனை இருந்த கோட்டை வெளியில் பெரும் கூட்டத் தைக் கூட்டிவிட்டது.

அந்தக் கூட்டத்தின் விருப்பத்துக் கிணங்க, கல்யாணியின் சடலம் மாலை அணிவிக்கப்பெற்றுக் கோட்டைவெளி யில் அழகான நவமாணிக்கக் கட்டிலில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

காலைத் தொட்டு வணங்கியவர்கள் பலர், 'கண்ணகி அவதாரம்' என்ற வர்கள் சிலர்; 'காணக் கிடைத்ததே பெரும் பாக்கியம்' என்றனர் ஒரு சாரார்.

சடலத்தின் வலதுபுறம் ரவிவர்மன், பத்மாவதி.

இடதுபுறம் மார்த்தாண்டவர்மன், மெல்லிளங்கோதை.

தலை மாட்டில் விக்கிரமசோழன், சோழமாதேவி.

காலடியில் நாராயண நம்பூதிரி.

சடலத்தை இடுவதற்கோ, சுடுவ தற்கோ உரிமை பெற்றவர் அவரல்லவா?

கணவன் மறைந்த நாளில் இருந்து பூச்சூடாத அவள் மீது, பூக்கள் தூவப் பட்டன. அந்தப் பூக்களுக்கும் பேசும் சக்தி இருந்தது.

இறுதிக் கிரியைகள் முடிந்த பிற் பாடு, மீண்டும் விக்கிரம சோழன், ரவி வர்மன், மார்த்தாண்டவர்மன், நாரா யண நம்பூதிரி மூவரிடமும் பேசத் தொடங்கினுன்.

இப்போது நிலைமையே தலைகீழாக மாறிவிட்டது.

''தம்பிரான் சுவாமிகள் சொல் வதை நான் ஒப்புக் கொள்கிறேன் '' என்ருன் ரவிவர்மன்.

# லக்மே லவெண்டர் டால்க்

## கொஞ்சி மணக்கும்...
## ...பிரெஞ்சு மயக்கம்.



தரித்துக் கொள்வீர்
லக்மே லவெண்டர் டால்க்.
பூத்த புது பிரெஞ்சு
லவெண்டர் பூக்களின்
நேர்த்தியான மணம்.
லக்மே லவெண்டர் டால்க்

**உங்கள் எழில்:**
**எங்கள் தொழில்.**




லக்மே

dCA/L-VC-LT/1N TAM.

''ரவிவர்மன் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன்'' என்றான் மார்த்தாண்டவர்மன்.

''மார்த்தாண்டவர்மன் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன்'' என்றார், நாராயண நம்பூதிரி.

''இதென்ன புதிய சிக்கல்? இனி ஒருவருமே முதலில் சொல்லமாட்டார்கள். மற்றவர்கள் சொல்லட்டும் என்று விட்டுவிடுவீர்கள். ஆகவே, நான் சொல்லட்டுமா...?'' என்று கேட்டான் விக்கிரமசோழன்.

திரை மறைவில் இருந்து, ''கொஞ்சம் இங்கே வாருங்கள்'' என்று அழைத்தாள் சோழமாதேவி.

எல்லோரையும் பார்த்து, ''அந்தப் புரம் அழைக்கிறது'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் விக்கிரம சோழன்.

''அவர்கள் சொல்வதை எல்லாருமே ஒப்புக் கொள்கிறோம்'' என்று அனைவரும் சொன்னார்கள்.

''விட்டுக் கொடுத்தாலும் தொல்லை; விடாப்பிடியாக நின்றாலும் தொல்லை'' என்று சொல்லிச் சிரித்தபடியே, உள்ளே சென்றான் விக்கிரமசோழன்.

சோழமாதேவியிடம் அவன் பேசிக் கொண்டிருக்கும்போது, ரவிவர்மனின் உடல் நலம் பற்றி விசாரித்தார் நாராயண நம்பூதிரி.

மார்த்தாண்டவர்மனின் உடல் நலம் பற்றி விசாரித்தான் ரவிவர்மன்.

விக்கிரமசோழன் திரும்பி வந்து வெளியிட்ட செய்தியில் எல்லோருக்குமே சிறிது அச்சம் ஏற்பட்டது என்றாலும், அதுதான், 'பரிகாரம்' என்று அனைவரும் நம்பினார்கள்.

என்ன அது?

சேர நாட்டை இரண்டாகப் பிரிப்பது.

ஆம். சேர நாட்டின் சரித்திரத்தில் அது முக்கியமான ஆண்டு.

'வஞ்சி' என்ற தலைநகரத்தின் கீழிருந்த ஒரே சேர நாட்டில் புதிய கிளை உற்பத்தியாகப் போகிறது.

அந்தப் பிரிவினைக்கு அவர்கள் சம்மதித்தார்கள்.

புதிய நாடு எது? புதிய தலைநகரம் எது?

வஞ்சியை யார் ஆள்வது? அந்த நாட்டை யார் ஆள்வது?

(தொடரும்)

# மாபெரும் மனிதர்

மூதிர்ந்த பிராயத்தில் ஒருவர் இயற்கை எய்திவிடுவது இயல்புதான் என்றாலும் பேரறிஞர்கள் மறையும்போது நமது இதயத்தை உலுக்கிவிடக் காரணம் நன்றி உணர்வு. ஒப்புவமை கூற முடியாத அவர்களது அறிவாற்றல், இயக்கத் திறன், சுருசுருப்பு எல்லாம் சேர்ந்து தேசத்துக்கு ஆற்றியுள்ள நன்மைகளை எண்ணும்போது நாம் நெகிழ்ந்து போகிறோம்.

ஸர் ஏ. ராமசாமி முதலியார் இத்தகைய மாபெரும் மனிதர்களில் ஒருவர். ஒரு பொன்விழா ஆண்டு காலம் தேசப் பணியில் முன்னணி வீரராய் விளங்கியவர். நாகரிக அரசியலும் தொழிற் துறையும் வளர்ச்சி பெற அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் அளப்பரியன. மிக நேர்த்தியான சொற்பொழிவாளராய் மேடை ஏறி, ஜஸ்டிஸ் கட்சித் தலைவராகச் செயல்பட்டு, சென்னை மாகாணத்தின் வளர்ச்சிக்குப் பலனிதமான பதவிகளிலும் இருந்து உழைத்தவர். அப்புறம் பாரதம் முழுவதற்கும் அவர் ஆற்றல் தேவைப்பட்டது. டில்லியில் பிரிட்டிஷ் அரசும், மைசூர், திருவாங்கூர் சமஸ்தானங்களும் அவர் சேவைகளைக் கோரிப் பெற்றன. மிக உயர்ந்த பட்டங்களைப் பிரிட்டிஷ் அரசு அவருக்கு வழங்கிக் கௌரவித்தது.



சுதந்திர பாரத அரசும் அவ்வாறே பத்ம விபூஷண் பட்டம் வரை பலவித கௌரவங்களை அவருக்கு அளிக்குமாறு நடந்துகொண்டார் திரு முதலியார். சுதந்திர பாரதத்தின் முதல் தேவை தொழில் வளர்ச்சியே என்பதை உணர்ந்தவராக அரசியலிலிருந்து விலகிக் கொண்டு ஏராளமான தொழிற் கூடங்கள் தமிழகத்திலும் பிற மாகாணங்களிலும் உருவாக வழி வகுத்தார். லட்சோப லட்சம் தொழிலாளர்கள் இன்று தங்கள் சம்பளத்துக்கு அவருக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து நாமும் பாரதம் உயரப் பாடுபட்ட ஒரு பெரிய மனிதருக்கு நமது அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கிறோம். அவர் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

## 20-அம்ச திட்டம்

**அம்சம்: 5**

கிராமப்புற மக்களின் கடன் சுமை நீக்கப்படுதல்.




## 20-அம்ச திட்டம்

**அம்சம்: 6**


விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் பற்றி மறு ஆய்வு செய்தல்.



## 20-அம்ச திட்டம்

### அம்சம்: 7


நீர்ப்பாசன வசதிகளை விரிவுபடுத்துதல்.



## 20-அம்ச திட்டம்

### அம்சம்: 8

மின்சக்தி உற்பத்தியில் வளர்ச்சி.



வெளியீடு:
இயக்குநர்: செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-600 009


பாடுவோம் பாப் மியூசிக்!
4
கதை: தமயந்தி/சாருகேசி
சித்திரம்: ராஜு
எஸ் மிஸ்டர் சரவணன், என்ன பயம் உமக்கு?
விளம்பரம் தருகிறேன் என்று சொல்லி விட்டு, பிரசிடெண்ட்டும் ஆகிவிட்டு, பணத்துக்குப் பட்டை நாமம் தீட்டிவிட்டால்?
ஹ, நானா விடுவேன்? முதலில் விளம்பரத்துக்கான செக். அப்புறம் தான் தலைவராகிற பேச்சு.
நல்ல ஐடியா சார்.
சார்! உங்களைத் தேடி ஒரு பெரிய மனிதர் காரில் வந்திருக்கிறார். எஸ்.எஸ்.லிங்கமாம்.
யார்? எஸ்.எஸ்.லிங்கமா? தொழிலதிபர் லிங்கம் தானே? வரச் சொல். என்ன ஆச்சரியம்! கும்பிடப் போன தெய்வம்...
சரவணன், கொடுங்கள் விளம்பர மாட்டர்களை... ம்.. இது முழு... இது அரை...
ஹ ஹ... யாரை முழுசு அரை என்று மட்டம் தட்டுகிறீர்கள்? என்னை இல்லை என்று நினைக்கிறேன்..ஹிஹி.
நாங்களெல்லாம் இருக்கிற போது உங்களைச் சொல்லுவோமா? இதெல்லாம் விளம்பரங்கள். சபா ஸுவனீரில் போடணும். உங்க விளம்பரங்கள் எங்கே ஒன்றையும் காணோம்? குறைஞ்சது இருபது வரணும், ஆமாம்.
அடேயப்பா, இருபதா! எல்லா விளம்பரமுமே என் தலையில் தானா!
நாலு பக்கத்திலே இருபது தானே உங்களது? பூ ஸீ... இந்தத் தடவை அதிக பட்சம் யார் விளம்பரம் தருகிறார்களோ அவரை சபாவின் தலைவராக்குகிறது என்று தீர்மானித்திருக்கிறோம்.



என்ன அதிர்ஷ்டம்! கந்தர்வ கானசபா தலைமைப் பதவி கிடைக்கிறது! லேசா என்ன?...
என்ன பிரமித்துப் போய் விட்டீர்கள்? இருபது பக்கம் எல்லாம் சர்வசாதாரணமில்லையா உங்களைப் போன்ற தொழிலதிபர்களுக்கு!
தலைமைப் பதவி நிச்சயம் என்றால் இருபது விளம்பரம் தரத் தயார்!
வெரி குட். விளம்பர மாட்டர்கள், பிளாக்குகள் எல்லாம் உம்ம பி.ஆர்.ஓ. விடம் கொடுக்கச் சொல்லி விடுங்கள்.
பத்து, லிங்கம் குரூப் தொழிலகங்களைச் சேர்ந்தது. மீதி பத்து என் தொழிலதிபர் நண்பர்களிடம் சொல்லி வாங்கித் தருகிறேன். போதுமா?
தாராளமாக, மிஸ்டர் பிரசிடெண்ட். தங்கள் உத்தரவு...
எப்போது உங்கள் சபா தேர்தல்? கான்வஸிங் ஏதாவது முன் கூட்டியே செய்யணுமா?
அதையெல்லாம் என்னிடம் விட்டுவிடும். கவலையே வேண்டாம். நீர் தான் ஜெயிக்கிறீர்.
பெரிய பெரிய மனிதர்களுடன் நெருங்கிப் பழக எத்தனை அரிய வாய்ப்பு!...
நான் வருகிறேன் மிஸ்டர் மார்க்க சகாயம்.
சார், விளம்பர மாட்டரை மறந்துடாதீர்கள்!


தொடரும்

# அவனைத் தண்டியுங்கள்



ஆயுள் தண்டனையோ மரண தண்டனையோ பெற்றுச் சிறைக்குள் இருக்கவேண்டிய நான், என்னுடைய மாளிகை போன்ற வீட்டில் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட அறையில் உட்கார்ந்து கொண்டு என்னுடைய இந்தக் கதையை எழுதுகிறேனென்றால், அதற்குக் காரணம் — தர்மம்தான்! நல்லவன் நல்ல விதமாகவே வாழ வேண்டும் என்ற நியதியை மீறக் கூடாது என்று என் பாதையில் குறுக்கிட்ட விதிக்கு ஆயிரம் கோடி நமஸ்காரம் சொல்லிவிட்டு விஷயத்துக்கு வருகிறேன். இன்றுகூட நீதிமன்றத்துக்குச் சென்று வழக்கு விசாரணையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதெல்லாம் என் மனம் எதற்கு ஆசைப்பட்டதோ அதை நினைத்துப் பார்த்தால் என்னைப் பற்றி எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. என் மனம் விரும்பியதைக் கடைசியில் சொல்லுகிறேன்.

என் பெயர்.... அதற்கு இப்பொழுது அவசியமில்லை. அவசியம் ஏற்பட்டால் பின்னால் சொல்லுகிறேன். கொழுத்த பணக்காரருக்குப் பிள்ளையாய்ப் பிறந்து மிகச் செல்லமாக வளர்ந்தேன். எனக்கு இரண்டு அண்ணன்கள் உண்டு. இருந்தாலும் நான் கடைசிப் பிள்ளை என்ற காரணத்தால் எனக்கு அதிக செல்லம் கொடுத்து ஓர் இளவரசனைப் போல் வளர்த்தார்கள். செல்லம் கொடுத்ததால் நான் சரியாகப் படிக்காமல் கண்ட பசங்களுடன் சேர்ந்து கெட்டுப் போயிருப்பேன் என்று நினைத்துவிட வேண்டாம். மிகவும் நல்ல பையனாகவே வளர்ந்து வந்தேன். நல்ல எண்ணங்களே என் மனத்தில் தோன்றும். யாருக்கும் நல்லது செய்யவே விரும்புவேன். என்னைப் பற்றி நானே சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் தோஷமில்லை. உண்மையை யார் சொன்னால் என்ன?


எனக்குப் பதினைந்து வயது இருக்கும். எந்த வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன் என்று சரியாக நினைவில்லை. அநேகமாகப் பத்தாவது வகுப்பாயிருக்கலாம். பலராமன் என்ற மாணவன்தான் என்னுடைய நெருங்கிய நண்பன். என் வயதுதான். ஆறும் வகுப்பிலிருந்தே இருவரும் பழகத் தொடங்கினோம். பள்ளிக்கூட நேரங்களில்தான் நாங்கள் நண்பர்கள். மற்றபடி அவன் வீட்டைப் பற்றியோ வீட்டாரைப் பற்றியோ எதுவும் எனக்குத் தெரியாது. நான் பள்ளிக்குப் போவது திரும்புவது எல்லாம் காரில்தான். அவன் எப்படி வந்து போய்க் கொண்டிருந்தான் என்பது எனக்குத் தெரியாது.

கோடை விடுமுறைக்குப் பிறகு மேல் வகுப்பில் போய்ச் சேர்ந்தேன். பழைய மாணவர்களுடன் புது மாணவர்கள் பலரும் இருந்தனர். பலராமனை மட்டும் காணவில்லை. ஒரு வாரத்துக்குப் பிறகு அவன் படிப்பை நிறுத்திவிட்டதாக யாரோ ஒரு பையன் சொன்னான்.

ஒரு நாள் பூகோள வகுப்பு நடந்து கொண்டிருக்கையில் ஆபீஸிலிருந்து கலர் சாக்பீஸ் வாங்கி வரும்படி ஆசிரியர் என்னை

---

ஆம்ஸ்டர்டாமில் உள்ள மிருகக் காட்சிசாலையிலிருந்து இரண்டு பெங்குவின் பறவைகள் காணாமல் போய் விட்டன. அவற்றைத் தேடிக் கொண்டு வந்த போது, அந்த இரண்டும் ஒரு கடை வாசலில் நின்றபடி, எதையோ ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தன.



அது ஒரு மீன் கடை. அவை கவனித்தது, மீன்கள் இருந்த கண்ணாடித் தொட்டியை! மீன் ஆசையில், இரண்டும் மாட்டிக் கொண்டன!

— டிட்பிட்ஸ் - சாமி

---

அனுப்பினார். ஆபீஸில் பலராமன் நின்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் அவனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. பேசாமலே நின்றான்.

''ஏன் ஸ்கூலுக்கு வரதில்லே, பலராமா?'' என்றேன்.

''இனிமே என்னாலே படிக்க முடியாது...'' என்று வருத்தத்துடன் சொன்னான்.

'' ஏன் படிக்க முடியாது ?'' என்றேன்.

''திடீர்னு எங்கம்மா செத்துப் போயிட்டாங்க....'' இதைச் சொல்லும்போது அவன் விழிகள் கலங்கிவிட்டன.

''அப்பா படிக்க வேண்டாம்கிறாரா ?''

'' அப்பா செத்துப் போய் ரொம்ப நாளாயிடுச்சே... அம்மாதான் எப்படியோ கஷ்டப்பட்டு எங்களைப் படிக்க வைச்சுக் காப் பாத்திட்டிருந்தாங்க.... இப்ப வீட்டுக்கார ரும் அறையைக் காலி பண்ணச் சொல்லிக்கிட் டிருக்காரு..... இன்னும் ஒரு வாரத்துக் குள்ளே நாங்க வேற எங்கேயாவது போயிட ணும்....''

'' எங்கே போவே ?''

'' எங்க போறதுன்னு தெரியல்லியே..... நான் மட்டுமானாலும் பரவாயில்லே... தெருத் திண்ணையிலே படுத்துடுவேன்.... என் தங்கை கோதை வேறே இருக்குதே.....''

'' சின்னக் குழந்தையா ?''

''யாரு, என் தங்கையா ?... செவன்த் படிச்சுக்கிட்டிருந்தா.... வகுப்பிலே அவள் தான் முதல்......''

அவனுடைய இருப்பிடத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அன்றிரவு அம்மா அப்பா இருவரிடமும் பலராமனைப் பற்றிச் சொல்லி அவர்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று கெஞ்சினேன். அப்பா எவ் வளவோ தர்ம ஸ்தாபனங்களுக்கு உதவி யிருக்கிறார். அம்மாவுக்கும் ரொம்ப இரக்க சுபாவம். இருவரையும் ஏதாவது அனாதை இல்லங்களில் சேர்த்துவிட முயற்சி செய்வதாக அப்பா சொன்னார். அவர்களுக்கு ஒரு வழி ஏற்படும் வரையில் எங்கள் வீட்டில் இருக்க வேண்டும் என்றேன். ரொம்பவும் பிடிவாதம் பிடித்தேன் என்று நினைக்கிறேன். மறுநாள் டிரைவரிடம் பலராமனின் இருப் பிடத்தைச் சொல்லி இருவரையும் அழைத்து வரச்சொன்னார் அப்பா. நானும்கூடப் போய்ப் பலராமனையும் அவன் தங்கை கோதையை யும் எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

கோதைக்கு அப்பொழுது பத்து வயது இருக்கலாம். ''ராஜாத்தி மாதிரி இருக்கா'' என்று அவளை அணைத்துக் கொண்டாள், அம்மா.

'' தரித்திர சாம்ராஜ்யத்தின் ராஜாத்தி போலிருக்கு....'' என்று முணு முணுத்தான் என் பெரிய அண்ணன். அதைக் கேட்டுச் சிரித்தான் சின்ன அண்ணன். அர்த்தம் புரியாத காரணத்தால் நான் பேசாமல் இருந்தேன்.

மூன்று பிள்ளைகளைப் பெற்ற என் அம்மா வுக்கு ஒரு பெண் இல்லையே என்ற குறை யைத் தீர்க்க வந்தவள் போல் கோதை அம்மா வுடன் ஒட்டிக் கொண்டாள்.

பலராமனை ஏதோ ஒரு தர்ம ஸ்தாபனத் தில் ஒப்படைத்துப் படிக்க வைத்தார் அப்பா. கோதை எங்கள் வீட்டிலேயே இருந்து கொண்டு படித்தாள்.

நான் கல்லூரியிலிருந்து வெளி வந்த அதே வருஷம் கோதை ஹைஸ்கூல் படிப்பை முடித் துக் கொண்டாள். மேற்கொண்டு அவளை என்ன செய்வது ?...

கல்லூரியில் சேர்ப்பதா, கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வதா ?... அப்பாவும் அம்மா வும் அதைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண் டிருந்தார்கள். கடைசியில் கோதையிடமே அபிப்பிராயம் கேட்டபோது,

''படித்தது போதும் என்று நினைக்கிறேன்...''என்று கூறிவிட்டாள். ''இவள் அழகுக்கும் குணத் துக்கும் தகுந்த பையனைத் தேடணுமே!'' என்றாள் அம்மா.

''ஏன்... நம்ம வீட்டிலேயே பிள்ளை இருக் கானே....!'' என்றான் அண்ணன் கிண்டலாக என்னைச் சுட்டிக்காட்டி. அவள் இந்த வீட் டுக்கு வரக் காரணமாயிருந்தவன் நான் என்ப தால் நானே அவளைத் திருமணம் செய்து கொள்ளலாமே என்று பரிகாசமாகச் சொன் னான் அண்ணன். அதற்குக் காரணம் கோதை யின் அழகு. அம்மா அப்பாவைப் பார்த்தாள். ''என்னை ஏன் பார்க்கறே...? உன் பிள்ளை யைக் கேளு'' என்றார் அப்பா.

'' என்னடா சொல்றே ?'' என்று கேட் டாள் அம்மா.



ஸ்ரீரங்கம் நரசிம்மன்

''பெரிய இடம்..... யோசனை பண்ணிச் சொல்லு..... சீர் செனத்தியெல்லாம்.....'' என்று ஆரம்பித்த அண்ணனை அப்பா ஓர் அதட்டல் போட்டு அடக்கினர். அடுத்த மாதம் எங்கள் திருமணம் நடந்தேறியது.

அப்பா பல தொழில்கள் நடத்தி வந்தார். இரண்டு அண்ணன்மாரும் அவர்களுக்குப் பிடித்தமானதைக் கவனித்துக் கொண்டனர். நான் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தேன். உதவாக்கரையாக, ஊதாரித்தனமாகச் செலவு செய்து கொண்டு திரிந்து கொண்டிருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். அப்பா அரும்பாடுபட்டுச் சேர்த்த பணத்தையெல்லாம் பல வழிகளில் விரயமாக்கத் தொடங்கியிருந்தேன். சீட்டாட்டம், ரேஸ், உருப்படாத நண்பர்கள்....

இரண்டு முறை அப்பா கண்டித்தார். அம்மா வருத்தப்பட்டாள். நான் திருந்தவில்லை. என்னைப் பற்றிய வருத்தத்துடனேயே அம்மா திடீரென்று காலமாகி விட்டாள்.

அம்மா காலமானதும் சகோதரர்கள் இருவரும் கட்சி கட்டினர். நான் பொறுப்பில்லாமல் இருப்பதால் உடனடியாகப் பாகப் பிரிவினை செய்ய வேண்டும் என்று கொடி பிடித்தனர். அப்பாவும் அந்த முடிவுக்கு வந்து மூவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். என் பங்குக்கு இருபது லட்ச ரூபாயாவது தேறும். ஆனல் என் பங்கைக் கோதையின் பெயரில் எழுதி வைத்துவிட்டார். என் பொறுப்பில் இருந்தால் எல்லாவற்றையும் அழித்துவிடுவேன் என்று பயந்தார். நியாயம்தான்.

தொழில் நிறுவனங்களைப் பங்கு போட்டுக் கொண்டனர் என் அண்ணன்மார். எனக்குக் கிடைத்தது பங்களாவும் ரொக்கமும். பாகப் பிரிவினையானதும் குடும்பம் பிரிந்துவிட்டது. பங்களாவில், அப்பா, நான், கோதை மூவர் மட்டுமே. மாதம் ஒன்றிரண்டு முறை தன் தங்கையைப் பார்த்துவிட்டுப் போவான் பலராமன். அப்பாவுக்கு வேண்டியவர் ஒருவர், பல பெரிய தொழில் நிறுவனங்களுக்கு அதிபர். ஒரு சமயம் பங்களாவுக்கு வந்து அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தார். என்னைப் பற்றி விசாரித்தார். மறு நாள் முதற்கொண்டு அவருடைய நிறுவனங்கள் ஒன்றில் என்னைப் பணியாற்றுமாறு சொன்னர். அப்பாவும் அதையே விரும்பினர். மறு நாள் முதல் அங்கு வேலைக்குப் போகத் தொடங்கினேன். மாதச் சம்பளம் ரூபாய் ஐந்நூறு ! சம்பளம் முக்கியமில்லை. சும்மா ஊரைச் சுற்றாமல் பொறுப்பான வேலை ஒன்றை மேற்கொண்டால் நான் உருப்படுவேன் என்று அப்பா எண்ணினர். அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. நான் உண்டு என் வேலை உண்டு என்று இருக்கத் தொடங்கினேன். முதல் மாதச் சம்பளத்தை அப்பாவிடம் கொடுக்கப் போனேன். ''நீயே வைத்துக் கொள்....'' என்ருர். நூறு ரூபாயை மட்டும் என் செலவுக்காக வைத்துக் கொண்டு மிச்சத்தைப் பாங்கியில் போட்டு வைத்தேன். எல்லா வரவு செலவுகளையும் அப்பாதான் பார்த்துக் கொண்டார். எனக்கு ஒரு செலவும் கிடையாது. எப்பொழுதாவது சினிமாவுக்குப் போவேன். பலராமன் நூறு, ஐம்பது என்று பல முறை என்னிடம் வாங்குவான். ஒவ்வொரு முறையும் ஏதோ ஓர் அவசரத்தைச் சொல்லுவான். திருப்பிக் கொடுத்ததில்லை. நானும் கேட்டதில்லை.

நான் வேலைக்குப் போகத் தொடங்கி மூன்று வருஷம் கழித்து அப்பா காலமானர். அப்பொழுது எனக்கு வயது இருபத்தாறு. அப்பா காரியம் முடியும் வரை என் இரு அண்ணன் குடும்பங்களும் பங்களாவில் தான். காரியம் முடிந்து எல்லோரும் போன பிறகு வீட்டில் பெரிய மாற்றத்தைக் கண்டேன். கொஞ்சம் கொஞ்சமாக என்னிடமிருந்து கோதை ஒதுங்கத் தொடங்கினள் ! சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. என் பக்கம் வருவதில்லை. எனக்குச் சாப்பாடுகூட வேலையாள் மூலம் வந்தது — அதுவும் என் அறைக்கு ! நான் கீழே என் அறையில் — அவள் மாடியில் ! அவள் இஷ்டத்துக்குக் காரை எடுத்துக் கொண்டு எங்கெங்கோ போய்க் கொண்டிருந்தாள். பழைய டிரைவரை நிறுத்திவிட்டுப் பலராமனே காரை ஓட்டிக் கொண்டிருந்தான். இப்பொழுதெல்லாம் அவன் என்னை லட்சியம் செய்வதே இல்லை. அண்ணனும் தங்கையும் திடீர்ப் பெரிய மனிதர்களாகிவிட்டார்கள். பல தினங்கள் 'பார்ட்டி' என்று எங்கோ போயிருப்பார்கள். நான் ஆபீசிலிருந்து வீடு திரும்பும் பொழுது ஷெட்டில் கார் இருக்காது. வேலைக்காரன் மூலம் தெரிந்து கொள்வேன். வேலைக்காரன்கூட என்னை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. சில சமயங்களில் அவர்கள் பணத்தை விரயம் செய்து கொண்டு அட்டகாசமாய் இருப்பதைப் பார்க்கும்பொழுது என் உடலும் உள்ளமும் எரியும். எல்லாரையும் கழுத்தைப் பிடிச்சு வெளியில் தள்ள வேண்டும் போல் இருக்கும். அது நடக்கக்கூடிய காரியமா?... எந்த நிமிஷமும் என் கழுத்தில் அவர்கள் கை வைக்கலாம் ! சொத்து முழுவதும் அவள் பெயரில் இருந்ததே!

இரண்டு வருஷ காலம் என் பங்களாவிலேயே நரக வேதனை அனுபவித்துக்கொண்டு ஒதுங்கியிருந்தேன். இப்பொழுதெல்லாம் யாரோ ஒரு நடிகன் வந்து போய்க் கொண்டிருந்தான். கோதை அடிக்கடி அவனுடன் வெளியில் போவாள். ஏதோ சினிமாப் படம் எடுக்கப் போவதாகத் தெரிந்தது. எல்லாப் பொறுப்பும் பலராமனுடையது. அவனுக்கென்று ஒரு சின்னக் கார் வாங்கப்பட்டது.

ஒரு சமயம் கோதை நான்கு நாட்கள் பங்களாவில் தென்படவில்லை. வெளியூர் போயிருப்பதாக வேலைக்காரன் யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தான். நடிகனுடனு?

இரண்டு வருஷங்களாக என்னுடன் பேச்சு வார்த்தை கிடையாது. யாருடன் போனல் என்ன? இரண்டு வாரங்கள் கழித்து டாக்டர்

---



அர்த்தமே வேறுதான் !

'Copy - Right' **என்ருல் நமது சினிமா கதாசிரியர்கள் நினைத்துக்கொள்ளும் அர்த்தம்** 'Right to Copy' - சினிபிளிட்ஸ் - பாலி

பங்கஜத்தை எங்கோ தற்செயலாகப் பார்த்தேன். அந்த அம்மாளுடைய நர்ஸிங்ஹோமில் தான் நான் பிறந்தேன். முதலில் சௌக்கியம் விசாரித்தாள். பிறகு, "உனக்கு எவ்வளவு குழந்தைகள்?" என்று கேட்டாள். "ஒன்றுமில்லை !" என்றேன். "ஒன்றுமில்லையா?... அப்படியிருக்கையில்?..." என்று தயங்கினாள்.

"என்ன டாக்டர் ?" என்று கேட்டேன்.

"உன் மனைவி ஏன் அபார்ஷன் செய்து கொண்டாள் ?" என்று கேட்டவள் என் பதிலைக்கூட எதிர்பார்க்கவில்லை. வேறு யாரோ வரவே அவர்களைப் பார்க்கப் போய் விட்டாள்.

சொத்து முழுவதும் என்னை விட்டுப் போயிற்று. பொறுத்துக் கொண்டேன். மனைவி என்னை அலட்சியப்படுத்தினாள். தாங்கிக் கொண்டேன். ஆனால் இந்தச் செய்தி என் தலையில் இடிபோல் விழுந்தது! இனியும் அவளை விட்டு வைக்கக் கூடாது ! நன்றி கெட்ட நாயை வெட்டிப் புதைக்க வேண்டும்!

கோபாவேசத்துடன் நடந்து கொண்டிருந்தேன். 'படார்' என்று ஏதோ வெடித்தது. எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு காரின் டயர் வெடித்த சப்தம்தான் அது. ஒரு கணம்தான். நிலைதடுமாறிய அந்தக் காரைப் பார்த்தேன்.

மீண்டும் எனக்கு நினைவு திரும்புகையில் நான் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டிருந்தேன். இரண்டு தினங்கள் நினைவின்றிக் கிடந்தேனாம். என் தலை, கால், கையெல்லாம் கட்டுப் போடப்பட்டிருந்தது. டயர் வெடித்ததால் நிலைதடுமாறிய கார், என் மீது மோதி என்னைத் தூக்கி எறிந்திருக்கிறது. டாக்டர் வந்து என்னைப் பார்த்துவிட்டு, "ஒன்றும் கவலை இல்லை. இன்னும் இரண்டு தினங்களில் டிஸ்சார்ஜ் செய்து விடுவோம்..... கொஞ்ச நாளைக்கு வலது கையால் அதிக கனமான பொருளைத் தூக்கக் கூடாது...." என்றார். என் அண்ணன்மார் இருவரும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர். என் விழிகள் யாரையோ தேடின. ஒன்றும் புரியாத வகையில் டாக்டரைப் பார்த்தேன். "உங்கள் மனைவி கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டாள் !" என்றார். எப்பொழுது என்று கேட்டேன். நான் கார் விபத்தில் அடிபட்ட அதே இரவு கோதை கொல்லப்பட்டிருக்கிறாள். 'யார் கொலை செய்தது?' என்று நான் கேட்பதற்குள் என் அண்ணன்மாரில் ஒருவன் "பலராமனே கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டான்..." என்றான். நான் செய்ய நினைத்ததை, அதே நேரத்தில் பலராமன் செய்திருக்கிறான்! பண விஷயத்தில் அண்ணன் தங்கைக்குள் ஏதோ தகராறு.

அந்தக் காரின் டயர் வெடிக்காமலிருந்திருந்தால் அந்தக் கொலையை நான் செய்திருப்பேனா?.... நல்லவன் நல்லவனாகவே வாழ வேண்டும் என்று தர்மம் தலையிட்டு என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டதா ? எந்தக் கையால் கொலை செய்ய நினைத்தேனோ, அந்தக் கையில் அடி! தவறு செய்ய நினைத்ததற்கே தண்டனை !

கொலை செய்தவனுக்கு என்ன கிடைக்கும் ?

அதைப் பார்க்கத்தான் நீதிமன்றத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். கோர்ட்டில் யாரோ ஒருவர் இன்னொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. " இந்தப் பயல் பலராமன் குடும்பம் நான் இருக்கும் ஸ்டோரில்தான் இருந்தது. இவனுடைய தாயார் ஒரு நாடக நடிகை. சினிமாவில் சேர வேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டாள். ஒன்றும் நடக்கவில்லை. ரெண்டு குழந்தைகளானதும் நாடகங்களுக்கும் போக முடியல்லே..... காலம் தள்ளியாகணுமே ? அப்படியும் இப்படியுமாயிருந்து செத்தாள்... இந்தப் பயலுக்கும் இவன் தங்கைக்கும் யாரோ ஒரு பெரிய மனிதர் ஆதரவு கொடுத்து வந்தார். அமைதியா வாழ முடிஞ்சுதா ?.... தங்கையைக் கொன்று விட்டுக் கூண்டில் நிற்கிறான்.... விதி யாரை விட்டது ?" என்று சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அவர்களுடைய பூர்வோத்திரம் தெரிந்து கொண்டேன்.

வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

என் மனைவியைக் கொன்றவனுக்குக் கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும் என்று என் மனம் விரும்புகிறது. நான் செய்ய நினைத்ததை அவன் செய்துவிட்டுக் கூண்டில் நிற்கிறான். நான் சுதந்திரமாக என் சொத்துக்களுக்கு நானே அதிபதியாக இருக்கிறேன். அவனுக்குக் கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேனே, அது ஏன்?

எனக்குப் புரியவில்லை.

**கே: எல்லா ஹேர் டைகளுமே உபயோகிக்கக் கடினமா?**

ப: அப்படிச் சொல்ல முடியாது. கோத்ரெஜ் ஹேர் டை உபயோகிக்க வசதியானது. இனிய நறுமணம் கொண்டது. மிக மென்மையானது.

**கே: அது மிக விலையுயர்ந்ததா?**

ப: தோள் அளவு கூந்தல் உங்களுக்கு இருந்தால் ஒரு குப்பி ஹேர் டையும் டைவலப்பரும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரும். அதுவும் நீங்கள் வீட்டிலேயே சாயமேற்றிக் கொண்டால் மாத மொன்றுக்கு சுமார் ரூ. 3/- செலவாகும்.

**கே: சாயமேற்றியபின் என் கூந்தல் இயற்கையான கருமை நிறம் பெறுமா?**

ப: நிச்சயமாக. ஆனால் உங்கள் கூந்தலின் இயற்கையான நிறத்திற்கு ஏற்ற வண்ணத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்கள் கூந்தல் இள நிறமுடையதாக இருந்தால் கோத்ரெஜ் கரும் பழுப்பு ஹேர் டையை உபயோகிக்கவும்.




# கோத்ரெஜ்

பர்மனெண்ட் ஹேர் டை

இதர ஹேர் டைகளை பிந்தியவைகளாக்கி விட்டது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட

இயற்கையான கருமை, கரும்பழுப்பு.

இங்கே வெட்டவும்

# இப்போது உபயோகித்துப்பார்க்க சலுகை

# ரூ. 1/- தள்ளுபடி

கோத்ரெஜ் பர்மனெண்ட் ஹேர் டை வாங்கும் போது

இந்தக் கூப்பனை வெட்டியெடுக்க. விவரங்களைப் பூர்த்தி செய்க. உங்கள் கோத்ரெஜ் விற்பனை-யாளரிடம் சென்று, கோத்ரெஜ் பர்மனெண்ட் ஹேர் டை—இயற்கையான கருமை அல்லது கரும்பழுப்பு—மீது ஒரு ரூபாய் தள்ளுபடி பெறுங்கள். எதாவது ஒரு பேக் வாங்குகையில் ஒரு முறை ஒரு கூப்பன்தான் உப-யோகிக்கலாம்.

விற்பனையாள அன்பரே,

இந்தத் தள்ளுபடிக் கூப்பனை 30-11-1976 வரை ஏற்றுக் கொள்ளவும். எங்கள் பிரதிநிதி அல்லது விநியோகஸ்தரிடம் 31-12-1976 க்குள் அவற்றைக் கொடுக்கவும்.

பெயர்: ______________________

______________________

விலாசம்: ______________________

______________________

இந்த தள்ளுபடிக்கூப்பனைக்கொடுக்கும்-போது, அதே அளவு எண்ணிக்கை கோத்ரெஜ் பர்மனெண்ட் ஹேர் டை பேக்குகள் நீங்கள் வாங்கும் பட்சத்தில், ஒவ்வொரு தள்ளுபடிக் கூப்பனுக்கும் ரூ. 1 என்ற விகிதத்தில் (சேவைக் கட்டணமாக 10 பைசா சேர்த்து) உங்களுக்குப் பணம் திருப்பித் தரப் படும்.

**சலுகை 30-11-1976 வரையே.**

இங்கே வெட்டவும்.

AVM

சின்னங்களைப் பார்த்து வியந்தபடி, அந்தக் கிராமத்து வீட்டில் காலடியெடுத்து வைத்தாள் சித்ரா. இரண்டு வருஷங்களாய் அவள் அப்பாவைப் பார்க்கவில்லை. அங்கே வரவும் இல்லை. போன வருஷம் வேனில் விடுமுறையின் போதுகூட, மலை ஏறும் கோஷ்டி ஒன்றுடன் டார்ஜிலிங்கிற்குப் போய்விட்டாள். அங்கே சறுக்கி, காலில் இலேசான முறிவு ஏற்பட்டதும்... ஒரு மாதம் வெலிங்டன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்ததும்... அப்போதும் கூடக் கடிதம்தான். அப்பாவை அநாவசியமாக வரவேண்டாம் என்று எழுதி விட்டாள்.

காவிரிக் கரைக்குப் போய்க் குளித்து விட்டு வந்தாள். டில்லியின் நீச்சல் குளத்தில் இந்த இனிமை ஏது? சித்ராவின் மனத்தில் பின்னரங்கில் எழுந்தன நினைவுகள். அம்மா மறைந்து போனது...அப்பா கட்டுப்பாடாக மறுமணம் செய்து கொள்ளாமல் இருந்தது... அவளை அவரே ஒரு தாயாக இருந்து வளர்த்துப் படிக்க வைத்தது... இப்போது அவள் கட்டடக் கலையில் பட்டதாரியாகப் போகிறாள்.

டில்லி வேலையிலிருந்து அப்பா 'ரிடையர்' ஆகி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. தஞ்சையின் காவிரி ஸ்நானத்துக்கும், பச்சைப் புடவை கட்டிய வயல்களின் பசுமைக்கும், ஆசைப்பட்டுக் கொண்டு கிராமத்துக்குப் போய்விட்டார். இரண்டு ஆண்டுகளாக அவளுக்கு டில்லியில் ஹாஸ்டல் வாசம்தான்.


கிராமத்துக்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. அப்பாவுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்த மதுரம், சித்ரா வந்த சமயத்தில்தான் போகலாம் என்று லீவு வாங்கிக் கொண்டு போய்விட்டாள். அப்பாவின் மென்மையான ருசிகள் சித்ராவுக்குத் தெரியும். காவிரி மண்ணின் சுவை சேர்ந்த கறி காய்க்கும், அவளுடைய கை நயம் தெரியும் சமையலுக்கும் —ஓ! அப்பா பாவம்... இந்த மாதிரி அவர் ருசித்துச் சாப்பிட்டு எத்தனை நாட்கள் ஆகின்றனவோ?

ஒன்றுதான் அவளுக்குப் புரியவில்லை. அவள் யாருடனும் பேசவில்லை. அங்கே யாருடனும் பழகவும், சிநேகிதம் செய்து கொள்ளவும் தோன்றவில்லை. ஆயினும் தன்னைக் கண்டதும், தெரியாதவர்களும்கூட ஏதோ தமக்குள் ரகசியம் பேசிக் கொள்வதும், தோளை இடித்துக் கொள்வதும், தான் அவர்களைப் பார்க்கவில்லை என்று நினைத்துக் கொண்டபோதெல்லாம் தன்னைச் சுட்டிக் காண்பிப்பதும் அவளுக்குப் புரியவில்லை; பிடிக்கவும் இல்லை. கோவில், ஆற்றங்கரை, வீட்டுக் கொல்லை, எங்கே போனாலும் இந்தக் காட்சிதான் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தன. சுட்டிக் காட்டும் அந்த அடையாள விரல்—

விடியற்காலை நேரம். சாலை வழியாகக் கடந்து வாய்க்கால் மீது போட்டிருந்த இரட்டைத் தென்னங் கட்டைகளின் மீது காலை வைத்து நடந்து கொண்டிருந்தாள்.

திடீரென்று கால் பிடி நழுவி, சறுக்கித் தண்ணீரில் விழுந்தாள். முழங் காலில் அந்தக் கட்டை இடித்த வலி. வயலுக்குப் போய்க் கொண்டிருந்த ஆட்கள் தூக்கிக் கொண்டு வந்து போட்டதும், அப்பா விசாரித்ததும் கூடக் கனவுப் படலமாகத்தான் தோன்றியது.

டார்ஜிலிங் போனபோது காலில் அடிபட்ட அதே இடத்தில் மீண்டும் அடிபட்டிருந்தது. கீழே காலை ஊன்றினால் பளிச்சென்ற



# சுட்டு விரல்!



லக்ஷ்மி சுப்பிரமணியம்

வலி. கும்பகோணத்துக்குப் போய் எக்ஸ்–ரே எடுத்துக் கட்டுப்போட்டுக் கொண்டு வந்தார்கள். மூன்று வாரங்கள் படுக்கையிலிருந்து அசையக் கூடாதென்று டாக்டர் உத்தரவு போட்டார்.

சமையலுக்கும் உதவிக்கும் ஆள் தேவையாக இருந்தது. லீவு போட்டுவிட்டு ஊருக்குப் போனவளைத் திரும்ப வரவழைத்துவிட்டார் அப்பா.

கைப் பெட்டியுடன் வந்து இறங்கிய மதுரத்தைப் பார்க்கவே அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது. முப்பத்தைந்து வயது மதிக்கலாம். ஆனால் அந்த வயது தெரியாத, கட்டும் இறுக்கமும் விடாத இளமை.

கொஞ்சம் ஊன்றி நடக்க டாக்டர் அனுமதி கொடுத்திருந்தார். அப்பாவுடன் வாசலில் உட்கார்ந்திருந்தாள் சித்ரா. அப்போது இருட்டிச் சிறிது நேரம் ஆகி இருந்தது. வாசல் மாடத்தில் வெண்கல விளக்கை ஏற்றிக் கொண்டு வந்து வைத்தாள் மதுரம். அந்த ஒளி அவள் முகத்தில் பரவியபோது, அந்த மினுமினுப்பைக் கண்டு, சித்ராவின் உடலில் இலேசாக ஒரு பரபரப்பு. இரண்டு மூன்று கணம் இலை சிரிப்பது மாதிரி ஓடுவது தெரிந்தது. சட்டென்று அப்பாவைத் திரும்பிப் பார்த்தவள், ஒரு விநாடி திடுக்கிட்டுப் போனாள். மதுரத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் அவர். சித்ரா குரல் கொடுத்ததும், பதிலுக்குச் சரியாக வார்த்தை வராமல் சமாளிப்பது புரிந்தது.

கால் சரியாகி, உடம்பும் தேறி விட்டது. வெளியே கொஞ்ச தூரம் நடந்து போய் விட்டு வருவாள். வீட்டில் நுழைந்து அடுக்களையில் காரியம் எதுவும் செய்வதில்லை. மதுரத்தைப் பார்க்கவே ஏதோ ஒரு வெறுப்பு.

கூடத்தைக் கழுவின நீரை உள்ளங்காலால் துழாவித் துழாவி நடந்து கொண்டிருந்தாள் சித்ரா. அந்த வெய்யில் வேளைக்கு, கூடத்தின் சிமெண்ட் வழுவழுப்பும் ஈரமும் காலுக்கு ஜில்லென்று இதமாக இருந்தது. மனசே குளிர்வது போலத் தோன்றிற்று.

ஈரத்தை ஒற்றித் துடைக்கப் பக்கெட்டும் துணியும் கொண்டு வந்தாள் மதுரம். உட்கார்ந்து ஒற்றிப் பிழியத் தொடங்கினாள்.

''இப்போது ஒன்றும் ஒற்றித் துடைக்க வேண்டாம். கொஞ்ச நேரம் இப்படியே இருக்கட்டும்'' என்றாள் சித்ரா.

'' எதற்காக ? நீ கால் சறுக்கி விழுந்து மறுபடியும் காலை உடைத்துக் கொள்ளவா?''

'' வாயை மூடு. யாரிடம் இப்படிப் பேசுகிறாய் நீ ?''

மதுரம் பதில் சொல்லவில்லை. சற்றே கலங்கிய கண்களுடன் நிமிர்ந்தாள். அவளுடைய பார்வை அவளைக் கடந்து பார்த்தது. சித்ரா திரும்பினாள். அப்பா அங்கே நின்று கொண்டிருந்தார்.

'' சித்ரா ! நீ அவளை இப்படிப் பேசுவதும் நடத்துவதும் எனக்குப் பிடிக்கவில்லை. நீ படித்த பெண். 'டீஸண்டாக' நடந்து கொள்ள வேண்டும்.''

அப்பாவின் வார்த்தை ஒரே வார்த்தை. அதன் அரவம் தணல் மாதிரி ஜ்வலித்தது.

ஒரு வாரம் ஆகி இருக்கும்.

தில்லியில் இருந்தபோது ஒரு கட்டட நிபுணரிடம் உதவியாளராக இருக்க மனுப் போட்டிருந்தாள். அதற்குப் பதில் வந்திருந்தது. அப்பாவிடம் அதைக் காட்டியபோது அவர் உற்சாகமாகப் பதில் சொல்லவில்லை.

என்னென்னவோ நினைவுகளை ஞாபகப் படுத்திக் கொண்டு, அதில் மனமும் செயலும் ஒடிந்து உட்கார்ந்திருந்தாள் சித்ரா.

அங்கே கண்ணாடிக்குமுன் மதுரம் நின்று கொண்டிருந்தாள். அவள் கை தன் கழுத்தில் பவுன் சங்கிலியை மாட்டி அழகு பார்த்து நெருடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் ஒரு கணம் பதைத்துப் போனாள் சித்ரா. விழிகளில் கண்ணீர் நடுங்கிற்று.

''என்ன காரியம் செய்கிறாய் நீ ? அது என் அம்மாவுடைய சங்கிலி !''

''உன் அப்பாவிடம் போய்ச் சொல்லு. இதை நான் ஒன்றும் எடுத்துப் போட்டுக் கொண்டுவிடவில்லை. புரிகிறதா?'' முகம் இன்னும் திரும்பக்கூட இல்லை.

உடல் முழுவதும் நடுங்க, தீப்பட்டாற் போல நின்ற அவளுடைய தோற்றத்தைக் கண்ணாடியின் பிம்பத்தில் பார்த்துச் சிரித்தாள் மதுரம். சித்ரா அங்கிருந்து ஓடி விட்டாள்.

அப்பா வீட்டில் இல்லை. வயலுக்குப் போயிருந்தார். திரும்பி வந்ததும் சாப்பிட்ட களைப்பில் தூங்கி விட்டார். மாலையில்தான் அவரை நிதானமாகச் சந்திக்க முடிந்தது. இறந்த மாடியில் ஈஸி சேரில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மார்பின் மேல் குறுக்



காகக் கைகளை மடித்தபடி அவருக்கு அருகில் நின்ருள் சித்ரா.

''இதில்.... தப்பு ஏதும் இல்லையே, சித்ரா ?''

'' நீங்கள் வேறே காக பணம் கொடுத் திருக்கலாம். அம்மாவின் சங்கிலியையா ? அதுவும் ஒரு சமையற்காரிக்கு?''

'' அவளை நான் ஒரு சமையற்காரியாக நடத்தவில்லை, சித்ரா.'' அவரது பதற்ற மின்மையைக் கண்டதும் அவளுக்கு ஓர் ஆவேசமே வந்துவிட்டது. ''அப்பா ! நீங்க இப்படி இருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை. உங்களை ரொம்ப உயர்வா எண்ணிக் கொண்டு, அந்த நினைப்பில் என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தேன். டில்லி யில் இரு ஆண்டுகள் நான் தனியே வசித் தேன். அப்போதெல்லாம் நான் திசைதப்பிப் போக எத்தனையோ வாய்ப்புகள். ஆனால் என்னுடைய வாழ்க்கைக்கு நீங்கள் வழி காட்டுபவராக, கற்றுக் கொடுப்பவராக, வேலியாக—''

'' சித்ரா. டோண்ட் பி ஸில்லி!''

'' நான் முட்டாள்தான் அப்பா. வேறு என்ன சொல்வது ? நான் திரும்பிப் போகி றேன். தில்லியிலிருந்து வந்திருக்கும் அழைப்பை ஏற்றுக் கொண்டு அங்கேயே வேலை யில் சேர்ந்து கொள்கிறேன். என்னைப் போக விடுங்கள்.''

தனது கடைசி அஸ்திரத்தையும் ஏதோ ஒரு துணிச்சலில், இறுதி முயற்சியாகப் பிர யோகித்துவிட்டாள் அவள்.

''மை டியர் கேர்ல்... அதுதான் உன் முடி வானல் நான் குறுக்கே நிற்கமாட்டேன். நீ வளர்ந்த பெண். நான் சொல்லித் தந்து நீ கற்றுக் கொள்ள வேண்டியதில்லை.''

இருள் மூடிவிட்டது. சில் வண்டுகளின் சப்தம். தூரத்தில் குட்டை ஓரம் தவளைகள் கொர கொரத்தன. சித்ரா அப்படியே சரிந்து உட்கார்ந்து விட்டாள். அப்பா மெழ எழுந்து போய்விட்டார்.

ஞாயிற்றுக்கிழமை கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் தில்லிக்கு டிக்கெட் வாங்கிப் பதிவுசெய்து விட்டதாகச் சென்னையிலிருந்து கடிதம் வந்துவிட்டது. வெள்ளிக்கிழமையி லிருந்தே சித்ரா சாமான்களைக் கட்ட ஆரம் பித்துவிட்டாள்.

'' உன்னுடன் நான் சென்னை வரையில் வந்து ஏற்றிவிட்டு வருகிறேன்'' என்று பட்ட தும் படாததுமாகச் சொன்னார் அப்பா.

'' வேண்டாம், அப்பா. நீங்க வீணு அலையாதீங்க ! உடம்பைப் பார்த்துக் கொள் ளுங்கள்'' என்று சொல்லும் போது சித்ரா வின் கண்ணும் உதடும் இழுத்துக்கொண்டன.

'' நெல் விற்ற பணம் வந்திருக்கிறது. ஐந்நூறு ரூபாய் எடுத்துக் கொண்டு போ. செலவுக்கு இருக்கட்டும்.''

'' வேண்டாம், அப்பா. எனக்கு அங்கே சம்பளம் உண்டு. நான் முன் பணம் கேட்டு வாங்கிக் கொள்வேன் !'' என்று சொல்லும் போது அவள் விழிகளிலிருந்து தைரியமான இரண்டு சொட்டுக் கண்ணீர் துளித்துப் 'பொட்'டென்று உதிர்ந்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை. கும்பகோணத் தில் எக்ஸ்பிரஸ் வண்டியில் ஏற்றிவிட வைத்தி வந்திருந்தான். வில் வண்டி தயாராகிக் கொண்டிருந்தது. சித்ரா மாடியில் நின்று கூந்தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். இளங் காலை வானத்தில் பொன்னிறப் பஞ்சு களாக மேகங்கள் திட்டு கட்டி இருந்தன. உடலைத் தழுவும் குளிர்காற்று.

அவள் கீழே இறங்கி வந்தாள். பூஜை அறையில் அம்மாவின் படம் மாட்டி இருந் தது. அதற்குமுன் நமஸ்கரித்து எழுந்தபோது அவள் கண்களில் குத்துவிளக்குச் சுடரின் பிரமை மின்னிப் பிரகாசித்தது. அம்மாவின் நினைவு மனத்தில் எழுப்பிய தூய்மையான நறுமணம். கண்களை மூடி அந்த ஞாபகத்தில் லயித்தவளாய் நின்ருள்.

'' டிபனைச் சாப்பிடு. ரயிலுக்கு நேர மாகிறது !''

மதுரத்தின் குரலைக் கேட்டுக் கண் விழித் தாள். அவள் கையிலிருந்த தட்டில் இட்டிலி ஆவி பறந்து கொண்டிருந்தது. கழுத்தில் மின்னிய அந்தச் சங்கிலி. அந்த முகம், பின்புலம் எல்லாமே மெல்ல அழிவது போல் இருந்தது சித்ராவுக்கு. திடீரென்று மதுரத் தின் மீது புலியாகப் பாய்ந்து அவளை நிலை குலையச் செய்து கழுத்துச் சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டாள் சித்ரா.....

சத்தம் கேட்டு உள்ளே ஓடி வந்த அப்பா சிலையாக நின்றார். மதுரம் எழுந்து நின்று ஒரு முறை அவரைக் கண்ணீர் சுரக்கும் பார்வையுடன் வெறித்துவிட்டு உள்ளே போய்விட்டாள். அவரைத் திரும்பிப் பார்க் காமலே உள்ளே போய், தயாராக வைத் திருந்த பெட்டியையும் ஹோல்டாலையும் தானே வாசலில் கொண்டு வந்து திண்ணை மீது வைத்தாள் சித்ரா.

வில் வண்டி புறப்பட்டுவிட்டது. அப்பா திண்ணை ஓரம் படியில், இடுப்பில் கையை வைத்துக் கொண்டு நின்றார்.

அவள் கண்களில் நீர் இல்லை. அப்பாவைப் பார்த்துத் தைரியமாகக் கையை வீசி அசைத்து ஆட்டினாள். நெஞ்சை அரிப்பது போன்ற வேதனை நீராவிப் படலம் மாதிரி உலர்ந்து தெளிந்து விட்டது.

வண்டி தெரு மூலை திரும்பிற்று. கடைசி வீட்டில் இரண்டு பெண்கள் திண்ணை ஓரமாக நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந் தார்கள். தோளைக் குலுக்கி ஒருத்தி மற்றவ ளிடம் ஏதோ இரகசியமாகப் பேசினாள். கை நீண்டு சுட்டுவிரல் அவளை அடையாளம் காட்டிற்று.

இரண்டு மாதங்களாக அவளுக்குப் புரி யாமல் இருந்த அந்தச் சுட்டுவிரலின் பாவனை அப்போது சித்ராவுக்குப் புரிந்தது. திடீ ரென்று அழுகை பொங்கி வர மடியில் முகத் தைப் புதைத்துக் கொண்டாள். அவளுடைய குலுங்கலுக்கு, வில் வண்டியின் அசைவு தாளமிட்டுக் கொண்டிருந்தது.

---



கேரளாவில் குட்டநாடு பகுதியில் இருக்கும் புளிங்குன்னு என்ற கிராமத்தில் ஒரு மிதக்கும் தபாலாபீஸ் துவக்கப்பட்டிருக்கிறது. இங்கு நிறைய உப்பங்கழிக் கால்வாய்கள் ஓடுவதால் இந்தப் படகு - தபாலாபீஸ் மக்களுக்கு மிக உதவியாக இருக்கிறது. போஸ்ட் மாஸ்டரே படகு ஓட்டுகிறார்!

- ''டைம்ஸ் ஆப் இந்தியா'' - ஸ்ரேஷ



சென்னை, மார்க்கெட்டிங் அட்வர்டைஸிங் அசோஸியேட்ஸ் பிரைவேட் லிட்.,டின் டைரக்டர் ஸ்ரீ *R.* நரசிம்மன் அவர்கள் குமாரத்தி சௌ. **மீராவுக்கும்**, *Madras Crime Branch, Deputy Superintendent of Police, P. M.* பத்மநாபன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **P. M. ரெங்கராஜுனுக்கும்** திருமலை (திருப்பதி)யில் சமீபத்தில் நடைபெற்ற திருமணத்துக்கும் அதையொட்டி மறுநாள் சென்னையில் நடைபெற்ற வரவேற்புக்கும் உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்



எம். என். தஸ்தூர் கம்பெனியைச் (M. N. Dastur & Co., Consulting Engineers) சேர்ந்த ஸ்ரீ T. V. S. ரத்னம் அவர்களின் குமாரன் **ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்திக்கும்**, ஸ்ரீ K. V. சுப்ரமணிய அய்யர் (Retd. Income-Tax Asst. Commissioner) அவர்கள் குமாரத்தி சௌ. **ராஜேஸ்வரிக்கும்** 2-6-76 அன்று சத்தியமங்கலத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. அதை ஒட்டி 5-6-76 அன்று பெங்களூரில் உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடந்த வரவேற்புக்கும் 19-6-76 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற வரவேற்புக்கும் உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்



மவுண்ட் ரோடு அஞ்சல் நிலைய அக்கவுண்டெண்ட் திரு லட்சுமிநாராயணனின் குமாரத்தி செல்வி **மல்லிகாவுக்கும்** பாண்டமங்கலம் கிருஷ்ணசாமி ஐயர் குமாரன் செல்வன் **யக்யராமனுக்கும்** சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



மாயூரம், ஸ்ரீ *S. N.* ஜெயராம அய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. **கமலாவுக்கும்** (ஓய்வுபெற்ற *Dy. Director, Tamilnadu Govt. Veterinary Services*) *Dr. A.* ராமச்சந்திர அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **R. சந்திரசேகருக்கும்** திருமணம் சமீபத்தில் மாயூரத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



சென்னை, பெர்டிலைசர்ஸ் லிட்., டின் டிஸ்ட்ரிபியூஷன் மானேஜர் ஸ்ரீ வி. எஸ். சங்கர் அவர்களின் குமாரர் செல்வன் சிவகுமாருக்கும் செல்வி கற்பகத்துக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



# வெறும் இட்லி வேண்டாம்!

துமிலன்

மதிப்புக்குரிய
இந்தியன் ஏர்லைன்ஸ்
நிறுவனத் தலைவருக்கு,

வணக்கம்.

விமானப் பயணங்களின்போது, பயணிகளுக்கு இட்டிலி வழங்கப்போவதாகச் செய்தி படித்தேன். வரவேற்கத் தக்க முடிவுதான் என்றாலும் என்னைப் போன்றவர்களுக்குச் சற்று வருத்தம் தரக்கூடிய முடிவும் கூட. ஏனெனில் காஞ்சிபுரம் இட்டிலியாகிய என்னை விட, வெறும் இட்டிலி எந்த வகையில் சிறந்தது என்று நீங்கள் எப்படி முடிவு கட்டினீர்கள்? என் சிறப்புக்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவதென்றால் குறைந்தபட்சம் ஒரு ரீம் பேப்பராவது தேவைப்படுமாதலால், சுருக்கமாகவே என் அருமை பெருமைகளைச் சொல்கிறேன்.

1. காஞ்சிபுரம் மகிமையை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். 'நகரேஷு காஞ்சி' என்று வடமொழிப் புலவர்களாலும் சிறப்பிக்கப் பட்டது நான் பிறந்த ஊர். அப்படிப்பட்ட ஊரின் பெயரை அடைமொழியாகக் கொண்டு அழியாப் புகழ் பெற்றவன் நான்.

2. காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளின் அழகிலும், கவர்ச்சியிலும் நம் நாட்டுப் பெண்மணிகள் மட்டுமின்றி அயல்நாட்டுப் பெண்டிரும் மயங்குவது உங்களுக்கே தெரியும். காஞ்சிப் பட்டு எப்படி மென்மை வாய்ந்ததோ அதற்குச் சற்றும் குறைவில்லாத மென்மை வாய்ந்தவன் நான். காஞ்சிபுரம் பட்டுப் புடவை உடுத்திய உங்கள் ஏர்-ஹோஸ்டஸ் ஏந்திழையாள் மென்மையே வடிவான என்னைத் தனது தந்தக் கரங்களினால் பரிமாறினால், பயணிகள் அத்தனை பேரும் அப்படியே குழைந்து உச்சி குளிர்ந்து போவார்கள் என்பது நிச்சயம்.


3. காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில்தான் பிரசித்தி பெற்ற ஒரு மாமரம் இருக்கிறது. அதன் கனிகள் உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, இனிப்பு ஆகிய நான்கு சுவைகளும் ஒருங்கே நிரம்பப் பெற்றது. இந்தச் சுவைப் பெருமைகள் அடியேனுக்கும் உண்டு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்படி என் குண நலன்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அடக்கம் காரணமாகத் தவிர்க்கிறேன். வெறும் இட்டிலியை ஒதுக்கிவிட்டு, என்னையே சிபாரிசு செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

காஞ்சி இட்டிலியார்

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு இந்தியன் ஏர்லைன்ஸ் தலைவர் இன்னொரு கடிதத்தை எடுத்தார், படித்தார்:





கோமான் அடித்த ஜோக்!

இங்கிலாந்து இளவரசர் ஃபிலிப் ஒரு கிராமத்துக்கு விஜயம் செய்தார். அங்கு இரண்டு வயதான பெண்மணிகளை அவருக்கு அறிமுகப்படுத்தினார்கள்: "அவர் வயது 104; இவருக்கு 101."

அந்த வயதான பெண்மணிகளிடம் இளவரசர் முறுவலுடன் சொன்னார்: "அப்படியா? ஆனாலும் பெண்கள் ரொம்ப மோசம். தங்கள் வயதில் எப்போதுமே பத்து வருஷம் குறைத்துத்தான் சொல்வார்கள்!" - லிடி சபர்பன் நியூஸ்-முத்து

---

அன்புள்ள ஐயா,

என்ன அக்கிரமம் இது! வெறும் இட்டிலிப் பயலுக்கு இப்படியொரு வாய்ப்பா — ஊரெல்லாம் விமானத்தில் பறக்க?... பொறாமையினால் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். உண்மையிலேயே இட்டிலிப் பயல் அவ்வளவாகத் தகுதி இல்லாதவன். சில சமயங்களில் கல்லுப் போல இருந்து தொலைப்பான்; வேறு சில சமயங்களில் குழைந்து போய்விடுவான்...அது மட்டுமின்றிப் புளிப்பதும் அவன் உடன் பிறந்த சுபாவங்களில் ஒன்று.

ரவா இட்டிலியாகிய அடியேன் மீது தங்கள் கடைக்கண் பார்வை படாதது ஏனோ தெரியவில்லை. என் சிறப்பு இயல்புகளைச் சொல்லட்டுமா?

1. மென்மையில் வெறும் இட்டிலிக்குச் சற்றும் குறைந்தவன் அல்ல நான்.

2. வெறும் இட்டிலியில் யாரும் முந்திரிப் பருப்பு போட மாட்டார்கள். ரவா இட்டிலிக்குத்தான் அந்தப் பெருமை உண்டு.

3. வெறும் இட்டிலி சற்றுக் காரசாரமான பேர்வழி. அதாவது மிளகாய்ப் பொடிதான் வெறும் இட்டிலிக்கு உற்ற தோழன். மிளகாய்ப் பொடிக்காகவே வெறும் இட்டிலியை விழுங்குபவர்களும் உண்டு. மிளகாய்ப் பொடி இல்லையேல் வெறும் இட்டிலி ருசிக்காது. ஆனால் என் விஷயமே வேறு. மிளகாய்ப் பொடி தேவையில்லை. சட்டினியே போதும். அது இல்லாவிட்டாலும், 'ஜாம்', 'கெட்சப்' ஆகியவற்றுடன் நான் பிரமாதமாகக் கூட்டு சேர்வேன்.

4. அரிசியின் தரத்துக்குத் தக்கபடி வெறும் இட்டிலி சில சமயங்களில் வெள்ளை வெளேரென்றும், பல சமயங்களில் சாம்பல் நிறத்துடனும் காட்சி யளிக்கும். ஆனால் நானோ என்றும் மாறாத பொன்னிற மேனி கொண்டவன்.

இவை போதுமென்று நினைக்கிறேன். — என்னை நீங்கள் சிபாரிசு செய்ய. தங்களது முடிவை மறு பரிசீலனை செய்து, வெறும் இட்டிலியை ஒதுக்கி, அந்த ஸ்தானத்துக்கு இந்த எளியேனைச் சிபாரிசு செய்யுமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

அன்புடன்
ரவா இட்டிலி

பின் குறிப்பு: காஞ்சீபுரம் இட்டிலி என்ற தடிப் பயல் வேறு உங்களுக்குச் சிபாரிசு பிடித்துக் கொண்டு அலைவதாகக் கேள்விப்பட்டேன். மென்மைக்கும் அவனுக்கும் வெகு தூரம். அவனைக் கிட்டே சேர்க்கவே சேர்க்காதீர்கள்.

---

## இவர் வேட்பாளர்...

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜிம்மி கார்ட்டர் வயது 53 உயரம் 5'10" எடை 160 பவுண்ட். கென்னடியைப் போல் சிரிக்கிறார். இவர் ஒரு விவசாயி, அணுசக்தி விஞ்ஞானி, வியாபாரி, அரசியல்வாதி. இவரைப் பற்றிச் சொல்லப்படுவது: இவரோடு பழகினால் இவரை 15 நிமிடங்களில் நேசிக்க ஆரம்பித்து விடுவார்கள். வெறுக்க 6 மாதங்கள் ஆகும். ஆனால் புரிந்து கொள்ள 10 ஆண்டுகள் பிடிக்கும்! நிறையப் படித்தவர். அழகாகப் பேசுவார். ஞாபக சக்தி அதிகம். சிரிப்பால் பலரையும் கவர்ந்து விடுவார். இம் மாதிரி அரசியல்வாதி சமீப காலத்தில் அமெரிக்காவில் இருந்ததில்லை என்கிறார்கள். மகாத்மா காந்தியைப்போல் மதத்தையும் அரசியலையும் கலந்து கொள்கிறார். இவருடைய ஹீரோக்கள், காந்தி, சர்ச்சில், ட்ருமன், டிகால். இவர் ஒரு நாளைக்கு 25 தடவை கடவுளை நினைக்கிறாராம். பிரார்த்தனை செய்கிறார்.

இவர் தாயார் இந்தியாவில் இரண்டு ஆண்டுகள் 'அமைதிப் படை.' சேவகியாக இருந்திருக்கிறார். மண்ணெண்ணெய் விளக்கிலும், கிணற்றுத் தண்ணீரிலும் வளர்ந்தவர், படித்தவர். கடற்படையில் பணியாற்றியவர்.

— இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி - பாபு

தமது தாயாருடன் கார்ட்டர்.



ஏ.எஸ். பட்

# அழகு வேண்டாம்!



அவன் முகத்தைப் பார்ப்பதற்கே வேடிக்கையாக இருந்தது. அவ்வளவு கோணல்! எல்லோரும் கேலி செய்தனர். அவன் ஆண்டவனைப் பிரார்த்தித்தான். கடவுள் இரங்கி, ''என்ன வரம் வேண்டும்?'' என்றபோது, ''என் தோற்றத்தை மாற்றி அமையுங்கள்'' என்று வேண்டினான்.

''அப்படியே செய்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை'' என்றார் ஆண்டவன்.

''என்ன?'' என்று கேட்டான்.

''நீ இப்போது உனக்குள்ள தோற்றத்தைக் கொண்டே லாபமடைய முயல வேண்டும். இதில் நீ வெற்றி பெற்று விட்டால் உனக்கு எழிலைத் தருகிறேன்.''

கடவுள் மறைந்தார். அவன் சிந்தித்தான். கோமாளித்தனம் செய்தால்தான் இந்த முகத்தை வைத்துக் கொண்டு சம்பாதிக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. அவ்வாறே அவன் கோமாளி யானான். தனது இந்தப் புதிய தொழிலில் அவன் ரொம்பப் பிராபல்யமும் புகழும் பணமும் அடைந்தான்.

கடவுள் பிரத்யட்சமானார். ''நீ என் நிபந்தனையை நிறைவேற்றினாய். உனக்கு அழகைத் தருகிறேன்'' என்றார்.

''வேண்டாம் சுவாமி! வேண்டாம்!'' என்று கெஞ்சினான் அந்த மனிதன்.

உலகப் பிரசித்தி பெற்ற கோமாளியாக அவன் ஏராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தான். இந்த அசட்டுக் களை போய் விட்டால் யார் தன் முகத்தைப் பார்த்துச் சிரிப்பார்கள்? பணம் எப்படிக் குவியும்?


எனவேதான் இப்போது ''அழகு வேண்டாம், ஆண்டவனே!'' என்றான்.

கடவுள் சிரித்து மகிழ்ந்தார்.

நீதி: (நீங்களே எழுதிக் கொள்ளவும்)

## குட்டிக்கதைகள்

# நாங்களும் இருக்கிறோம்!




மழை வரும்போல் இருந்தது. தவளைகள் ஏகமாகச் சத்தம் போட்டன. மழை கேட்டது: ''என்ன கூச்சல் இது?'' தவளைகள் பதிலளித்தன. ''உன் வருகையை அறிவிக்கிறோம்.''

மழை சொன்னது: ''அதற்கு அவசியம் இல்லையே. நீங்கள் கூறாமலேயே அனைவருக்கும் என் வருகை தெரிந்துவிடுமே.''

''அது சரி, நாங்கள் கூச்சல் போடவில்லையானால் எங்களை யார் கவனிப்பார்கள்? ஞாபகம் வைத்துக் கொள்வார்கள்? உன் வருகை நாங்கள் இருப்பதைக் காட்டிக் கொள்ள எங்களுக்கு ஒரு வாய்ப்பு'' என்று தவளைகள் ஒப்புக்கொண்டன.

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



# சேமிப்பதற்கு யூகோ பாங்க் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

நீங்கள் எங்கு இருந்தாலும் அங்கே உங்களருகில் ஒரு வசதியான யூகோ பாங்க் உள்ளது. சேமிப்பை எளிதாக்குவதற்காகவே. உங்களை வரவேற்கவும், உங்கள் சேமிப்பை வளரச் செய்யவும் நாடு முழுவதும் எங்கள் கிளைகள் பரந்து இருக்கின்றன.

விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள யூகோ பாங்க் கிளையை அணுகவும்

## யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-50A TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானம்

